
# உள்ளம்

கதிர்–02

ஐப்பசி, 2001

காலாண்டுச் சஞ்சிகை




கலை இலக்கிய சமூக இதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்ந்திருந்து........

# உள்ளம்

கதிர்: 02

வெள்ளை நிறப் பூவுமல்ல;
வேறெந்த மலருமல்ல;
உள்ளக் கமலமடி;
உத்தமனார் வேண்டுவது.

உள்ளமெனும் சங்கமிப்பில் உதிக்கின்ற கருத்துக்கள் மெல்ல எழுந்து, முற்றிக் கதிராகி மீண்டும் ஒரு அறுவடையில் உங்கள் முன்.

ஏட்டுச்சுரைக்காயல்ல கல்வி. சிந்தி, செயல்படு உன் உள்ளார்ந்த திறமைகளை வெளிப்படுத்தமுனை என்ற புதிய கல்விமுறைக்கு ஈடுகொடுக்க எமது மாணவர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் அர்ப்பண சிந்தையுடன் உள்ளம் வெளிவருகின்றது.

மிக நீண்ட இடைவெளிக்குப்பின் சென்ற சித்திரையில் வெளிவந்த சிறப்புமலர் சிறப்புற்றது என்றால் அது மிகையல்ல. அச்சடிக்கப்பட்ட மலர்களில் ஒரு சில பிரதிகள் தவிர ஏனையவை வாசகர்களாகிய உங்கள் கைகளில் கிடைத்திருக்கின்றது என்பது எமது கடினமான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்றே கருதுகின்றோம்.

மேலும் சிறப்புமலரினை சிறப்புற வெளியிட உதவிய அனைவர்க்கும் மற்றும் வெளியீட்டு விழாவில் கலந்து எமை ஊக்குவித்த பெருந்தகைகளுக்கும், பிரதிகளை விற்பனை செய்வதில் முன்னின்றுழைத்த எமது கழக அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க வார்த்தைகளைத் தேடுகையில் அதற்குப் பஞ்சம்தான் ஏற்பட்டது. அனைவர்க்கும் நன்றி, நன்றி, நன்றி......

காலாண்டுக்கு ஒருமுறை மொட்டவிழ்க்கும் உள்ளம் உங்கள் துணையுடன் மாதமொரு மலராய் மலர்ந்து மணம் பரப்பும் காலம் வெகு தொலைவில் இல்லை. மீண்டும் அடுத்த இதழ் மூலம் உங்களை மிகவிரைவில் சந்திப்போம்.

நன்றி கலந்த வணக்கங்களுடன்

உள்ளம் ஆசிரியர் குழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிட்டத்தில் அடிக்கலாமா?

பள்ளிகளிலும், வீடுகளிலும் அதிகமாகக் காணப்படும் பிட்டத்தில் அடித்தல் என்பது மோசமான ஒரு பழக்கமாகும். அமெரிக்கப் பள்ளிகளில் பிட்டத்தில் அடித்தல் 1974 இல் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளது. 75 சதவிகிதமான மனோதத்துவ நிபுணர்கள் இவ்வாறு பிட்டத்தில் அடிப்பதை எதிர்க்கின்றனர். எனினும் இப்போது 48 சதவிகிதம் பேர் தங்கள் பிள்ளைகளை பிட்டத்தில் அடிக்கின்றார்கள். 1995 இல் வெளியான அமெரிக்க மனோதத்துவ அறிக்கை ஒன்று பிட்டத்தில் அடிக்கப்படும் குழந்தைகளே பலவிதமான மனநோய்களுக்கு ஆளாகின்றனர் என்று தெரிவிக்கின்றது.

-நன்றி மனோரமா இயர் புக்-

## சுதந்திரம்

"செல்"போன பாதையில் சிறுகுருவி கூடுகட்டி
"டாங்கி"கிளறிய வயல்களில் பயிர் முளைவிட
கண்ணிவெடி வெடித்த கிடங்குகள் எல்லாம்
நீர்நிறைந்து நீலோற்பவம் மொட்டவிழ்க்க
இனிதாய் சுதந்திரம் மலர்ந்திடனும்

- வெண்புறா -




பிரசார மேடையில்
அரசியல்வாதி:-

மாணவர்களே!
அரசியலில் நீங்கள்
இனிமேல் ஈடுபடவே கூடாது.
ஏனெனில் நாங்கள் யாராவது
உங்கள் கல்வியில்
ஈடுபடுகின்றோமா?
சற்றுச் சிந்தித்துச்
செயல்படுங்கள்.

-முத்து-

உன்னோடு வேலை பார்த்தவனின் வியர்வை உலர்வதற்கு முன் அவனது கூலியைக் கொடு.

கடனோடு காலையில் எழுவதை விட பட்டினியோடு இரவில் படுப்பது மேல்.

எழுந்திரு! விழித்திரு! கருதிய கருமம் கைகூடும்வரை விழித்திரு.

மூடர்களின் நட்பில் உயிர் வாழ்வதை விட விவேகியின் பகைமையில் வாழ்வதே சிறந்தது.

மனிதனின் ஆறு அறிவுகள்

| | |
|---|---|
| உணர்ந்தறிவு | பார்த்தறிவு |
| சுவைத்தறிவு | கேட்டறிவு |
| முகர்ந்தறிவு | பகுத்தறிவு |

செயல்களுக்கு வித்தாக அமைவது மனதில் தோன்றும் எண்ணங்கள். மனம் சுத்தமாக இருந்தால் செயல் நல்ல வழியில் செல்லும்.

நீதி நூல்களை படித்தபின்பும் ஒருவன் முட்டாளாக இருக்கக் கூடும். அவற்றின்படி நடப்பவனே அறிவாளி. நோயுற்றவன் அதனைப் போக்கும் மருந்தின் பெயரை சிந்தித்து வந்தால் என்ன அது மட்டும் அவனுக்கு ஆரோக்கியத்தை கொடுத்துவிடுமா?

சுத்தமான மனச்சாட்சியைப்போல் நன்கு உறங்குவதற்கு உதவக் கூடிய சுகமான தலையணை எதுவும் கிடையாது.

உள்ளத்தினை அலங்கரிக்கின்ற
படைப்புகளிற்கு
படைப்பாளர்களே பொறுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை அருள்

சமயம் என்பது மனிதனுடைய அன்றாட வாழ்க்கை அலுவல்களிலிருந்து விடுவிக்கக்கூடிய ஒரு சிறந்த மார்க்கமாகும். இது இம்மை, மறுமை, வீடு மூன்றுக்கும் வழிகாட்டும். மனிதனுடைய புற வாழ்வுக்கு ஊணும், உடையும், ஊறையுள்ளும் தேவையாவது போல் அக வாழ்வுக்கு வழிபாடு தேவையாகும். இவ் வழிபாட்டைப் பல வகையிலும் வேறுவேறு காலங்களில் நடாத்தி வருகின்ற மரபு பல நூற்றாண்டு காலமாகப் பேணப்பட்டு வருகின்றது. சிவனைக் குறித்துச் சிவராத்திரியும், சக்தியைக் குறித்து நவராத்திரியும், முருகனைக் குறித்துக் கந்த ஷஷ்டியும், விநாயகனைக் குறித்து சதுர்த்தியும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. இவற்றில் நவராத்திரி தினங்கள் சிறப்பான தேவி வழிபாட்டு நாட்களாகும். இந் நாட்களில் உலக மாதாவாகிய பராசக்தியை வெவ்வேறு வடிவங்களில் வைத்து துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாகவும் வழிபடுகின்றோம்.

"தனந்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்ப ரென்பவர்க்கே
கனந் தரும் பூங்குழலாள் அபி
ராமி கடைக்கண்களே".

என்றார் அபிராமிப்பட்டர்.

மனித வாழ்க்கை செந்நெறியிற் கழிய வேண்டுமானால் அறிவும் பொருளும் வீரமும் நல்லோர் சேர்க்கையும் நமக்குத் தேவை. இவற்றை உலக மாதாவாகிய தாயே உலகத்தவர்க்கு வழங்குகின்றாள். 'அவள் தந்த அக்கமிவ் வுலகமெல்லாம்' என்று சித்தாந்தம் கூறுகிறது. நமது பேச்சும், மூச்சும் ஆக்கமும், ஊக்கமும், ஏற்றமும், தோற்றமும் அவளாலேயே வந்தமைந்துள்ளன. அவளே அருட்சக்தி. மாரிபோல் அவளருளை வாரி வழங்குகின்ற தெய்வம் அவள். அப்பனாகிய அவனும், அம்மையாகிய அவளும் ஒரு வடிவமே. ஒன்று அறிவுச் சொரூபம், மற்றது அன்புச் சொரூபம். சில இடங்களில் எம்பெருமானை 'அத்தா' என்று அழைத்துப் பாடிய நாயன்மார் வேறுசில இடங்களில் 'அன்னே' என்று பாடுகிறார்கள்.

"அன்னே அன்னே என்றும் சிலசமயம்
நின்னையே ஐயா ஐயா என்னவே
அலறிடும் சிலசமயம்"

என்றார் தாயுமானவர்.

அம்மையும் அப்பனுமாய் இறைவனை வழிபட்டே அடியார்கள் அருளமுதம் மாந்தினர். இறைவன் யோக வடிவிலேயும் தேவியுடன் இருந்தே அருள் பாலிக்கின்றான் என்பதை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

"நானும்என் சிந்தையும்
நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலும்
தாழ்சடையோன் ஆண்டிலனேல்"

என்பது அவர் கூற்றாகும்.

"மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்"

என்று பாடுகிறார் திருஞானசம்பந்தப் பெருமான். எனவே போக வடிவிலும், கோர வடிவிலும் யோக வடிவிலும் சிவமும் சக்தியும் இணைந்தே தொழிற்படும் என்பது புலனாகும். தேவியின் அருள் பெற்றவர்கள் பலர். கம்பர், காளமேகம், காளிதாசர், குமரகுருபரர், பாரதியார் போன்ற கவிஞர் பெருமக்கள் தேவியை வழிபட்டு புலமை பெற்று அரசரோடு

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

சரியாசனத் தகைமைக்குரியராயினர். பட்டர் தனது அபிராமி அந்தாதியில் தேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டினால் அடையும் பேறுகளை விளக்குகிறார்.

"சொல்லும் பொருளும் எனநட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுவார்க்
கே அழி யா அரசும்
சொல்லும் தவநெறி யும்சிவ
லோகமும் சித்திக்குமே"

எனவே நவராத்திரி நாட்களில் தேவியைக் கும்பத்திலேயும், பிம்பத்திலேயும் அமைத்து வழிபட்டு, வீரம், செல்வம், கல்வி என்பனவற்றைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

–சுபம்–



கார்த்தி:– அட! இது ஆரடாப்பா பொம்பிளயள் எங்களைவிட, டெனிம் போட்டு ரீசேட்டோட, சப்பாத்தும்.. ஏதாச்சும் வெளிநாட்டு நிறுவனங்களில இஞ்ச வேலை செய்யினமோ ?

விஷ்ணு:– அட இதே சங்கதி இவையள் வந்து அகதிகளெடா

கார்த்தி:– அகதியோ?

விஷ்ணு:– ஓமோம் வெளிநாட்டுக்குப் போன அகதிகள். மீளக் குடியமரும் பிளான் ஏதும் இல்லாம விழுந்த பனம்பழமும், பூழுக்கொடியலோட பனம்பாலும் பருகலெவல்லே பதறித் திரியினம்.

~தரன்~

## நான்கு "மை" கள்

பிரபல நடிகர் ஒருவர் பிரபல எழுத்தாளரைச் சந்தித்துத் தானும் ஒரு எழுத்தாளராக வர விரும்புவதாகக் கூறினார்.

எழுத்தாளரும் 'அப்படியாயின் அதற்கு நான்கு'மை'கள் வேண்டும்' என்றார்.

நடிகரும் 'அப்படியா என்ன நிறங்கள் வேண்டும் என்று கூறுங்கள் இப்போதே வாங்கி வருகிறேன் என்றார்.

நடிகரின் ஆர்வத்தை அவதானித்த எழுத்தாளர் சொன்னார் 'எழுத்தாளராக வர வேண்டியது நிற'மை'கள் அல்ல, வேண்டியவை தனி'மை', பொறு'மை', திற'மை', பேனா'மை' என்றார்.

நடிகரும் கேட்டுவிட்டு கடைசியாகச் சொன்னார்

உங்கள் யோசனை அரு'மை' என்றார்.

## கவிதை

அன்பு
என்ற தலைப்பில்
மிகச் சிறிய
கவிதை கேட்டார்கள் ....
அம்மா
என்றேன் உடனே!
கேட்டது
அம்மாவாக இருந்தால்
இன்னும் சின்னதாய்
சொல்வேன்
நீ...
என்று!

நன்றி.
ஆனந்த விகடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கோகிலா மகேந்திரன்**

பூவிதழ் உதிரச் சிரித்தது காடு!

கரடி, நரி, ஓநாய், பல்லி, பாம்பு என்ற பெரும்பான்மையான ஊனுண்ணி விலங்குகளெல்லாம் போட்ட 'ஓ' என்ற கும்மாளக் கூச்சலில் தாவர உண்ணிகளின் மனங்கள் வெந்து, நொந்து போயின. ஆனால் அவை கைதட்டாமல் இருக்க முடியாது. ஏனெனில் சிங்கராஜாவுக்குக் காடெல்லாம் செவி! காட்டுத் தாவரமெல்லாம் கண்!

தொட்டாற்சுருங்கி இலைகளைத் தொடுவதும், விடுவதுமாய் இருந்த பூனைகள், உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டன. சிறுபான்மைத் தாவர உண்ணிகள் சத்தம் கேட்டும் கேளாமலும் மெதுவாகக் கைதட்டுவதை!

ஆடு, மாடு, முயல், வெட்டுக்கிளி, எலி, கங்காரு, கிளி எல்லாம் பாலத்தாரான விலங்குகள்! ரூர்க்கத்துடன் தாக்கவோ, யுத்தம் செய்யவோ பழகிக்கொள்ள முடியாத பாவி விலங்குகள். அவற்றினால் இந்த நீண்டகாலக் கெடுபிடி, இடிகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

பூனைகள் இடையிடையே சிங்கராஜாவின் குகைக்குக் கல்லெறியத் தொடங்கின. ஆடுகளும் கல்லுப் பொறுக்கித்தர வேண்டும் என அமுத்தின. அதன் பின்னர் ராஜாவின் அட்டகாசம் அதிகமாயிற்று.

இப்போது காட்டில் வறுமை!

உணவு வறுமை இல்லை, உணர்வு வெறுமை!

இந்தத் தாவர பட்சணிகளால் செய்யக் கூடிய ஆகக்கூடிய போராட்டம் ஊர்வலம் போதல்!

இன்று காலையில், காட்டின் பனி விலகமுன்னரே, அவை புறப்பட்டிருக்கின்றன. எல்லோரும் வரிசையாய், ஒருவர் பின் ஒருவராய்.......!

"யுத்த மென்ற சத்தமிங்கு ஓய்ந்து விடவேண்டும்"

"யுகங்களிலே அமைதி நிலை தொடர்ந்து வர வேண்டும்"

"விலங்குகளைப் பிடித்துச் செல்லல் தவிர்க்கப்பட வேண்டும்"

"வேலியே பயிரை மேய்தல் விலக்கப்பட வேண்டும்"

கோஷங்கள் காதில் விழுகையில் மனங்கள் தவித்துக் கனக்கின்றன.

அவற்றின் கோஷங்களில் உற்சாகத்தை விடப் பரிதாபமே அதிகமாக வெளிப்பட்டது.

'தேறுதல்' என்ற பனித்துளிக்கு இந்த விலங்குகள் தாகமாய்த் தவிப்பது துல்லியமாய்த் தெரிந்தது.

அவற்றின் காட்டு ராஜாவான சிங்கத்தினால் அவை திட்டமிட்டுக் கொல்லப்படும் நிலையில், அவற்றுக்கு தேறுதல் சொல்பவர் யார்?

அவற்றின் பார்வைகள் இருள்வெளியை ஊடுருவுகின்றன. யாராவது....... எந்தக் காட்டில் இருந்தாவது..... எந்த நாட்டில் இருந்தாவது..... எந்தக் கோளில் இருந்தாவது...... எந்த நட்சத்திரத்தில் இருந்தாவது... எந்த நெபுலாவில் இருந்தாவது... யாராவது உடனே உதவி செய்ய மாட்டார்களா?

இன்று காலை விடிவதற்கு முன் வந்த பயங்கர இரவில்.... சிங்கராஜாவின் ஏவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கணக்கில் குரங்குகளையும், மான்களையும், அணில்களையும் பிடித்துச் சென்றன. அவற்றின் சடலங்கள் எந்தக் குளத்திலும் மிதக்கலாம். எந்த மரத்திலும் தொங்கலாம். மரணத்தின் பறை ஒலிகள் சில்லென்று நெஞ்சைத் தா க்கும் சம்பவங் களைச் சகித்துக் கொள்ள முடியாமல் தான்....

நாள்தோறும் நடை பெறும் இத்த நிகழ்வுகள் அந்தக் காட்டில் நிலவிய அமைதியின்மை மின் வயதைக் கூட்ட உதவின.



அன்பரசன்:- அந்த ரைவிங் லைசென்ஸ் எக்சாமினரோட என்னடா தகராறு?..

பாலா:- அது ஒண்டுமில்லை மோட்டார் சைக்கிளிலே எட்டு அடிக்க மாட்டன் எண்டு அந்தாள் நிக்குது.

அன்பரசன்:- ஏனாம் வடிவாய் ஓடத் தெரியாதே?...

பாலா:- இல்லையில்லை எட்டு எண்ட இலக்கம் சாத்திரப்படி அபசகுணமாம், வேற ஏதாவது இலக்கம் சொல்லச் சொல்லி நிக்கிறார்.

-தரன்-

சுனை ஒன்றின் அருகே வந்த ஊர்வல விலங்குகள் உடலைப் புற்றரையில் எறிந்து படுத்தன. மனதின் சஞ்சலங்களை அப்படி எறிந்துவிட முடியவில்லை.

பறந்து வந்த செவ்வுடற் பூங்குயில் ஒன்று தான் பக்கத்துக் காட்டில் இருந்து வருகிறேன் என்றது.

"உங்களுக்கு ஆர் ராசா?" கேட்டது பூனை

"......பாம்பு....."

"அங்கை ராச்சியம் எப்படி?".

"இப்படித்தான் கன பிரச்சினையள்...".

"எங்கடை பிரச்சினையைப் பற்றி அவருக்குத் தெரியுமோ?".

ஆவல் நிறைந்து கேட்டது பூனை.

"தெரியும்".

"சிங்கராஜா செய்யிறது அக்கிரமம் என்டு சொல்லுறார்".

பூனைக்கு அடுப்பிலே பாலைக் கண்ட புளுகம். மற்ற விலங்களுக்கும் அதே நிலை!

"உனது சொந்த வீட்டின் வாசற்படி துப்பரவின்றி இருக்கும்போது, உனது அயல் வீட்டுக்காரனின் வீட்டுக்கூரை மேல் பனி படர்ந்திருக்கிறது என்று நீ முறைப்பாடு செய்யாதே" என்று கூறப்படுவது பற்றிப் பாம்பு படித்திருக்குமோ? இல்லையோ?

இரவெல்லாம் வாடை மழை உலுக்கிற்று. நித்திரையுமின்றி, விழிப்புமின்றி மோன நிலையில் இரவு நகர்ந்தது.

காலை விடிந்தது!

சுனையின் அல்கா படர்ந்த பச்சை நிற நீருக்குக் கவலைகள் இல்லை. ஆனால் சுருக்கங்களை அதற்குக் கொடுத்துப்பார்த்து மகிழ்ந்தது காற்று. ஊர்வலம் தொடர்ந்தது.

திடீரென்று மேலே படபடவென்று சத்தங்கள்! அச்சமடைந்த விலங்குகள் தலையை நிமிர்த்திப் பார்த்தன.

கீழை அடிவானைக் கீறியபடி கிளைவிட்டு மின்னல் பொறி ஒன்று தோன்றி மறைந்தது.

காகங்கள் சில வானில் தென்பட்டன, அவற்றின் சொண்டுகளில் காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சித் துண்டுகள் பொலுபொலுவென்று கீழே விழுந்தன.

"பாம்பு ராஜா உங்களுக்கெண்டு குடுத்தனுப்பினது பணியாரம்... சாப்பிடுங்கோ... பாவம்.. பட்டினியா ஊர்வலம் போறியள்..."

"நாங்கள் ஒருத்தரும் மச்சம் சாப்பிடுறேல்ல' என்பதைச் சொல்ல யாரும் விரும்பவில்லை. 'பணியாரம்' என்றுதானே சொல்லப்பட்டது! இறைச்சித் துண்டுகளை யாரும் தொட்டுப் பார்க்காத போதும் மனதிலே ஒரு உற்சாகம்..."

அட... எங்களைப் பாவம் எண்டு சொல்ல... ஆரோ இருக்கினம்.....

'ரேஜினேல்' என்ற பிரபல ரஷ்ய எழுத்தாளர்.... நாகரிக உலகின் மேதை எனக் கணிக்கப்பட்டார். "நான் வீட்டில் இரவுச் சாப்பாட்டிற்கு காலந்தாழ்த்தி வருகிறேனா இல்லையா என்பது பற்றிக் கவலைப்பட ஒரு பெண் எங்காவது இருப்பாளாயின்..... நான் எனது நூல்கள்.. எனது மேதைத்துவம் எல்லாவற்றையும் 'இழந்துவிட ஆயத்தமாய் உள்ளேன்" என்றார்.

ஆம், யாரோ எங்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் என்ற உணர்வு தரும் ஆறுதல் விபரிக்க முடியாத ஒன்று!

கொட்டாவி ஒன்று உருவாகி வாயைப்பிளக்க வைத்த பெருமையுடன், ஆட்டின் வாயில் இருந்து விடை பெறுகிறது.

"ஏன் கொட்டாவி விடுறாய்? எத்தினை தாவரம் நிக்குது காட்டில? இறைச்சி தின்னப் போறியே?"

கங்காரு தன் வயிற்றுப் பையில் மூன்றங்குலக் குட்டியைக்காவியபடி ஆட்டை உலுப்பியது.

பக்கத்துக் காட்டின் பாம்பு ராஜா உதவி செய்ய ஆயத்தமாகிறார் என்றவுடன், விலங்குகள் ஊர்வலத்தைக் கைவிட்டுப் பக்கத்துக் காட்டின் எல்லையைப் பேராவலுடன் பார்க்கத் தொடங்கின.

"பாம்புப் படை வருகுதாம்".

"பாம்புகள் சிங்கப் படையைக் கடிச்சுப்போடுமாம்".

"இனிமேல் எங்களுக்குப் பயமில்லையாம்"

வதந்திகள் வாயு வேகத்தில் பரவின.

"உங்களுக்கு உங்கடை காட்டில பாதுகாப்பில்லையோ?"

"ஓம்"

"சரியாய்க் கஷ்டப்படுறியளோ?"

"ஓமோம்....."

"ஆரும் கட்டாயம் உதவி செய்யத்தான் வேணுமோ?"

"கட்டாயம்!"

"சரி நாங்கள் வாறம்!"

விடைகள் யாவும் ஓமென்று வரக்கூடிய முறையில் கேள்விகளை அமைக்கும் சோக்கிரட்டீஸின் முறை இங்கு பெருவெற்றி பெற்றது.

பாம்பு சிங்கத்திடம் போயிற்று.

"உன்ரை காட்டில அமைதி இல்லை?"

"ஓம்..."

"உனக்குப் பூனையள் கரைச்சல் தருதுகள்"

"ஓமோம்"

"உன்னால சமாளிக்க முடியேல்ல...?"

"நிச்சயமாய்!"

"எந்த நாளும் ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும்"

"உண்மைதான்!"

"சரி, நான் வந்து சமாளிச்சுத் தாறன்"

ஒத்துணர்வுச் சீர்மிய முறை அங்கும் வெற்றி பெற்றது.

உயிர்ப்பூ எடுத்து, ஒரு மாலை தொடுத்து, விழிநீர் தெளித்து, ஒரு கோலம் போட்டுப் பாம்புகளை வரவேற்றன, இந்தச் சாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள்.

பாற்கடலில் இருந்து அமுதம் மட்டுமே வரும் என்ற அங்கலாய்ப்புடன் கூடிய எதிர்பார்ப்பு.

பாம்புகள் வந்தன.

பெரும் எண்ணிக்கையில் வந்தன. பெட்டி படுக்கையோடு நீண்டநாள் நிற்க ஆயத்தமாய் வந்தன.

ஆயிரக்கணக்கில் அவை வந்து இறங்கும் அழகைப் பார்த்து அதிசயித்து நின்றது காடு.

"இனிமேல் நாங்கள் நிம்மதியாய் மூச்சு விடுவம்...."

என்ற நினைப்புடன் உடல் மயிர்கள், செதில்கள் அல்லது இறகுகள் பறக்கச் சுகமான கனவுகளில் மூழ்கியபடி தூங்கிப்போயின தாவர உண்ணிகள்.

ஈக்களைப் பிடிக்கத் தேன்துளி போடப்படுகிறதென்று யார் நினைத்தார்கள்?

நாசப்புற்றில் இருந்து வேஷச் சர்ப்பங்களும் தலைநீட்டும் என்று யார் எதிர்பார்த்தார்கள்?

கள்ளியும் முள்ளியும் காதல் வளர்த்த காட்டிலே கிள்ளிப் பிடிக்க இடமின்றி நிறைந்தன பாம்புகள்.

திரும்பிய இடமெல்லாம் பாம்புகள்.

கால் மிதிக்கும் இடமெல்லாம் பாம்புகள்.

"உங்களைப் பாதுகாக்கப் போறோம்" என்று கூறிவந்த பாம்புகள், சிங்கராஜாவின் குகையில் கையெழுத்துப் போட்டன.

அப்போதுதான்......

நெஞ்சில் ஒரு வலி! புத்தியில் ஒரு வேதனை!

நன்மையும் தீமையும் எண்ணங்களைப் பொறுத்ததா?

"நாப்பத்தெட்டு மணித்தியாலத்தில எல்லாம் முடியும்"

என்று விஷம் கக்கிப் புறப்பட்டன பாம்புகள்.

தணல் ஊதப்பட்டது. சருகுகள் பற்றத் தொடங்கின. அகப்பட்ட விலங்குகளை அடிபோட்டு வீசின. அடியோடும் அழித்தன. கோட்டில் விட்டன. கீறியும் கிழித்தன.

பூனைகளைத் துரத்தின. பூனைகள் உறப்பில் ஏறிவிட்டபோது, புள்ளிமான்களை விழுங்கி ஏப்பம் விட்டன. எலிகளைக் கொண்டு போனால் பூனைகள் வரும் என்றன. பெண் விலங்குகளை விஷப் பற்களால் பிறாண்டி வீசின.

இலைகூட அசையாத புழுக்கம் மனதில் நிரம்பிற்று. "ஏன் இந்த அநியாயம்? யார் இந்தப் பசுக்கன்றை இப்படிக் கொன்று போட்டது? மனுநீதி கண்ட சோழனின் கதையை இவர்கள் கேள்விப்பட்டது கூட இல்லையா?" என்று கேட்டவர்க்கெல்லாம்

"பசுக்கன்றையா? கொன்றதா? அது..... உங்கள் வீட்டுப் பூனையல்லவா கொன்று போட்டது? நீங்கள் ஏன் பூனைக்குச் சாப்பாடு போட்டனீங்கள்?" என்று கூறின.

மார்பின் நடுக்குழியில் வலி "விண் விண்" என்று தெறித்தது.

"இந்தக் காட்டின் விலங்குகளுக்கு நாங்கள் நல்ல தண்ணீர் விநியோகம் செய்கிறோம்" என்று கூறிக்கொண்டு காட்டைச் சுற்றிச்சுற்றி வந்தன.

நியாயத்துக்கு விலை அதிகம்! ஏழைகளால் வாங்க முடியாது. சட்டம் என்பது வசதி படைத்தோருக்கு மட்டும் வழங்கப்பட்ட சௌகரியம். யாரிடம் நீதி கேட்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்ற நிழலிலேயே குற்றுயிராய்ச் செத்துக் கிடந்தது நீதி. வழக்கமாய் இந்தக் காட்டிலே பட்டொளி பவனிவரும் பௌர்ணமி நிலவு கூடச் சின்ன மேக இடைவெளி யன்னலிலே சிறைபட்டுக் கிடந்தது.

அழமுடியவில்லை.

ஆத்திரமும் வரவில்லை.

"கடவுளே" என்று துவளத்தான் முடிந்தது.

"கண்டு பிடி... உனக்குள்ளிருந்து ஒரே ஓட்டமாய் ஓடிப்போய்விட்ட மனச்சாட்சியை...." என்று பாம்பிடம் சொல்லவும் துணிவு யாருக்கும் இல்லை.

வெள்ளத்தில் விழுந்தவன் முள்ளு வேலியை எட்டிப்பிடித்த கதையாகிப்போன பின்னர்,

மனதின் வேதனைக் குழம்பில் அழுந்தி அழுந்தி, ஆற்றாமையுடன் வெளிவந்தன பெரு மூச்சுக்கள் பல. மீண்டும் ஊர்வலம் போயின விலங்குகள். சிங்க ராஜாவின் குகைக்கு நேரே சென்றன.

படீர் படீர் என்று தடித்த மழைத்துளிகள் அங்கும் இங்கும் சொட்டுச் சொட்டாய் விழுந்து தெறித்த ஒரு காலைப்பொழுதில்,

"எத்தனையோ நாளாய்த் தூக்கம் இல்லை. வந்தாலும் திடும் திடும் என்று முழிப்போடு வரும் தூக்கமாய் இருக்கிறது. இந்தப் பாம்புகள் இருக்கும் வரை இங்கு நிம்மதி இல்லை...." என்றன.

என்ன நினைத்ததோ? சிங்கம் திடீரென்று,

"பாம்புகள் எல்லாம் உங்கடை காட்டுக்குத் திரும்பிப் போங்கோ..." என்று உத்தரவு போட்டது. "என்ரை காட்டு விலங்குகளை நான் பார்த்துக் கொள்ளுறன், நீ போ" என்றது.

"நல்ல கதை இது, நீளமில்லை எண்டானாம். நான் போனால் உன்ரை காட்டில இருக்கிற அப்பாவி விலங்குகளிற்கு ஆர் காவல்?" என்று கேட்டது பாம்பு

"நீயும் நானும் ஏன் பாம்பாய்ப் பிறக்கேல்ல?" என்று கேட்டது ஆடு.

"உன்ரை தாயும் என்ரை தாயும் பாம்பாய் இல்லாத படியால்...." என்றது புள்ளிமான்.

பாம்பு விஷந்தான்..... விஷம் தொண்டையில்..... வாந்தி எடுக்க....?



தரகர்:- பொண்ணுக்குச் சீதனமாய் என்ன குடுப்பியள்

தகப்பன்:- யாழ்ப்பாணத்தில கிளியரன்சோட பிளேன் ரிக்கட்.

-தரன்-

மிதமாக வம்பளப்பவர்கள் குணத்தில் சமநிலை உள்ளவர்கள். வம்பே அளக்காதவர்கள் பிறரிடம் சந்தேகமும், அவநம்பிக்கையும் கொண்டவர்கள். ஓயாமல் வம்பளப்பவர்கள் மூளைக் கோளாறு உடையவர்கள் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கூற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சில விபரங்கள்

சர்வதேசக் கோட்பாடுகளுக்கமைய மக்கள் நலனில் சிறுவர் சிறுமியர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கும் இந்த உலகில் வாழும் உரிமை உண்டு என்ற உண்மையை எல்லோருக்கும் தெரிவிப்பதற்காக இலங்கையிலே ஒரு சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக்குழு அமைக்கப் பட்டது. 3 ஆண்டுகளுக்கு முன்பு திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்து மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கினை நடாத்தி இலங்கையைப்



## து.வைத்திலிங்கம்
**(மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்)**

பொறுத்தவரை ஒரு பொதுவான கருத்தைப் பரப்ப வேண்டுமென்ற வகையில் இந்தக் கருத்தரங்கு நடந்தது. ஏற்கெனவே தேசிய மட்டத்தில் சிறுவர் நலன்காக்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் மாகாண மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் குழு அமைக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டன. அதன் பின் யாழ் மாவட்டத்திலே அரச அதிபர் தலைமையிலே சிறுவர் உரிமைகள் தொடர்பான கண்காணிப்புக்குழு ஆரம்பிக்க-பட்டது.

இக்குழுவில் அரச அதிபர் தலைவராகவும், ஒவ்வொரு பிரிவு பிரதேச செயலர்களும், கல்வி அதிகாரிகளும், சட்டத்தரணிகளும், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்து 2 மாணவ மாணவியர்களும் இக்குழுவில் இடம் பெற்றனர். யாழ்ப்பாணத்திலே சகல பிரிவுகளிலும் உள்ள சிறுவர் சிறுமியர் நிலைகளை பூரணமாக அறிய வேண்டுமென்ற நோக்கில் யுனிசெப் நிறுவனம் இந்தக்

> சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் சமயங்களில் அவர்களைப் பாதுகாக்க அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம் 2235 அல்லது 2236

குழுவுக்கு பூர்வாங்க நிதி உதவியை வழங்கியது. அதன் பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் கிராம மட்டத்தின் கீழ் அமைத்த குழு பின்பு ஒவ்வொரு கட்டம் கட்டமாக சிறுவர் சிறுமியர் பற்றிய ஒரு பூரணமான அறிக்கை ஒன்றைத் தயாரித்தன.

ஒவ்வொரு மாதமும் இக்குழு பல திட்டங்களை ஆராய்ந்து வருகின்றது. பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவற்றுக்குரிய வழிமுறைகளை நடை-முறைப்படுத்தி வருகின்றது.

சிறுவர்களுக்கு ஒரு ஸ்தாபனத்தில் அல்லது பாடசாலைகளில் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களில்கூட அநீதி இழைக்கப்படும் போது, அது பற்றிச் சிறுவர் நலன் காக்கும் பிரிவுக்கு அறியத்தந்தால் உடனடியாகச் செயற்பட்டு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகளை மெற்கொண்டு வருகின்றோம். அண்மையில்கூட இவ்வாறு சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் நடந்தபோது இக் குழுவிற்கு செய்தி வந்தது. அப்போது நாங்கள் அவற்றை சட்டத்தின் முன் கொண்டு வந்துள்ளோம். பெருமெடுப்பிலே செய்ய முடியாது விட்டாலும்கூட ஆரம்ப முயற்சியாக நாம் இதைச் செய்து வருகின்றோம். சில இடங்களிலே சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், வேலைக்கு ஏற்ற கூலி வழங்காமை, கடுமையான வேலைகள் செய்யச் சொல்லிக் கொடுத்தல் போன்றவற்றை இக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கூட அவற்றிற்கு நீதியான முறையில் பரிகாரம் காணலாம். இப்போது சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்தும்கூட பெருமளவில் இதைச் செய்ய முடியாதுள்ளது. மக்களுடைய ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்கும் பொழுது இக் கண்காணிப்புக் குழுவினால் பல பணிகளைச் செய்ய முடியுமென நம்புகிறோம்.

அண்மையில் ஐ.நா.சபை அதிகாரியான ஒலுரா ஒட்டுண்ணே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது, எமது பணிகளை பாராட்டிச் சென்றுள்ளார். மாவட்ட மட்டங்களிலே யாழ்ப்பாண மாவட்டம் சிறப்பாகத் தனது பணிகளைச் செய்து வருவதாக பாராட்டுத் தெரிவித்துள்ளார்.


சிறுவர்களின் நலனில் அக்கறை செலுத்தி சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கத் தொடர்ந்துபணியாற்றுவோம்.

சில இடங்களில் பாடசாலைக்கு சிறுவர் சிறுமியர் செல்வது பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுள்ளது. பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் பாடசாலைகளுக்குச் செல்வது தடைப்பட்டுள்ளது என்ற விடயம் கண்டறியப் பட்டபோது, ஒவ்வொரு பிரதேச செயலருக்கும் வசதியற்ற சிறுவர் சிறுமியருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் பெறுவதற்கான செலவை மேற்கொள்ள நிதி ஒதுக்கப்படடன.

சத்துணவு வழங்கல், கோல உடைகள் வழங்கல், பாடப்புத்தகங்கள் வழங்கல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டன. சில பாடசாலைகளில் அபூர்வமாக அதிபர்களால் சிறுவர் சிறுமியர் கடுமையான முறையில் தாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், சம்பவங்களுக்குப் பொறுப்பாய் இருந்தவர்களைச் சட்டத்துக்கு முன் கொண்டுவர இக்கண்காணிப்புக் குழு வெற்றி பெற்றது.

பாடசாலைக்குச் செல்லாதிருந்த சிறுவர் சிறுமியர் சில பிரிவுகளில் அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து பாடசாலைக்குச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுவர் உரிமைகள் மீறப்படும் போதும், துஷ்பிரயோகங்கள் நடக்கும் போதும் அவற்றை இக்குழுவுக்கு உடன் அறிவிக்க விரும்புவோர் தலைவர், **சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழு, செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு தெரிவிக்கலாம். **தொலை பேசி இலக்கங்கள், 2235, 2236** ஆகிய இலக்கங்கள் மூலமும் தொடர்பு கொள்ளலாம்.



ஒருவர்:பத்து வருடங்களாக பத்திரிகைகளுக்கு எழுதுகிறேன் ஆனால் இண்டைக்குத்தான் தெரியுது எனக்கு சரியாக எழுத வராது என்று.

மற்றவர்: அப்போ எழுதுவதை நிறுத்தி நிம்மதியாக இருங்களேன்.

ஒருவர்: அது எப்படி இப்போது நான் பெரிய எழுத்தாளராகப் புகழ் பெற்றுவிட்டேனே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சூழல்
# அவுஸ்திரேலியாவிலும் இலங்கையிலும்.

மாலை மயங்கும்வேளை! அடிலெயிட் (Adelaide) நகரத்தின் ரண்டல் மால் (Rundle mall) எனும் பிரசித்தி பெற்ற கடைத் தெருவின் ஊடாக நடந்து கொண்டிருக்கிறேன். திடீரென்று அருகே "ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்?" என்று (ஆங்கிலத்தில்) ஒரு குரல்.

குரலுக்குரியவரைத் திரும்பிப் பார்க்கிறேன். அவர் எனது நண்பரோ, உறவினரோ அல்ல. ஆயினும் அவர் யார் என்பது எனக்கு ஓரளவு புரிகிறது. "நான் சார்லி" என்று கூறிக்கொண்டு அவர் எனது கையைப் பற்றிக் குலுக்குகிறார். நானும் எனது பெயரைக் கூறுகிறேன். எனது கையில் இருக்கும் இரவு உணவுப் பார்சலைப் பார்த்த வண்ணம் அவர் தனது விடயத்துக்கு வருகிறார்.

"நான் மிகவும் பசியாக இருக்கிறேன். எனக்கு உதவி செய்வீர்களா? தயவு செய்து எனக்கு உதவுவீர்களா?"

நான் பதில் பேசாமல் எனது கையில் இருந்து பிஸ்ஸா (Pizza) பெட்டியைத் திறந்து ஒரு பிஸ்ஸாவை அவருக்கு எடுத்துக் கொடுக்கிறேன்.

"ஒன்றா, இரண்டா?" என்று கேட்டபடி அவர் பெட்டிக்குள்ளே கையை வைக்க முயலுகிறார். "ஒன்றுதான், நானும் பசியாக இருக்கிறேன்" என்று கூறுகிறேன்.

"நன்றி, மீண்டும் சந்திப்போம்" என்று கூறிவிட்டுப் பிஸ்ஸாவை மென்றபடி அவர் வேகமாக நடக்கிறார்.

ஆம்! அடிலெயிட் நகர வீதிகளிலே திரிகின்ற பல அவுஸ்திரேலியப் பிச்சைக்காரர்களில் அவரும் ஒருவர்!

பல்கலைக்கழகத்தில், ஏன் அவுஸ்திரேலியா–விலேயே காலடி எடுத்து வைத்த இரு வாரங்களுக்குள் என்னிடம் என்ன இருக்கின்றது என்று எனக்கே தெரியாத நிலையில், என் கையில் இருந்ததை அவுஸ்திரேலியர் ஒருவர் யாசித்த அபூர்வமான நிகழ்வு இது.

தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தின் தலைநகரமாகிய அழகிய அடிலெயிட், தன்னைத் திட்டமிட்டு வடிவமைத்த இராணுவப் பொறியியலாளரின் மனைவியின் பெயரைத் தனக்கு இட்டுக் கொண்டது. ஆள்கூற்றுத் தளத்தில் உள்ள கோடுகள் போல, நேராகவும், குறுக்காகவும், ஒன்றையொன்று செங்கோணத்தில் வெட்டிச் செல்லும் வீதிகளைக் கொண்டது அடிலெயிட்.

நகரை அணைத்துச் செல்லும் 'ரொறன்ஸ்' (Torrens) ஆற்றங்கரையிலே மனோரம்மியமான சூழலிலே, நிமிர்ந்து நிற்கின்றது அடிலெயிட் பல்கலைக்கழகம். நகரின் வடக்குக் கோடியில் உள்ள 'நோத் ரெறஸ்' (North Terrace) ற்கும், (இதை நாங்கள் அடிலெயிட்டின் X அச்சு என்று சொல்வோம்) ரொறன்ஸ் நதிப் படுக்கைக்கும் இடையில் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் அமைந்திருக்கிறது. ஏனைய மூன்று வளாகங்களும் புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ளன. பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத் திடல்களும் புறநகர்ப் பகுதியிலேயே அமைந்துள்ளன.

அதற்கும் அப்பால், மாணவர்கள் தங்கிக் கல்வி கற்பதற்கான கல்லூரிகள் (Residential Colleges) அழகிய

**ம.பிரவீணன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காக்களுக்கும், தேவாலயங்களுக்கும் மத்தியில் அமைந்துள்ளன. அடிலொயிட் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள ஆறு வதிவிடக் கல்லூரிகளில், ஐந்து கல்லூரிகள் பட்டப்படிப்பு மாணவர்களையும், மற்றொரு கல்லூரி பட்டப்பின் படிப்பு மாணவர்களையும் கொண்டது. வெறுமனே வதிவிடத்தை வழங்குவதற்கு அப்பால், ஒவ்வொரு கல்லூரியும் ஒரு தனித்துவமான சமூகமாக விளங்குகின்றது.

ஒரு மத்தியான வேளை, தனிமை உணர்வும், அலுப்பும் வாட்ட, நான் பல்க-லைக்கழகத்தில் இருந்து அறைக்குத் திரும்பி வந்த போது, அறைக் கதவில் ஒரு துண்டு ஒட்டப்பட்டிருந்தது. அதில், 'நீ இருக்கும் இடம் இப்போது எனக்குத் தெரியும். அன்புடன் கே.கே....' என்ற ஆங்கில வாசகங்கள் இருந்தன. யாரோ ஒருவர் என்னைப் பார்ப்பதற்காக வந்து, நான் அறையில் இல்லாததால், இந்தத் துண்டை

## ஓர் அறிமுகம்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் திறமைமிகு மாணவன் திரு. ம.பிரவீணன் அவரது அன்னை புகழ் பூத்த பெண் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன். தந்தை மகேந்திரன் அருணோதயக் கல்லூரி அதிபர்.

திரு.பிரவீணன் மூன்று முறை அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட நாடக இயல் படைப்பு இலக்கியத்துக்காக தங்கப்பதக்கம் பெற்றவர். ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் அதி உயர் புள்ளி பெற்று திறமையாக சித்தி அடைந்து, புலமைப் பரிசில் பெற்று, அவுஸ்திரேலியாவில் அடிலொயிட் பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்று வருகின்றார். இக்கட்டுரை மூலம் அவர் தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்கிறார்

(ஆ-ர்)

கல்லூரி அதிபர், உப அதிபர், போதனாசிரியர்கள் ஆகியோர் மாணவர்களுக்கு அவரவரின் துறைசார்ந்த பாடங்களில் உதவி வருகின்றனர். ஒவ்வொரு கல்லூரியும் நூலகம், கணனிஆய்வு கூடம் ஆகிய வசதிகளைக் கொண்டது. தொலைபேசி மற்றும் கணனி இணைப்பு வசதி உடைய தனித்தனி அறைகளில் மாணவர்கள் வசிக்கின்றனர்.

ஒவ்வொரு கல்லூரியிலும் விடுதி மாணவர்கள் 'டைனிங் ஹோலில்' ஒன்றாக உணவருந்தி ஒரே குடும்பத்தினரைப் போல பழகுகின்றனர். புதிதாக அவர்களுடன் இணையும் ஒருவர் சில விசித்திரமான அனுபவங்களை எதிர் கொள்ளத்தான் வேண்டும். லிங்கன் கல்லூரியில் (Lincon College) எனக்கு ஏற்பட்ட சுவையான அனுபவம் ஒன்று !

ஒட்டிவிட்டுச் சென்றிருக்கிறார் என்று நினைத்தேன். அந்த நேரம் எனக்குத் தெரிந்தவர்கள் அடிலொயிட்டில் அதிகம் பேர் இல்லை. தெரிந்த ஒரு சிலருக்குள் 'கே.கே' என்ற முதல் எழுத்துக்களை உடையவர் யாரென்று எண்ணியெண்ணிப் பார்த்தேன். எதுவும் புரியவில்லை. எப்படியும் அந்த நபர் மீண்டும் தொடர்பு கொள்ளத்தானே வேண்டும் என்று காத்திருந்தேன்.

ஒரு வாரமாயிற்று. ஊஹூம்! இந்த விசித்திர நிகழ்ச்சியைப் பற்றி ஏறக்குறைய மறந்துவிட்ட நிலையில், இன்னொரு நாள் பல்கலைக்கழகத்தில் இருந்து திரும்பிய-போது, 'நீ இவற்றை விரும்புவாய் என்று நினைக்கிறேன்' என்ற வாசகத்துடன் இரண்டு 'சூப்புத்தடி' போன்ற இனிப்புக்கள் கதவில் ஒட்டப்பட்டிருந்தன. எனக்கு ஒரே குழப்பமாகப் போய் விட்டது. என்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையை வேறு யாருடையவாவது அறை என்று நினைக்கிறார்களோ? ஆனால் அறை வாசலில்தான் என் பெயர் ஒட்டப்பட்டி-ருக்கிறதே! கல்லூரி 'டிரக்டரியை எடுத்து, 'கே.கே' என்ற முதல் எழுத்துக்களை உடையவர்கள் யாரும் இருக்கிறார்களா என்று பார்த்தேன். எவருமில்லை!

அடுத்தநாள் இரவு உணவு வேளையின் போது, எமது ஹொரிடோரில் வசிக்கும் றயாகோ அயாகி என்ற (அது என்ன பெயரோ?) ஜப்பானிய மாணவி என்னிடம் கேட்டாள். "குவிங் குவிங்கிளிடமிருந்து ஏதாவது அன்பளிப்புக் கிடைத்ததா உங்களுக்கு?"



கணவன் மனைவிக்கிடையே
குடும்பத்துகராறு சண்டையின் நடுவே

மனைவி:- (கத்துகிறாள்) இன்னும் ஒரு சொல் என்னைத் திட்டினீர்கள் நடப்பதே வேறு.

கணவன்:- (அகப்பையை நீட்டியபடி) அப்படி என்ன செய்வாய்.

மனைவி:- (அமைதியாக) நான் விதவையாகி விடுவேன்.

~முத்து~

சட்டென்று நினைவில் 'கே.கே' மின்னலிட, "கிடைத்தது. ஆனால் அது யார் குவிங் குவிங்கிள்?" என்று கேட்டேன். அவள் சிரிப்பாய்ச் சிரித்து விட்டுச் சொன்னாள். "உங்களுக்கு யாரும் சொல்லவில்லையா? எங்கள் ஹொரிடோரில் ஒவ்வொருவரும் இன்னொருவருக்கு 'குவிங் குவிங்கிள்' ஆக இருப்போம். யார் என்பதைத் தெரியப்படுத்தாமல் அன்பளிப்புகள் கொடுத்து விடுவோம். உங்களுடைய கே.கே யார் என்பது வருடக் கடைசியிலேயே உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஹொரிடோரின் கோடியில் உள்ள பிள்ளைக்குக் கே.கேயாக இருக்க வேண்டும். பாவம்! அவள் தனக்குக் கே.கேயிடமிருந்து அன்பளிப்பு ஏதும் கிடைக்கவில்லை என்று சொன்னாள்."

அதன் பின்னர் நானும் கே.கே ஆனேன். இப்படியான விளையாட்டுக்களை அவுஸ்திரேலியர் ஹாஷிங் (Hashing) என்று சொல்லுவார்கள். இவற்றைத்தவிர புதிய மாணவர்களுக்கான 'றாகிங்' (Ragging) என்பதைப் பற்றி அவுஸ்திரேலியப் பல்கலைக்கழக மாணவர்கள் கேள்விப்பட்டதேயில்லை. நேற்று வந்த ஒரு மாணவனும் இறுதியாண்டு மாணவனுக்குரிய எல்லா விதமான சலுகைகளையும், மதிப்பையும் பெற உரித்துடையவன். மாணவர்கள் தமக்குள் அறிமுகமாவதையும், பழகுவதையும் 'ராகிங்' இல்லாமை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. சிந்திப்பார்களா நம்மவர்கள்?.

அடிலெய்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள சர்வதேச நிகழ்ச்சித் திட்ட அலுவலகம் சர்வதேச மாணவர்களின் நலன்களைக் கவனிக்கிறது. மொத்தமுள்ள 14,000 மாணவர்களில் சுமார் 1500 பேர் வெளிநாட்டவர். வெளிநாட்டு மாணவர் ஒன்றியம் மூலமும் (Over Seas Students Association) மற்றைய மாணவர் மன்றங்கள் மூலமும் இவர்கள் பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் முன்னணி வகித்து வருகின்றனர். இந்த ஒன்றியமானது, வெளிநாட்டு மாணவர்களை விமான நிலையத்தில் வரவேற்பதில் இருந்து, அவர்கள் தங்குமிடங்களைத் தெரிவு செய்ய உதவுவது, பாடத்தெரிவில் ஆலோசனை வழங்குவது, வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பது ஈறாகச் சர்வதேச மாணவர்களின் அனைத்துப் பிரச்சினை-களிலும் உதவுகிறது. அறிமுக நிகழ்வுகள், வெளிக்களச் சுற்றுலாப் பயணங்கள் ஆகியவற்றையும் அது ஒழுங்கு செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்டர்நெட் (Internet), ஈமெயில் (E-mail) வசதிகள் இங்கு உச்ச அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அநேகமான பாடங்களின் விரிவுரைக் குறிப்புக்களும், கடந்தகால வினாப்பத்திரங்களும் இணையத் தளங்களில் வெளியாகின்றன. இதனால் விரிவுரைகளில் மாணவர்களின் வேலை அவதானிப்பது மட்டுமேயாக இருக்கின்றது. பல பாடங்களின் ஒப்படைகளையும் கூட இணையத் தளத்தினூடாகச் செய்கிறார்கள். ஈமெயில் ஆனது பல்கலைக்கழக நிர்வாகம், நூலகம் போன்றவை மாணவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான உத்தியோக பூர்வ ஊடகமாக விளங்குகின்றது. ஒவ்வொரு மாணவருக்கும் உத்தியோகபூர்வ ஈமெயில் முகவரிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் இணைப்புபாட விதானச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக, அறுபதுக்கும் மேற்பட்ட 'கிளப்புகளும், கழகங்களும் இயங்கி வருகின்றன 'மௌனக் கழகம்' போன்ற மிகச் சோம்பேறித்தனமான அல்லது ஆன்மீகத் தரமுடைய கழகத்திலிருந்து, மலையேறுதல் படகோட்டம், விமானப்பறப்பு என்று மிகத் "திறில்" கொள்ளவைக்கும் விடயங்களில் ஈடுபடும் கழகங்கள் வரை பல உண்டு.

வதிவிடக் கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளும், ஏனைய போட்டிகளும் வருடம் முழுதும் நடந்து கொண்டேயிருக்கும். சென்ற வருட இறுதியில் அடிலெயிட் பல்கலைக்கழக மாணவர் மன்றம் (உண்மையாகவே) கின்னஸ் சாதனை ஒன்றை நிலைநாட்டியது. மிக அதிக எண்ணிக்கையான மாணவர்கள், நூலகத்திற்கு முன் உள்ள முற்றத்தில் 'பார்ட்டி' ஒன்றில் கலந்து கொள்ள, அத்தனைபேரின் பெயர்களும் கின்னஸில் கொடுக்கப்பட்டன.

புத்திசாலித்தனத்திலோ அல்லது கடும் உழைப்பிலோ, எமது நாட்டு மாணவர்கள் எந்த நாட்டவருக்கும் சளைத்தவர்கள் இல்லை. ஆனால் 210 ஆண்டுகால வரலாறேயுடைய அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் எம் நாட்டைவிடப் பலமடங்கு முன்னேறியிருக்கின்றன. காரணம் என்ன? எமது வளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படாததா? அல்லது அவை வேற்று நாடுகளுக்குப் போய்ச் சேர்ந்ததா? அவ்வாறு போய்ச் சேர்ந்தது ஏன்? அபிவிருத்தி ஒரு புறமும், அழிவு மறுபுறமுமாகத் தொடரும்வரை முன்னேற்றம் சாத்தியமில்லையா? விடை காணப்பட வேண்டிய கேள்விகள் இவை.

**வரவாறு**

செந்தமிழர் செவ்விரத்தம்
செம்மணியில் ஊற்றெடுக்கும்
சேற்றில் புதையுண்ட இளந்தளிர்கள்
நாளை முளைவிடுவர் மொட்டுதராய்!

-சரயு-

# விஞ்ச

நெஞ்சு வெறுமையாய் இருக்க
உன் விம்ப நிழலை என்னுள் புதைத்தாய்
கெஞ்சுவது போல் கண்களால்
கண்ணைவிட்டு உன்னை என்னுள்
கொஞ்சம் கொஞ்சமாய் உருமாற்றி
என்னுயிரை கனவாக்கி - நான்
விஞ்ச விரைந்தோடுவதேனோ?

-பாலன்-

ஓர் இடம் ரொம்ப சுத்தமாக, மிக ஒழுங்காக மியூசியம் போல் இருப்பதைக் காட்டிலும், சிறிது கலைந்து சிறிது அலங்கோலமாக இருந்தால்தான் அவ்விடத்தில் மனிதர்கள் இருக்கிறார்கள், ஜீவன் இருக்கின்றது என்று பொருள்.

-ஜான் எர்வின்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கருவறையில் கல்லறை

## சுதந்திரா பாலசிங்கம்

நினைந்து நினைந்து என்னுள்ளம் உருகுகின்றது. வெளிச்சத்தையும், நல்ல காற்றோட்டத்தையும் அனுபவியாமல், இயற்கையன்னையின் எழிற்கோலங்களை இரசிக்க முடியாமல், இந்த இருட்டறையில் சிக்கித் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறேன். மரணம் என்னைத் தழுவும் வரையில் நான் எவ்வளவு வேதனைக்குள்ளாவேனோ அது எனக்குப் புலப்படவில்லை. உயிர், கூட்டில் இருக்கும்போது எவ்வளவு வேதனை. அது உடலை விட்டுப் பிரிந்து சிறகடித்து வெளியேறும்போது எவ்வளவு சுதந்திரம்?

இங்கிலாந்தில் தற்போது வாழும் ஒரு தமிழச்சியின் வயிற்றில் சிக்கித்தவிக்கும் ஒரு ஜீவன் நான். அவள் இங்கிலாந்துக்கு வரும்வரைக்கும் ஒரு நல்ல தமிழ்ப் பெண்தான். இங்கே வந்த பிறகுதான் தலைகீழாக மாறிவிட்டாள். ஆங்கிலமோகம் யாரை விட்டது? அவள் இலங்கையில் இருந்தபோது, இங்கிலாந்தில் என்ஜினியர் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் அவளைப் பெண் பார்க்க வந்தான். வாட்டசாட்டம், நடை, உடை, பாவனை அவளை மயக்கியது. தாய், தந்தை, சுற்றத்தார் பெருமிதப்பட்டார்கள். அவள் கொடுத்து வைத்தவள் என்ற பட்டத்தையும் கொடுத்தது. உலகத்தில் எது உண்மை. எது பொய்யென்று தெரிகிறதா? கல்யாணம் சிறப்பாக நடந்து முடிந்தது.

இங்கிலாந்துக்கு வந்த அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. அவன் என்ஜினியர் அல்ல, சவக்குழி தோண்டும் ஒரு தொழிலாளி என்று. அங்கே தொழிலாளிக்குக் கைநிறையச் சம்பளம்தான், கார்தான், பங்களாதான். இங்கே டாக்டருக்கில்லாத சம்பளம். ஆனால் அவளால் தொடக்கத்தில் அதை ஜீரணிக்க முடியவில்லை. கறந்த பால் முலை புக முடியாதே. அவள் கணவன் இரவு வேளைகளில் நன்றாகக் குடிப்பான். இவளும் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்க ஆரம்பித்து இப்போது சிறந்த குடிகாரியாகி விட்டாள். இங்கிலாந்தில் உள்ளவர்கள் எல்லோரும் பண்பாடற்றவர்களா என்ன? அவர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் அவர்களுக்குப் பொருந்துவதாக இருக்கிறது. ஆனால் இங்கே வந்த கீழைத்தேச மக்கள் மேலைநாட்டு நாகரீக மோகத்தில் தலைகால் தெரியாமல் குருட்டு வாழ்க்கை வாழ்கிறார்கள். இந்தத் தம்பதியினரும் இந்த வாழ்க்கையைக் கைக்கொண்டு விட்டார்கள். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கீழைத்தேசப் பண்பாடு மறந்து விட்டது. எப்படியும் வாழலாம் என்ற வெறி, அனுபவி ராஜா அனுபவி என்ற கோட்பாடு.

நீண்டு வளர்ந்திருந்த கூந்தலை வெட்டி பாப் செய்து கொண்டாள். ஆள்பாதி ஆடைபாதி என்று உடை. கணவனுக்கு இந்த மாற்றம் எல்லாம் திருப்தி. சாம்பவியென்ற அவள் பெயரும் கணவன் வாயில் 'ஷா' வென்று குறுகிவிட்டது. அவர்கள் குடி, கிளப், உல்லாசம் என்று பறந்தார்கள். இந்த நேரத்தில்தான் எதிர்பாராத விதமாக நான் அவள் வயிற்றில் நுழைந்து விட்டேன். வந்தது வினை.

அன்று இரவு, அவர்கள் இருவரும் கிளப்புக்குப்போய்த் திரும்பவும் வீட்டுக்கு வந்தார்கள். இருவரும் இணைந்து அணைத்தபடி தள்ளாடித் தள்ளாடி வந்தார்கள். இருவர் கைகளிலும் சிகரட். அவள் சிகரட் புகையை இழுத்து ஊதும்போது, எனக்குக் குமட்டுகிறது. என்ன செய்வது? நரக வேதனை எனக்குச் சொந்தமாச்சே. அவர்கள் தள்ளாடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையறைக்கு வந்து கட்டிலிலே தொப்பென்று விழுந்தார்கள். "டார்லிங், எங்களுக்கு இப்ப பிள்ளை வேண்டாம். இதை அழிச்சுப் போடுவம்" அவன் குடிபோதையில் உளறினான். அவள் அதை ஆமோதித்து "Yes Darling" சொன்னாள்.

அடுத்தநாள், அவர்கள் டாக்டரிடம் போனார்கள். அவரால் எனக்கு மரணதிகதி குறிக்கப்பட்டு விட்டது. இன்னும் ஒரு வாரமே இந்தக் கருவறையில் எனது வாழ்வு. அழ நினைக்கின்றேன். ஏன் அழ வேண்டும்? பண்பாடற்ற இவர்களுக்குப் பிள்ளையாக அவதரிப்பதைவிட கருவறையிலேயே சிதைந் துபோவது நல்லது தானே.

## கவிப்பா

*செவி வழிவந்த சொற்கள்*
*கருவாகி கனிந்து*
*கவியாகி வந்தனை*
*பாடிபணிந்து பரவ*
*மேவிய யுன் திருவருளே*
*யன்றி யாது முண்டோ?*
*தேவியருடன் குலவி*
*மகிழும் வேல் பெருமானே!*

-ஆர் ஜே-

நான் சாவதற்குமுன் சில கற்பனைகள் தோன்றுகின்றன. அதை உங்களுக்குச் சொல்வதற்குமுன் நேற்று நடந்த வேடிக்கையைச் சொல்லுகிறேன். நடுநிசி போன் மணி அலறுகிறது. வேறுயாருமில்லை. சாம்பவியின் அம்மாதான் போன் பண்ணினாள். "ஷா டார்லிங் போன் அடிக்குது" அவன் திரும்பிப் படுக்கிறான். சாம்பவி போனை எடுக்கிறாள். "சாம்பவி சுகமாய் இருக்கிறாயா?" "உம் நல்லாயிருக்கிறன். என்னம்மா படுக்கவிடாமக் குளப்புறீங்க". "ஒண்டும் இல்லை. ஒரு ஆசை! ஏதாவது விஷேசம் உண்டா? என்று கேக்க ஆசையாய் இருந்தது. பேரப்பிள்ளை கெதியாய் பெத்துக் குடுப்பியா?" சாம்பவிக்கு எரிச்சலாக இருந்தது. "என்னம்மா நீங்க, எட்டுப் பிள்ளை பெத்த உங்களைப்போல இருக்கச் சொல்லிறீங்களோ. நாங்கள் நாய் மாதிரி புழுதியிலை கிடந்து வளர்ந்தாச்சு. அதுமாதிரி இப்பவே பெத்துப் போடச் சொல்லிறீங்களா? இந்தக்கதையே என்னோட பேசப்படாது. எனக்குப் பிள்ளை வேண்டாம் என்று இருக்கிறன். ஒண்டு உடலழகு குறைஞ்சுபோம். வாழ்க்கையை அனுபவிக்க ஏலாது. கரைச்சல். என்னைக் குளப்ப வேண்டாம்". போனை டக்கென்று வைத்து விட்டாள். அம்மா விக்கித்து நின்று விட்டாள். என் சாம்பவியா பேசுவது?

எனக்குச்சாவு நிச்சயம். இனி எந்தக்கருவறை எனக்குச் சொந்தமாகப் போகிறதோ என்பது பற்றிச் சிந்திக்கின்றேன். எனக்கு ஒரு உத்தமத்தாய் கிடைப்பாளா என்ற ஏக்கம். 'குழந்தையின் பூத உடலை மட்டும் பெற்றெடுப்பவள் அல்ல தாய். அதன் புகழுடம்பையும் பெற்றெடுப்பவள் அவளே'. ஆஹா! எவ்வளவு அரிய உண்மை. ஆரம்பத்தில் பிறப்பும் நம்கையில் இல்லை. அடுத்தடுத்த நடப்பும் நம் கைவசம் இல்லை. எல்லாம் இறைவன் செயலே. எனது புனிதமான கற்பனைகள் இறைவனால் ஈடேற்றப்படும் என்று நம்புகின்றேன். சீதாதேவி போல் ஒரு தாய். இராமர் போல் ஒரு தந்தை. லவனைப் போலவோ, குசனைப் போலவோ நான் பிறக்க வேண்டும். மக்களுக்கு நன்மை செய்து மடியவேண்டும்.

இங்கே தன் உல்லாச வாழ்க்கைக்காக குழந்தை சுமையென நினைக்கும் ஒரு தாய். தன் பிள்ளையின் முன்னேற்றத்திற்காகத் தன் உடல், பொருள், ஆவியைத் தியாகம் செய்யும் வேறொரு தாய். புனிதமான பாரிஜாதப்பூ மட்டும்தான் உலகில் உண்டா? புற்களும் பூக்கின்றனவே. பெண்மைக்கு எப்போது பெருமை? தாய்மையடையும்போது தானே. இந்தக்காலத்தில் கருவைக்கலைப்பது என்பது, மக்களுக்குச் சர்வசாதாரணமாகி விட்டது. இறைவனால் படைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை அழிப்பதென்பதில் எதுவிதக் குற்ற உணர்வுமில்லை. டாக்டர்களும் பணத்தாசையால் இதைச் செய்வதற்குத் தயங்குவதில்லை. ஒரு மனிதனைக் கொலை செய்தால் தூக்குத் தண்டனை. சிசுக்–கொலைக்கு ஒரு தண்டனையும் கிடையாதா? இவர்களை எல்லாம் சட்டம் தண்டிக்கவில்லை.

குடி, புகைத்தல், போதைவஸ்து எல்லாம் சேர்ந்து, இந்தக்கருவறையைப் பாதிக்கிறது. நரகம் என்ற ஒரு இடம் உண்டோ இல்லையோ எனக்கு இங்கே அந்த அனுபவம் உண்டு. இந்தத் தாயின் புனிதமற்ற இரத்தம் எனது நாடி நரம்புகளை ஊடுருவி நிற்கின்றது. நான் பூமியில் பிறந்தால் அங்கவீனப் பிள்ளையாகவோ, நோயுற்ற பிள்ளையாகவோ, புத்தி பேதலித்த பிள்ளையாகவோ பிறக்கக் கூடும். ஐயோ! அதை நினைக்கும்போதே வேதனையாக இருக்கின்றது.

இவர்களின் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறேன். காலையில் எழுந்தால் யந்திரகதி உழைப்பு, உழைப்பு, பணம், பணம், மாலையில் ஒரே மயக்கம். 'சாப்பிடு, குடி, சந்தோஷமாயிரு. ஏனெனில் நாளை நீ இறந்து விடுவாய்'. (Eat, Drink and be merry for tomorrow you will die ) வாழ்க்கை உண்பதும், அனுபவிப்பதும் மட்டும்தானா? அதை ஏன் ஒரு உன்னதஇலட்சியத்துக்காகத் தியாகம் செய்யக் கூடாது? உத்தமர்கள் இறந்த பின்பும் வாழ்கிறார்களே எப்படி?

உங்களுக்கு எனது குறுகிய வாழ்வைக் கூறும்போதே, எனது ஒருவாரகாலம் கரைந்து மடிந்து விட்டது. நாளை எனது கடைசி நாள். என்னைப்பலி கொடுக்கின்ற எண்ணமே எனது பெற்றோர்களுக்கு சந்தோஷம். அந்த சந்தோஷத்தைக் கொண்டாடப் புறப்படு–கிறார்கள். 'Holiday inn' வந்தாயிற்று. மாமிசவகை, குடி எல்லாம் வேண்டியமட்டும் குடித்தார்கள். சாப்பிட்டார்கள். கடைசியிலே எழுந்திருக்க முடியவில்லை. கண்கள் மயங்குகின்றன. கால்கள் தடுமாறுகின்றன. அவர்கள் ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொண்டு, தடுமாறியபடி வெளியே நடந்தார்கள். "ஷா டார்லிங் ஆர் யூ ஹப்பி?" உழறலாகவே கணவன் கேட்டான். "Yes ; I am so happy today" அவளும் பின்னிப் பின்னிக் கதைத்தாள். எப்படியோ தங்கள் காரினை இனங்கண்டு கொண்டு ஏறி அமர்ந்தார்கள். ஹா! ஹா! பலத்த குரலில் சிரித்தார்கள். 'We are going to heaven' (நாங்கள் சுவர்க்கத்திற்குப் போகிறோம்) என்றான். தட்டுத்தடுமாறி காரை ஸ்டார்ட் செய்தாகி விட்டது. கார் அளவுக்கதிகமான வேகத்தில் ஓடுகிறது. இருந்தாற்போல் ஒரு பெரிய சத்தம். ஒரு பெரிய மரத்தில் மோதிச் சுக்கலாகக் கார் நொருங்குகின்றது. அவர்கள் தூர வீசியெறியப்படுகிறார்கள். இருவரும் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்கள். அந்த நடுநிசியில் அவர்களைக் காப்பாற்ற யாரும் இல்லை. இதுதான் இவர்கள் முடிவு என்று இறைவன் எழுதிவிட்டான்.

தம் வாழ்க்கையெனும் படகை தகாத வழியில் செலுத்தி யாரும் பெறாத இன்பம் தாம் பெறுவோம் என்ற குறுகிய நோக்குடை–யோரின் வாழ்க்கை இக்கதியில்தான் முடியுமோ?

இத்தகைய, நிலைமாறித் தடுமாறும் பாவிகளின் எத்தகைய எச்சங்களும் இவ்வுலகில் வேண்டாமென்றுதான், இறைவன் தாம் அனுபவிக்க எனையழிக்கத் துணிந்தவரை அழித்து, எனக்கு கருவறையையே கல்லறையாக்கி, என் ஆத்மாவிற்கு விடுதலை தந்தாரோ? என நினைக்கத் தூண்டுகிறது.

எனக்கு எதுவும் வேண்டாம். இந்த நேரத்தில் நான் இறைவனை மட்டும் சிந்திக்க விட்டுவிடுங்கள், வரட்டுமா?

'எற்றைக்கும் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கே நாம்
ஆட்செய்வோம்'
(ஆண்டாள்)

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசர்நாய் கடிநோய் [Rabies]

## நீர் வெறுப்பு நோய் (Hydrophobia)

### அறிமுகம்:

நீண்டகாலமாக இலங்கையில் முக்கியமான பொதுச் சுகாதாரப் பிரச்சனையாக விசர்நாய்கடி நோயானது இருந்து வருகின்றது. இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பவர்கள் கூடுதலாக இளவயதினராக இருப்பதால், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டி நேரிடுகிறது.

இலங்கையில் கடந்த சில வருடங்களில் ஆண்டுதோறும் 100 தொடக்கம் 150 வரையானோர் இந்நோயினால் இறந்து உள்ளார்கள். யாழ். மாவட்டத்தில் இந்நோயின் இறப்புக்கள் பின் வருமாறு காணப்படுகிறது.

| வருடம் | இறப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1998 | 06 |
| 1999 | 12 |
| 2000 | 15 |

மேற்படி அட்டவணையின்படி இந்நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது. எமது மண்ணில் ஒரு பாரிய பிரச்சனை உருவாகி வருவதை மேற்படி நிகழ்வானது காட்டி நிற்கின்றது. எனவே இந்நோய் பற்றிய தெளிவான அறிவும், விழிப்புணர்வும் எமக்கு மிகவும் தேவையானதாகும்.

### நோய்க்காரணி:

இந்நோய் விலங்கிலிருந்து மனிதனுக்குத் தொற்றும் ஒருவகை நோயாகும். (Zoonotic Disease) இது ஒரு வகை வைரசினால் ஏற்படுகின்றது.


A.S.சிவபாலன்
பொது சுகாதாரப் பரிசோதகர்,
கொக்குவில்.

### நோய் அரும்பு காலம்:

**விலங்குகளில்:** இந்நோய்க் கிருமியானது உட்புகுந்து நோய் ஏற்பட 5-14 நாட்கள் வரை எடுக்கும்.

**மனிதரில்:** நோயுள்ள விலங்கினால் கடியுண்டு நோய் ஏற்பட 4 நாட்கள் தொடக்கம் பல வருடங்கள் வரை எடுக்கலாம். வழமையாக 20-90 நாட்கள் வரை எடுக்கும். இக்காலம் கடிபடும் இடத்தையும், காயங்களின் தன்மையையும் பொறுத்து மாறுபடும். உதாரணமாக, முகத்தில் கடிகாயம் ஏற்படின் இந்நோய் விரைவாக ஏற்படும். ஏனெனில் இவ் வைரசானது காயத்தினூடாக நரம்பைச் சென்றடைந்து மைய நரம்புத்தொகுதியைத் தாக்குகின்றது. எனவே முகத்தில் காயம் ஏற்படின் விரைவாக மூளையைச் சென்றடையும்.

### நோய் பரவும் விதம்




காட்டு மிருகங்களில் பொதுவாக இந்நோய் காணப்படும். வெளவால், நரி, கீரி, அணில், ஓநாய் ஆகியவற்றிலும், வீட்டுவளர்ப்புப் பிராணிகளான நாய், பூனை ஆகியவற்றிலும் இந்நோயானது காணப்படுகின்றது. வைரஸ் கிருமியானது நோயுற்ற விலங்குகளின் உமிழ்நீரில் காணப்படுகின்றது. கடிக்கும் போது இவ்வைரசானது கடிகாயத்தினூடாகப் பரவி இந்நோயானது ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்களில் அறிகுறிகள்:

ஆரம்ப அறிகுறிகளாக, பழக்க வழக்கத்தில் மாற்றம், பயம், இருண்ட இடங்களை நாடுதல், கோபப்படுதல் ஆகியன தென்படும்.

பிந்திய அறிகுறிகளாக மரத்துண்டு, தூண், வைக்கோல் ஆகியவற்றைக் கடிப்பதோடு பக்கத்தில் செல்லும் மிருகங்கள், மனிதர்களையும் கடிக்கும். வாயைப் பிளந்தபடி பின் கால்களை, முன்னங்கால்களினால் இழுத்துச் செல்லும். முன்னுக்குச் செல்பவர்களைக் கடிக்கும். பின்னர் எழுந்து நிற்க முடியாது இருப்பதுடன் பாரிசவாதத் தன்மையுடன் (Paralysis) நாயானது இறக்கும்.

## மனிதரில் அறிகுறிகள்:

1. மெதுவான காய்ச்சல்
2. உடற்றொழிலியலில் மாற்றங்கள் ஏற்படும். Eg: பதட்டம், பதகளிப்பு, பயம்.
3. நித்திரையின்மை
4. உடற்தசைகள் பாதிக்கப்படுவதால் உடல் முழுக்க நோ ஏற்படும்.
5. இரட்டைப் பார்வை ஏற்படல் (Double Vision)
6. ஆண்குறி விறைப்பாக இருத்தல் (Priapsim)
7. குரல் தடிப்படைதல்.
8. நீரைக் கண்டு வெறுப்படைதல். (Hydrophobia)
9. தொண்டைத்தசைநார் பாதிக்கப்படுவதால், நீர் அருந்த, உணவு உட்கொள்ள, மூச்செடுக்க முடியாத நிலை ஏற்படும்.
10. வைரசானது மையநரம்புத் தொகுதியைத் தாக்குவதால் பாரிசவாதம் ஏற்படும்.
11. இறுதியில் சுவாச வழுவினால் மரணம் ஏற்படும்.

மேற்கூறப்பட்ட அறிகுறிகள் காணப்படும்.

## நோய் ஏற்படாமல் தடுத்தல்:

01. தெருநாய்களை அழித்தல், உள்ளூராட்சிசபைகள், சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடனும், பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் இதைச் செயற்படுத்தல் வெற்றி தரும்.

02. வளர்ப்புப் பிராணிகளுக்கு (நாய், பூனை) விலங்கு விசர் நோய்க்கெதிரான தடை மருந்தினைத் தவணை முறையில் தவறாது ஏற்றுதல்.

03. விலங்குகளினால் கடியுண்டால், கடிகாயத்தை ஓடும் நீரினால் சவர்க்காரம் கொண்டு கழுவுதல், அல்லது 40-70% மதுசாரத்தினால் கழுவுதல். காயத்தை மூடுதல் கூடாது.

04. உடன் சிகிச்சை பெறுதல். ஏற்புத் தடை ஊசி அண்மையில் ஏற்றாதிருந்தால் ஏற்றுதல் வேண்டும்.

05. சந்தேகத்திற்குரிய பிராணிகளைக் கவனமாக அவதானித்தல். அறிகுறி தென்படின் அப்பிராணியைக் கொன்று, அதன் தலையை வெட்டி, ஐஸ்பெட்டிக்குள் வைத்து மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்புதல் வேண்டும். (MRI)

06. விசர்நாய் கடிநோய் ஏற்பட வாய்ப்புள்ளவர்களெனக் கருதுபவர்களுக்கு இந்நோய்க்கெதிரான தடைமருந்து (Anti Rabies Vaccine- ARV) ஏற்றிப் பாதுகாத்தல், இவர்கள் முறையே 0, 7, 28 நாட்களில் தடைமருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(I) றேபிஸ் வைரஸ் ஆய்வுகூட உத்தியோகத்தர்கள்

(II) மிருக வைத்தியத் துறையைச் சேர்ந்தோர்

(III) காட்டு விலங்கு பரிபாலகர்

(IV) மிருகங்கள் வளர்ப்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

07. நாயினால் கடியுண்டு அந்நாய் இறந்தால், அல்லது அந்நாய் தெருநாயெனில், அல்லது விசர்நோய் இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நாயினால் கடியுண்டால், உடனடியாக இந்நோய்க்கெதிரான தடைமருந்து(ARV) ஏற்றுதல் வேண்டும். இவர்களுக்கு முறையே 0ம், 3ம், 7ம், 14ம், 30ம், நாட்கள் என்ற ஒழுங்கில் ஐந்து தரம் வழங்குதல் வேண்டும்.

விசர் நாயினால் கடியுண்டு விலங்கு விசர்க்கெதிரான தடைமருந்து (ARV) ஏற்றாமல் விடின் நிச்சயம் இந்நோய் ஏற்படும். ஆனால் தகுந்த நேரத்தில் ARV யை ஏற்றுவதன் மூலம் இந்நோய் ஏற்படாமல் தடுக்க முடியும் என்ற அறிவு எல்லா மக்களிடையேயும் இருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட தடுப்பு முறைகளை எல்லா மக்களும் கடைப்பிடித்தால் விலங்கு விசர் நோயை சமூகத்திலிருந்து இல்லாது ஒழிக்கலாம்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

## வருங்காலப் பத்திரிகைகளில் வரப்போகும் விளம்பரங்களின் மாதிரி

### மனம் மகிழ பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது ஊரிலுள்ள ஐம்பது சமாதான நீதவான்களில் ஒருவரும், எமது நிலையத் தலைவரும், கல்லெறிந்தான் திட்டு முருகன் ஆலய தர்மகர்த்தாவும், வேலையில்லாத பணக்கார இளைஞர்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்கும் சமூகசேவகருமான

மதிப்பிற்குரிய

**திருவாளர் கோமாரியன் டம்மிபாலன்**

தனது முதலாவது பேரக்குழந்தையைப் பெற்றுள்ளார்



இவருக்கு பேரன் கிடைப்பதற்காக உழைத்த இவரது மகனையும்



பெற்றுக் கொடுத்த மருமகளையும் மனம் மகிழ பாராட்டி வாழ்த்துகிறோம்.

மேலும் தம் பத்திரிகையில் பாராட்டி வாழ்த்தி விளம்பரம் இடுவதற்கு ஆதிமுதல் இன்றுவரை ஆதரவு தரும் அண்ணல், ஆசிரியர் திரு. பகலவபாலன் பித்சங்கா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வாழ்க! பாராட்டி வாழ்த்தால் வளர்க நாம் என்றும் ஏமாறுக எம் சமூகம்

மாளிகைத் தெரு,
வில்லுக்கிராமம், யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்கள்
அமாவாசை கிராம முன்னேற்றச் சங்கம்.

விளம்பரத் தயாரிப்பு: குறும்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயகலைகள்



ஆயகலைகள் அறுபத்தி நான்கு என்பது முன்னோர்களால் வகுக்கப்பட்ட, மூளையின் இயல்பூக்கம் பெற்ற மதிநுட்ப விடயங்களாகும். இவை பிறவிஞானம், கல்விஞானம், கேள்விஞானம் ஆகியவற்றால் வரும். இருப்பினும் ஆயகலைகள் அறுபத்தி நான்கு என்னும்போது இவை கலைகளின் பெரும் துறைகளைக் குறிக்கும். இவ்வாறே ஒவ்வொரு துறைக்குள்ளும் பல உட்பிரிவுகளும் அடங்கும். அதாவது கலைகள் ஒரு காலத்தில் குலத் தொழில்களாகவும், ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு தெய்வங்களும் இருந்து வந்துள்ளன.

இருப்பினும் இந்துக்களாகிய நாம் பொதுவாக ஆயகலைக்கும் அதிபதியாக சரஸ்வதியையே கொள்ளும் பாங்கு ஏற்படக் காரணம், இந்துமதம் ஆரம்பகாலத்தில் பல பிரிவுகளாக இயங்கி வந்தது. ஒவ்வொரு மதப்பிரிவும் தமது குலத்தெய்வத்தையே இயற்கை என்னும் இறைவனுடன் இணைத்து இறைவனாக வர்ணித்து புராணங்களை உருவாக்கினாலும், இத்தகைய முரண்பாடுகளுடன் சமய சமரசம் ஏற்பட்டு, இந்துமதம் என்னும் பெரும்பிரிவு உருவானது. அதாவது யாகங்கள் மூலமும் மந்திரசக்தி மற்றும் வழிபாடுகள் மூலம் உருக்கொண்டு உருப்பெற்ற இத்தெய்வங்கள், இறைவனின்றும் வேறுபடுத்திப் பார்த்தாலும் நாம் எந்தத் தெய்வத்தை முதன்மைப்படுத்தி வழிபடுகின்றோமோ, அந்தத் தெய்வதினுள் அனைத்துத் தெய்வமும் அடங்கிவிடும் என்பது சாஸ்திர மரபாகும்.

இருப்பினும் இயற்கையின் நியதியின்றி தெய்வங்கள் உதித்தன என்றோ, அவதார புருஷர்கள் பிறந்தார்கள் (தோன்றினார்கள்) என்றோ கூறமுடியுமா?

## இயற்கையும் கலையும்

இயற்கை அருவமானது. அதாவது உருவமற்றது. இருந்தாலும் கலையெனக் கொள்ளப்படும் மதிநுட்ப அறிவு இயற்கையிடம் உண்டா? என ஐயப்பாடு எழுவதுபோல், எமது முன்னோர்களான ஞானிகளிடமும், ரிஷிகளிடமும் இவ் ஐயப்பாடு இருந்திருக்கின்றது. அதாவது இறைவன்

**இராமஜெயபாலன்**

உருவமற்றவன், இறப்பு பிறப்பு இல்லாதவன், உணர்வு புணர்வு இல்லாதவன் இவற்றுக்கு மேலே சென்று விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்று கூறும்போது, குணம் அற்ற நிர்க்குணத்தன்மையல்லவா பிரதிபலிக்கின்றது. ஆனால் பின்வரும் ஆய்வுகள் மூலம் அவை குறித்துப் பார்க்கலாம்.

முதலில் பிரபஞ்சத்தை நோக்குவோம். தடைகள் இல்லாத வெற்று வெளியில் கோள்கள் மிதந்து இயங்கும் பாங்கு. இதனால் இரவு பகல், இத்துடன் புவியீர்ப்பு இதனால் உயிர் வாழ்வுக்கான ஆதாரம் இப்பரிணாமத்தை போல், உயிரினப் பரிணாமத்தைப் பார்ப்போமாகில்,

உணவை உண்டு வாழ சுவை என்னும் விருப்பு, இனத்தைப் பெருக்க புணர்வு என்னும் விருப்பு, இவ்வகைத் தன்மையில்லாத தாவரங்களின் இனப்பெருக்கத்திற்குதவ அழகான மலர்களின் வாசனை, இனிமையான தேன் இவைகள்மூலம் வண்டுகள் ஈர்க்கப்பட்டு மகரந்தச் சேர்க்கை,

### போர்

உயிர் கொண்ட உடலங்கள்
உடலின்றி உயிர்மட்டும்
ஆயுதங்களால் வடித்தெடுத்தபின்
எருவென்று மண்ணில் புதையுண்டு

-வெண்புறா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் விதைகள் மூலம் பரவும் காய் கனிகள் தவிரவும், காற்றின் மூலமும், விலங்குகள் மூலம் ஒட்டியும், கொழுவியும், பரவும் விதைகள்.

இவை மட்டுமா, ஒவ்வொரு உயிரினத்துக்குமான வாழ்வுக்கான கொடைகள் மின்னிமின்னிப் பூச்சி, ஓசை கொண்டு அறியும் வௌவால், இவைகளுடன் ஒவ்வொரு உயிரினத்துக்குமான பாதுகாப்பு அமைப்பு, பூக்களுடன் பூப்போன்று வண்ணத்திப் பூச்சி, கல்லுடன் கல்லாக ஆமை, நிறம் மாறும் பச்சோந்தி இப்படி எத்தனையோ எத்தனை. இவைகள் தம்முடைய அறிவாலும், திறமையாலுமா இவைகளைச் சாதித்தது. அல்லது எதிர்பாராத வாய்ப்புக்களின் பலன் இவையென்றாலும் ஒன்றா, இரண்டா?

இவைமூலம் இயற்கையே முதற்கலைப் படைப்பாளி மட்டுமல்ல அனைத்து கலைகளுக்கும் ஆதாரம் என்பது புரியவரும்.

## அஃறிணை உயிரினங்களின் கலைத்துவம்.

அஃறிணை உயிரினங்களின் மூளையின் செயல்பாடு 75% பரம்பரை அலகு மூலம் பதிவு செய்யப்பட்ட அறிவு வெளிப்பாடாகும். ஆனால் மனிதன் மூளை 75% பதிவு செய்யப்படாத வெற்று நாடா போன்றது. பின்னர் பயிற்சிகளால் பதிவாக செயலூக்கம் பெறும். அதாவது சிலந்தி வலை பின்னுதல், அவற்றின் உமிழ்நீரின் கொடையால் செய்வது போல, குளவி கூடு கட்டுதல், கறையான் புற்றெடுத்தல், குருவி கூடு கட்டுதல் இவ்வாறு பற்பல. இவற்றின் கலைத்துவமோ அலாதி.

## மனிதரில் கலைத்துவம்

கல்வியை எடுத்துக் கொண்டால் முதலில் எழுத்து, பின்னர் வசனம், பின்னர் பந்தி விடயம், கருத்து. நாம் ஒரு பத்திரிகையை வாசிக்கும் போது, எமது கண்கள் பத்திரிகையில் பதிய மூளையில் கருத்து துலங்க ஆரம்பிக்கின்றது. மூளையில் முன்னைய படிமானங்கள் பதிவானமையால் அவை குறித்து நாம் அலட்டிக் கொள்வதில்லை.

உ-ம் ஒருவர் தனது கீழ்வகுப்பில் கல்வி கற்காமல், இடையில் ஆர்வமெடுத்து கற்கத் தொடங்கினால், குறிப்பிட்டவர் மூளையில் பயிற்சிக் குறைபாடு காரணமாக எழுத்துப்பிழை ஏற்படும். முறைப்படி வாய்ப்பாடுகளை பாடமாக்காமல் விட்டால், கணக்குப் பிழைகள் ஏற்படும். சிலவேளைகளில் இவைகளைத் தாண்டி கல்வியின் உச்சத்துக்கு வந்தவர்களுக்கும் இந்தக் குறைபாடு இருக்கும். தவிரவும் தொடர்ந்து செயற்படுத்தாத விடயங்களும் மூளையின் பாவனைப்படுத்தாத பகுதிக்குச் சென்று, சிலவேளைகளில் அவை அழிந்தும் போய்விடும்.

### மரபு வழி குறியீடு

இவை பாவனைப் பயன்பாட்டைப் பொறுத்தே விளக்கம் தரும். உ-ம்: இதயம் இது மூளையால் இயக்கப்படும் உள்ளுறுப்பு ஆயினும் எண்ண மாற்றல்களை துடிப்பினூடாக வெளிப்படுத்துவதால் காதல் சின்னமாகவும், ஏன் உன்னமாகவும் கொள்ளப்படுகின்றது. இதன் மறு வடிவங்கள் அப்பிள், தாமரை மனக்கவர்ச்சியையும் தருகின்றது.

-ஜெயா-

மேலே நாம் பார்க்கப்பட்டது போல பரத நாட்டியக் கலையை எடுப்போம். பழகும்போது முதலில் கால்களை இயக்கும்போது, கைகளை இயக்க மூளை மறக்கும். கைகளை இயக்க கால்களை மறக்கும். பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய மூளை அதை இயல்பாக்கிக் கொள்ளும். பின்னர் அபிநயம் குறித்த பயிற்சி இவை எல்லாவற்றுடன், தாளம், ராகம். இவ்வாறு பயிற்சிபெற மூளை இவைகளை இயல்பாக்கிக் கொள்ள, சபையோரை பார்த்துக் குறிப்பறியும் நிலை வரை வளரும். இதுபோலவே நீச்சல்கலை, வாகனம் ஓட்டும் கலை, கராத்தே கலை என்பனவாகும். இவற்றுக்கு ஆதாரமான முக்கிய விடயம் கைகள் இல்லாத ஒருவர் கால்களால் எழுத முயற்சியெடுக்க அதுவே அவர் மூளையில் இயல்பாகி சித்திரம் வரைதல் வரை முன்னேறுவதுமுண்டு.

மேலே நாம் பார்க்கப்பட்ட விடயங்க-ளினின்றும் புரிந்து கொள்ளத்தக்கது, கலைகள் என்பது எமது பயிற்சிகளைக் கடந்து மூளையில் பதிவாகி, செயல்பாட்டின் இயல்பு நிலையை அடைதலாகும். உ-ம் தமிழர்களாகிய எமது மூளையில் தமிழ்சொற்கள் எவ்வளவு உண்டு என்று எம்மால் கூறமுடியுமா? ஆக எம்மை அறியாமலே நாம் கருத்தில் கவனம் செலுத்த, சொல் வந்து பொருந்தி வருதலே கலையாகும். இதில் கவி புனைதலும் அடங்கும். இவைபோல் எமது பழக்க-வழக்கங்களும், நாம் சிலவற்றுக்கு அடிமையாகிப் போதலும் எமது மூளையின் இசைவாக்கமே.

### சாஸ்திரக்கலை

மேலே சொல்லப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய பரந்துபட்ட தளமே சாஸ்திரக்கலையாகும். இவற்றுள்ளும் பற்பல பிரிவுகள் உண்டு. சாதகரீதியில் கணிப்பீடு சம்பந்தமான சாஸ்திரக்கலையை எடுத்துக்கொண்டால், ஒருவரின் பிறந்த நேரத்தை வைத்துக்கொண்டு ஒருவனின் மூளையின் தன்மை, அவனுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு, அவனுக்குரிய தெய்வம், அவனுக்குத் தெய்வங்களால் கிடைக்கக்கூடிய அனுகூலம்.

தொடரும்........



*காதலி:-* என்னங்க கெதியாய் வீட்டபோகவேணும்

*காதலன்:-* ஏன்? என்ன அவசரம், வீட்ட அப்பா, அம்மா தேடுவினமோ?

*காதலி:-* இல்லை, ஸ்கூலால பிள்ளையள் வந்திருக்கும் சாப்பாடு கொடுக்கவேணும்

*காதலன்:-* ஆற்றை பிள்ளைகள்?

*காதலி:-* என்னுடையது தான்

காதலன்:- ???

\- ஆனந்த் -

*தமிழா! ஐயமில்லை நீ ஒரு சேற்றுப் பண்டி*
*சும்மா தூங்கிக்கிடப்பதால் வளரும் வண்டி*
*நிவாரணம் நம்பி உருட்டுகிறாய் வாழ்க்கை வண்டி*
*நினைவில் வை வரும் சந்ததி சொல்லும் நீ ஒரு ஆண்டி.*

குறும்பன்

எதிர்பார்ப்புக்கள் எதுவுமின்றி அன்பென்னும் அடிப்படையில் தாமே அறியாமல் உருவாவதே நட்பு.

(இ.மு)

# காட்டு கொமடி க்கிங்கும்

அறிவால் பிரபலமாவோர் பலர், அரசியலால் பிரபலமாவோர் பலர், அதிவீர சாகசத்தால் பிரபலமாவோர் பலர், இவர்களிடையே அட்டகாசத்தாலும் பிரபலமாகும் சிலரில் ஒருவனான சந்தன மரக்கடத்தல் வீரப்பனைச் செவ்வி காணச் செல்கின்றார் விவேகமிக்க நகைச்சுவைகளால் வெற்றியுலாவரும் நடிகர் விவேக்!.

*விவேக்:* சத்திய மங்கலம் காட்ட நோக்கிச் சர்வதேசத்தையே நோக்க வைத்துச் சந்தனக் காட்டிற்கு மணம் வீசவைக்கின்ற சர்வகலா நாயகனே! Moon TV சார்பில் தங்களைப் பேட்டி எடுக்க அனுமதித்ததற்காக நன்றிகளும் நமஸ்காரங்களும் உரித்தாகட்டும் தலைவா!



*வீரப்பன்:* வாடா என் ஜொள்ளுத் தம்பி! என்னை என்ன வையாபுரின்னு நினைச்சோடா லொள்ளு விடறே? மான் ரீவி(!) மயில் ரீவின்னு பினாத்திக்கிட்டு அலையாம நான்தாண்ணே வுவேக்கின்னு சொல்றதுக்கென்னவோ சொதப்பிறியேடா படவா?

*விவேக்:*(இவனுகளோடெல்லாம் இங்கிலிஷ்ல கதைக்கப் போனது நம்ம தப்பென எண்ணியவாறே) ஹி! ஹி! நம்ம பேரு, ஊரு எல்லாம் அண்ணாச்சிக்கு எப்படி....?

*வீரப்பன்:* ஹா! ஹா! அந்தப் பட்ஜட் பத்மநாதன் படத்திலே இம்பூட்டுத் துணி கூட இடுப்பில இல்லாம, அந்தத் தாடிக்காரக் கறுவல் கிழத்தோட சேர்ந்து ஏதோ ரீல் விட்டியே, அப்பத்தான் நம்ம பசங்க ஒன்னப்பத்திச் சொன்னாங்க!

*விவேக்:* (அப்ப நீங்க மட்டும் பால் வெள்ளையாக்கும் எனக் கேட்க எண்ணிவிட்டுச் சட்டென ஒரு வெகுளிச் சிரிப்பை உதிர்த்தவாறு) ரொம்ப நன்றிங்க தலைவ

கற்பனையில் ஒப்பனை:
அளவையூர்ச் சேந்தன்.

ா! அப்புறம் இப்போதைக்கு உங்கட திட்டம், எதிர்காலத்தில உங்கட திட்டம் பற்றிக் கொஞ்சம் எடுத்து விடுறீங்களா.....?" (எனஇழுக்க)

*வீரப்பன்:* (இடைமறித்து) என்னங்கடா டேய்! கொஞ்சம் மரியாதையா கதையுங்கோடா முதல்ல! ஒழுங்காத் தமிழக் கதைக்கப்பார், இல்லேன்னா உன்ர (B) பென்டத்தான் முதல்ல எடுக்க வேண்டிவரும்!

*விவேக்:* (எல்லாம் நம்ம காலம்! என முனகியவாறே) மன்னிச்சிடுங்கோ அண்ணாச்சி!...ஹி...ஹி! உங்களோட நிகழ்கால, வருங்கால வாழ்க்கையைப் பற்றிக் கொஞ்சம்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரப்பன்:* (மிகவும் சலித்தவாறே) இனியென்ன தம்பி நம்ம வாழ்க்கை இந்தக் காட்டோடதான்! நல்லவனா இருப்பமெண்டு வெளியில வந்தாக்கூட விடுறாங்களா பாவிங்க! அந்த மவராசியையே (பூலான் தேவியைத்தான்!) சுட்டுப் பொசுக்கிட்டாங்க! ஒண்ணு மட்டும் சொல்றன், நம்ம ஒடம்பில தெனாவட்டு இருக்குமட்டும் வீரப்பனப் பிடிங்க! அடிங்க!' எண்டு நினைச்சிக் கொண்டே துள்ளுறவங்க யாராயிருந்தாலும் ஒட்ட நறுக்கிடுவேன்! (கண் விழிகள் இரண்டும் சிவந்து மீசை துடித்தது.)

*விவேக்:* (முதல்ல இந்த மீசையை நறுக்கினா உங்கட ஒராங்உட்டான் மூஞ்சி சகிக்கக் கூடியவாறு இருக்கும்! என எண்ணியவாறே) அதுதானே உங்கள் எந்தக்



கொம்பனும் மணக்க முடியா... இல்லை நெருங்க முடியாது! அதை விடுங்கண்ணே, இப்ப உங்களோட பொழுதுபோக்கைப் பற்றிப் பேசலாமில்லீங்களா?

*வீரப்பன்:* அதுதானே அப்பப்ப பார்க்கிறீங்களே, ஒவ்வொரொவொருத்தனாக் கடத்திக்கிட்டிருக்கேனே! மற்றபடி வேட்டையாடுவம், காசு கையைக் கடிச்சா மரத்தைக் கடத்துவம்..... ஆ! கிரிக்கட் மாட்ச் பார்ப்பம்!

*விவேக்:* அம்மாடி! நீங்க பெரிய்ய ஆளுண்ணே! எந்த நாட்டு மாட்சு, எந்த பிளேயரு உங்களுக்குப் பிடிக்குமண்ணே?

*வீரப்பன்:* அட, நம்ம நாட்டு மாட்ச்தான் ஜோராப்பார்ப்பன். அதைவிடு, அந்தப்பய சச்சினு என்னமாதிரி ஜமாய்க்கிறாண்டா! ச்சீ! அவனுகளோட பார்த்தா நாமெல்லாம் சுண்டெலிங்கதான்!

*விவேக்:* அப்புறமண்ணே இந்த அமேரிக்காவுல விழுந்த அடியைப் பற்றி......

*வீரப்பன்:* பிளேனைக் கடத்திட்டுப்போய் இடிச்சவங்க சரியான பேமாலிங்கடா! கல்லையும் மண்ணையும் இடிச்சநேரம் அதவச்சிக் கொஞ்சம் காசு பார்த்திருக்கலாமுடா பாவிங்க!

*விவேக்:* (அவனவன் ரேஞ்சிற்குத்தானே எல்லாம் நினைப்பீங்கடா! என நினைத்துவிட்டு) உங்களிற்கெண்டு ஏதேனும் இலட்சியம், கனவு இருக்கிற மாதிரி....

*வீரப்பன்:* (பல்லெல்லாம் இளித்தவாறே) ஆமாடா! ஒண்ணு இந்த ஐசுவர்யாக் கண்ணுவோட டூயட் பாடணும், மைக்கல் ஜக்சனோடேயும் மடோனாவோடேயும் சேர்ந்து இந்தக் காட்டுக்கை கூத்தடிக்கணும்...ஆ (இழுத்துவிட்டு) லண்டனில மாட்ச் ஒன்று வைச்சி சச்சினுவோட விக்கட் எகிறுறமாதிரிப் பந்து போடணும்! ஹி! ஹி!..!

*விவேக்:* (இவ்ளோ நேரம் நல்லாத்தானே இருந்தான். அதுக்குள்ள ஏன் இப்படிப் பித்துக்குளியாட்டம் பினாத்த வெளிக்கிட்டான்!? என்று முழிந்தவாறே) உங்கட கனவெல்லாம் நிச்சயம் (பெருமூச்சு விட்டவாறே) நனவாகுமண்ணே! அப்புறம் நீங்க சில தீவிரவாதிங்களோட கூட்டு வச்சிருக்கிறதாப் பேசிக்கிறாங்களே, அவைங்களோட சேர்ந்து உங்களோட அடுத்த திட்டம் என்ன?

*வீரப்பன்:* (மீசையை முறுக்கியவாறே பெரிய வெடிச்சிரிப்புச் சிரித்து விட்டு) அதாண்டா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்ன வைச்சிக் கொஞ்சம் பணம் எடுக்கலாமுன்னு பார்க்கிறன் பொறு! (என்று கூறிவிட்டு செலுலாரை எடுத்து "ஆன்" பண்ணி யாருடனோ கதைத்தான்)

*விவேக்:* (உடம்பெல்லாம் வியர்க்க கண்ணை உருட்டியவாறே) ஹி..ஹி! சும்மா ஜோக்கடிக்காதேங்கண்ணே! (என்று கூறி மெதுவாக எழும்பி) அப்ப நான் வரலாமில்லீங்களா? (எனக் கும்பிடு போட்டவாறே நழுவ)

*வீரப்பன்:* டேய்! இவனைப் பிடிச்சு மரத்தோட கட்டுங்கடா! (என்று கத்திச் சில நிமிடத்தில் விவேக் மரத்துடன் கட்டுண்டு கிடக்க வீரப்பச் சிரிப்பு காட்டையே குலுக்கியது)

அடுத்தநாட் காலை முக்கிய சேதி:

**நகைச்சுவை நடிகர் விவேக் சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டார்!**

*(யாவும் கற்பனையே)*

## அமைதி எங்கே?

வீட்டிலே தொல்லையென்று விரும்பிய அமைதி செந்நெல்
காட்டிலே பெறவேயென்று கருத்தினிலெண்ணி நெஞ்சள்
பாட்டினை முணுமுணுத்துப் பாடியே சென்ற காலை
ஏட்டிலே காணா இன்ப எழில் நிறை காட்சி கண்டேன்

தெள்ளிய நீரினுள்ளே துவளுமென் கொடியிடையாள்
மெள்ளவே நீச்சலாடி மென்விரல் கைகளாலே
அள்ளியே இறைத்து நீரை அங்குமாய் இங்குமாக
புள்ளிமான் என்னநின்ற பேரெழில் காட்சி கண்டேன்

நடையிலே தயக்கம் நெஞ்சில் நாடிய அமைதியென்று
இடையிலே நின்று இன்ப எழிலுடைக் காட்சி கண்டு
கடைவாயில் முறுகல் பூக்க கண்ணொடு கருத்துமொன்றித்
தடையேதும் இன்றிக் கண்டேன் தண்ணெழில் காட்சியம்மை

மின்னலாய் பொழுது செல்ல விஞ்சிய இளமை துள்ள
பொன்னிறக் கதிர்கள் பாயப் பொங்கிடு மழகுமேனி
கன்னியும் நீரைவிட்டு கணத்தினில் மறைந்து சென்றாள்
என்னிலே புதிய சக்தி ஏற்றினாள் - எங்கு சென்றாள்.

தென்றலும் சிறப்புமிக்க செந்நெல்லுக் காடுமுள்ள
மன்றலில் அமைதிகாண்போம் மனநிறைவாக்குமென்ற
என்றனின் எண்ணம் சோர ஏந்திழை நெஞ்சில் நின்று
குன்றிடாக் காதல் தீயால் குலைத்தனள் அமைதியென்றும்.

நு.வைத்திலிங்கம்

*ஒருவர்:* எழுத்தாளனுக்கு என் பெண்ணை முற்றாக்கியது தப்பாய் போச்சடா!
*மற்றவர்:* என்னடா மச்சான், என்ன செல்லுறாய்?
*அவர்:* கலியாண வீட்டிலை வாழ்த்துப்பாக்களோட விமர்சன (ஆய்வு) உரையும் செய்ய வேணுமாம்.

ஜெ.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நிழல்களின் நிஜங்கள்

யதார்த்திகன்

இதுதான் நல்ல சந்தர்ப்பம். பிரியாவுமில்லை. பைரவி தனியாக ரியூசனால வருகிறாள். எப்ப கேட்டாலும் என்ன என்று கேட்டுப்போட்டு தெரியாது என்று சொல்லிப்போட்டுப் போறாள். நான் என்ன விசரனே? பிறந்த நாளுக்கு மினக்கெட்டுக் காட் போட்டன். இப்ப என்னடா எண்டால் ஒண்டும் சொல்லுறாள் இல்லை. ஓமோ இல்லையோ இரண்டில ஒண்டு இண்டைக்குக் கேட்கிறதுதான்.

மனதுக்குள் முடிவெடுத்தவனாக பைரவியின் சைக்கிளைத் தொடர்வதற்காக பெட்லை ஊண்டி மிதித்தான்.

"அட என்ன ஸ்பீட்டாப் போறாளடா".

கூடவந்த கோகுலனிடம் வாய்விட்டுச் சலித்தான் அரவிந்தன்.

"நீ என்னடாப்பா சுத்துற நீயே இப்படிச் சொன்னால், பெண்ணின்ரை அடிப்படையே ஸ்பீட் ஆனால் கொஞ்ச நேரம்தான். சேர் சொன்னது ஞாபகமிருக்குத்தானே"

அதாவது மானிட விந்திலே இரண்டு வகை. ஒன்று X மற்றது Y. பெண்ணின்ரை முட்டையோடு X வகை சேர்ந்தால் பிறப்பது பெண் குழந்தை. Y வகை சேர்ந்தால் பிறப்பது ஆண் குழந்தை. இது பாடத்திட்டத்தில இருக்கு. ஆனால் பெண்ணின்ரை அடிப்படையான X வகை விந்து வேகமாக நீந்திச் செல்லும். ஆனால் கனதூரம் தொடர்ந்து செல்லாது களைத்து விடும். Y வகை மெதுவாய்த்தான் செல்லும். ஆனால் உறுதியாய்ச் செல்லும். கருக்கட்ட செல்வதற்கு. குறைந்த தூரம் எண்டபடியாலதான் நாட்டில பெண்களின்ர எண்ணிக்கை ஆண்களைவிட அதிகம் என்று உயிரியலுக்கு அதாவது பாடத்திட்டத்திற்கு அப்பால் உள்ள சில விடயங்களை ஆசிரியர் சொன்னதை கோகுலன் அரவிந்தனுக்கு ஞாபகமூட்டினான்.

(ஏன் ஞாபகப்படுத்தினான் அரவிந்தனைச் சந்தோஷப்படுத்தத்தான். ஏனெண்டால் அவன் களைக்காமல் சந்தோஷமாய் பைரவியைக் கலைத்தால் தானே முடிவில் சந்திக்கடையில் சோடா வாங்கித் தருவான். இது என்ர கருத்துத்தான். நானாக கற்பனை செய்தது. ஆனால் இதுதான் அடிப்படை உண்மை. காதலுக்கு உதவி செய்கிற கோகுலன் போன்ற உற்ற (?) நண்பர்களின் நட்பைக் கொச்சைப்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை.)

அடக்கடவுளே! சினிமாத்தியேட்டர் இருட்டுக்கை களவாய்ச் சீக்கிரட் பத்தி முன்னுக்கு இருந்தவனுக்கு புகையை ஊதிப்போட்டு, இன்ரவலுக்கு லைட்டைப் போடப் பார்த்தால் பக்கத்து வீட்டுப் பரமசிவத்தார் இருக்க, சினிமாத்தியேட்டர் அட்டகாசத்தில இடையில புகுந்த வில்லன் பரமசிவத்தார் மாதிரி, தனியப் போன பைரவியோட, குச்சொழுங்கையால நடந்து வந்த ஆண்டு நாலு படிக்கும் அஸ்வினி பின்கரியலில தொத்திட்டாளே. இண்டைக்குப் பிளான் அவுட்.

"அவளுக்கு உன்னில பிளான் இருக்குதடா மச்சான்"

கோலாவை ஸ்ரோவால் உறிஞ்சியபடி முணுமுணுத்தான் கோகுலன்.

"என்னெண்டு சொல்லுவாய், அப்படியென்றால் எப்பவோ ஓமெண்டிருப்பாளே"

நன்கு களைத்துப்போயிருந்த அரவிந்தன் அங்கலாய்த்தான்.

"அடே பொம்பிள எண்டால் அப்படித்தானடா இழுத்தடிச்சுத்தான் சொல்லுவாளவை"

ஏதோ பெண்களின் உளவியலில் பி.எச்.டி முடித்தவனாக விளக்கம் கொடுத்தான் கோகுலன்.

"ஏன் அப்படிச் சொல்லுறன் எண்டால் நீ பேத்டே காட் போட்டாய். அவள் அதுக்கு ஒண்டும் சொல்லேல அதோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமில்லாட்டித் திருப்பித்தாரும் எண்டும் சொன்னாய், திருப்பித்தரவுமில்லை. அப்படியெண்டால் முடிவு என்னெண்டு சொல்லு பார்ப்போம்".

அரவிந்தனின் சிந்தனைக்காக ஒரு வினாவுடன் தனது விளக்கத்தை முடித்தான் கோகுலன்.

இப்படியும் ஒரு வழியா? அப்போ அவளுக்கு என்னில விருப்பம் இருக்குத்தான்.

கோகுலனின் வார்த்தைகள் எம் யாழ்ப்பாணத்துத் திறம் கசிப்புப்போல அரவிந்தனை மெல்ல மெல்ல உருவேற்றத் தொடங்கியது.

**(ஒரு விஷயம் உங்களிட்டைச் சொல்லலட்டே. வேறயாருக்கும் சொல்லிப்போடாதேயுங்கோ. அரவிந்தன் போட்ட பேத்டே காட்டை, வீட்டில யாரும் அரவிந்தனின் பெயரோடு பார்த்தால் பிரச்சினை வருமெண்ட பயத்தில பைரவி அதைக் கிழித்துக் கிழித்துப் பக்கத்து பத்தை வளவுக்கை போட்டுட்டாள். இப்ப எப்படித் திருப்பிக்கொடுப்பது?)**

சனசந்தடியற்ற ஒழுங்கை. அதோடு கிடங்கும் கல்லுகளும் நிறைந்த ஒரு கிரவல் ஒழுங்கை. வீடுகளும் பெரிதாக இல்லை. ரியூசனுக்குப் பிந்தினதால இந்தக் குறுக்கு ஒழுங்கையால கோகுலனும் அரவிந்தனும் விரைந்து கொண்டிருந்தார்கள். இல்லாட்டி மெயின் றோட்டாலதான் போவார்கள். அப்பத்தானே நிறைய ஆக்களைப் பார்த்துக்கொண்டு போகலாம். (ஆக்கள் என்றால் பெண்கள்தான். பெண்கள் என்றால் பெட்டையள்தான். ரியூசன் முடிய அல்லது ரியூசனுக்கெண்டு றோட்டால நிறையப் போவினமே அவயைத்தான் சொல்லுறன்) அப்பதானே சைக்கிளோடுற களைப்பில்லாமல் போகலாம்.

ஆனால் இன்றைக்குச் சரியாய் லேட்டாப்போச்சு. அதுதான் இந்தப்பாதை "ஆற்றாப்பா அந்த முடக்கில நிக்கிறது". அரவிந்தன் விழித்துக்கொண்டான்.

கிடங்குக்கை விழாமல் கவனமாய் சைக்கிள் ஓடிக்கொண்டிருந்த கோகுலன் அப்போதுதான் பார்த்தான். நிசாந்தனும் பிரியாவும் ஆமாம் பைரவியின்ரை பிரண்ட் பிரியாதான். இப்பதானே விளங்குது ரைபவி ஏன் தனியாகத் திரிகிறாள் என்று.

கவனம் தப்பியதால் பெரியதொரு கிடங்கில பக்கத்துப் பக்கத்தில் வந்த இருவரின் சைக்கிள்களும் விழுந்து ஏறியது. சைக்கிளிலே பெரியதொரு குலுக்கம். அவர்களது மனங்களைப்போல.

அரவிந்தனுடன் திரிந்தால் சோடா, ஐஸ்கிறீம் அல்லாட்டி வேற ஏதாவது தெருக்கடைகளில தின்னலாம் எண்டதைவிட, அரவிந்தன் பைரவியைப் பார்க்கிற சாட்டில பைரவியோட வாற பிரியாவைப் பார்த்துப் பாரதது கோகுலனுக்கும் சின்னதொரு பிளான். இப்ப என்னடா எண்டால் நிசாந்தன் பிரியாவை விழுத்திப்போட்டான்.

**(விழுத்திப்போட்டான் என்றால் வேறமாதிரி யோசிக்காதேயுங்கோ. கீழே விழுந்து காயமேதுமில்லை. சும்மா ஒரு இது. அதாவது நிசாந்தன் பிரியான்ரை மனதை விழுத்தி வெண்டுட்டானாம். அதால அவன் பெரியாளாம். அப்படியென்றால் என்னென்று உங்களுக்குத் தெரியுமே? இதுவரைக்கும் அவன் பெரியாளாய்ப் (?) போனது எனக்கு விளங்கவில்லை)**

## இன்றைய காதல்

நாயகனென தனை நினைத்து
நாயகியென்றவளைப் பின்தொடர்ந்து
நாற்சந்தியில் நாவில் நீருறக் காத்திருந்து
நாவறண்டு மூச்சிரைக்கப் பின் கலைத்து
நாரியும் நோவெடுக்க ஈற்றில் கண்டது
நாதியற்றதும் நடந்து தேய்ந்த குதிச்செருப்பும்.

குறும்பன்

கோகுலனுக்குச் சின்னதொரு வருத்தம்தான் என்றாலும் பெரியதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுமாயிருந்தது. ஏனென்றால் நல்ல காலம் பிரியாவை தான் பார்த்து முடிவு கேட்டிருந்தால், அவள் மாட்டன் என்று சொல்ல பேந்து வேறை ஒன்றைப் பார்க்கேக்கை இந்தக் கதை வெளியால தெரிஞ்சால் சிக்கலல்லவோ?

கோகுலன் ஏன் தெரியுமே இன்னும் யாரையும் கேக்கவுமில்லை. ஒன்றும் சரிவரவும் இல்லையென்று. அவன் இப்படித்தான் மனசுக்குள்ள வச்சிருப்பான். கேக்கத் துணிவு வராது. ஒருமாதிரியாகக் கேட்பம் என்றால் அந்தப்பெண் வேறு யாரோடும் கதைத்துக்கொண்டு போவாள்.

பிரியான்ர அனுபவம் புதிதல்ல. அதுதான் அவன் இப்போ பழையநிலைக்குத் திரும்பிவிட்டான். அவன்ரை ஒரே கவலை இனி யாரைப் பார்க்கலாம். அதுவும் யாரும் பார்க்காதவளாக இருக்கவேண்டும் என்பதேயாகும்.

நிசாந்தனைச் சந்திப்பதற்காக கோகுலனும், அரவிந்தனும் நீண்ட நேரமாகக் காத்திருந்தனர். எல்லாம் பைரவியின்ரை அலுவலாய்த்தான்.

நிசாந்தன் இப்ப படு பிசி. பிரியான்ரை உதவியோட பலபேருடைய காதல் முடிவுகளைப் பரிமாறிக் கொண்டிருந்தான்.

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்ற (இக்கருத்து மரபு வழியாக வந்ததனால் நாமும் ஏற்றுக்கொள்வோம்) திருமணங்களை நிகழ்த்தவென, நோர்வேயின் விஷேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் போல சொர்க்கத்தின் விஷேட தூதுவராகப் பூமியிலே, யாழ்ப்பாணத்திலே அவனின் வகுப்புத் தோழர்களுக்கு அமைந்திருந்தான்.

(அட இப்பக் கொஞ்சம் விளங்குமாப்போல கிடக்கல்லே. நிசாந்தனை ஏன் எல்லோரும் பெரிய ஆள் என்று சொல்லினமென்று. அது மட்டுமில்ல. எல்லோரும் காதலிக்கலாம். ஆனால் நிசாந்தன்ர ஆள் பிரியா கொஞ்சம் நல்ல வடிவுதான். நல்ல அம்சமான..... ஓம் ஓம் விளங்குது, விளங்குது. நீங்கள் எல்லோரும் என்னைத் திட்டுறது. பிரியா இப்போது நிசாந்தன்ர காதலி நீ என்னென்று கண்டபடி வர்ணிப்பாய்? நீங்கள் மின்னலே படம் பார்க்கேலையோ? என்ன இருந்தாலும் தமிழ்ப் பண்பாடு ஒன்று இருக்கல்லே. என்ன செய்யிறது. நானும் வயசுப்பொடியன்தானே. கண் கண்டதைப் பார்க்க மனம் அதுதான் மூளை கண்டபடி சிந்திக்குதே. அதுக்கு எல்லையில்லைப் பாருங்கோ. எல்லாத்தையும் எழுத முடியுமே?)

மிகுந்த களைப்பு, இருந்தாலும், வெற்றிவீரனாய் முகம்மலர வந்தான் நிசாந்தன். "பிரதீப்பின்ரை அலுவல் ஒருமாதிரி முடிச்சாச்சடா. கொஞ்சம் கஷ்டம் என்றாலும் என்ரை ஆள் ஒரு மாதிரிச் சரிப்படுத்திப்போட்டாள்".

பிரதீப் இவர்களது வகுப்புத் தோழன்தான். பிரதீப்பிற்கு வழிவிட்ட ஆண்டவனே எனக்கும் வழிவிடப்பா என்று சிறிதாக ஒரு பிரார்த்தனையை மேற்கொண்டான் அரவிந்தன்.

"என்ரை அலுவல் என்ன மாதிரியடாப்பா?" மிக ஆவலாகக் கேட்ட அரவிந்தனிடம் விளக்கம் கொடுக்கத் தொடங்கினான் நிசாந்தன்.

"எக்ஸாம் வருகுதடாப்பா. ஸ்ரடி லீவும் விட்டதால அவளைக் கண்டுபிடிப்பது கஷ்டமாய்க் கிடக்குது, அவளின்ரை வீட்டுப்பக்கமும் போகேலாது, வீட்டுக்காரரும் அப்படி இப்படி, உனக்குத் தெரியும் தானே. எதுக்கும் இப்ப படியடாப்பா, எக்ஸாம் முடிந்த கையோட நல்லூர்த் திருவிழாக்கை அவள் எப்படியும் வருவாள், நானெல்லோ சரிப்படுத்துவது"

அட இவனிட்ட விண்ணப்பம் போட்டால் எல்லாம் சரிவரும் போலகிடக்கு. நிசாந்தனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாவும் படிக்காமல் தற்சமயம் தவறவிட்டாலும் கலியாணப் புரோக்கர் வேலை செய்யலாம். சீதனத்தில வீதப்பங்கு கேட்கவே காணும் பிசினஸ் பிச்சுக்கொண்டு ஓடும் என்று கேட்டுக் கொண்டிருந்த கோகுலன் எண்ணிக்கொண்டான்.

உயர்தரப் பரீட்சை முடிவடைந்து விட்டது. வாழ்க்கையிலே **(என்ரை வாழ்க்கை மட்டும் சும்மாபோகுது. நான் சொன்னது அரவிந்தன்ர வாழ்க்கையை)** பல எதிர்பாராத திருப்பங்கள்.

யாரும் எதிர்பார்க்கவில்லை. சோதினை முடிந்த உடனே பைரவி கொழும்பில் உள்ள தனது சித்தியின் வீட்டிற்குச் செல்வாள் என்று.

இந்த நிகழ்வை யாருமே எதிர்பார்க்கவில்லை. நிலைகுலைந்து போனான் அரவிந்தன். நிசாந்தன் மட்டும் உறுதியாய் நின்றான். பிரியாவின் நண்பி பைரவி என்ற வகையில் பைரவியின் தற்போதைய முகவரி ஒருவாறு கிடைத்தது.

சகல பிரச்சினைகளையும் விளக்கி பாரியதொரு அறிக்கை நிசாந்தன், பிரியா, கோகுலன், அரவிந்தன் ஆகியோரின் கூட்டு முயற்சியிலே தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கை பைரவியின் முகவரிக்கு முத்திரை ஒட்டாமல் கொழும்பு சென்ற வகுப்புத்தோழி நிஷாவிடம் கொடுக்கப்பட்டது. சொறி கையளிக்கப் பட்டிருந்தது.

**(என்ன கதை விடுகிறாயா? நீங்கள் மனதுக்குள் சொல்லிறது கேட்கிறது. கதைதான் விடுறன் வேற என்ன? கடிதம் எண்டு சொல்லாமல் அதென்ன அறிக்கை என்று சொல்லிறாய்? அப்ப எப்படிச் சொல்லுறது? கடிதம் என்றால் இரண்டு மூன்று பக்கம் இருக்கலாம். ஆனா இது வந்து அரவிந்தனின் தற்கால நிலையை விளக்கியும், பைரவி சொல்ல வேண்டிய முடிவையும் தாங்களே எழுதி, பக்கம் பக்கமாய் அனுப்பினா அதைக் கடிதம் என்றே சொல்லுறது. கண்டதுமே வருகின்ற பள்ளிப்பருவத்துக் காதலை நான் எதிர்ப்பவனாய் இருந்தாலும், காதல் கடிதங்களை அவற்றின் புனிதத் தன்மையை (?) ஒரு நாளும் கொச்சைப்படுத்த மாட்டன். ஏனென்றால் உங்கட பக்கத்தில கனபேர் அதால அடிவாங்க என்ர உடம்பு இடந்தராது பாருங்கோ)**

செய்ததுக்குத்தானே பலன் கிடைக்கும். அதேபோல அரவிந்தனுக்கு வரவேண்டிய பதில்கள் இரண்டும் அடுத்தடுத்து வந்ததுதான் சின்னதொரு வியப்பு.

ஆம், ஏனோ தானோ என்று செய்த சோதினை மறுமொழி வந்திருக்கு. ஏ.எல். பாஸ் பண்ணிப் போட்டான். பல்கலைக்கழகத்திற்கும் தகுதி இருக்கு. ஆனால் வெட்டுப்புள்ளியால ஒன்றுமே கிடைக்காது. அடுத்ததாக பைரவிக்குப் போட்ட அறிக்கைக்கு அரசியல் பாணியிலேயே ஆறுதலாகப் பதில் வந்திருந்தது.

**(அந்தப் பதிலில் இருந்து ஒருசில வரிகள் மட்டும், உங்களின் சிந்தனைக்காக மட்டுமே தவிர ஒருவனுடைய அந்தரங்கங்களைச் சொல்வதற்காக அல்ல)**

........ அரவிந்தன்! நீங்கள் மென்மையானவர். நீங்கள் என்மேல் வைத்த காதல் உண்மையானதுதான் என்பதை இப்போது புரிகின்றேன். இன்றைய சூழலிலே காதலிப்பதற்கு ஒரு சராசரி ஆணுக்குத் தேவைப்படுவது அழகிய கட்டுடல், அதைப்போர்த்திய வெண்தோல், அதை மூட நவ உடை, நளினம்! நாகரீகம்! ஆக மொத்தம் அடிப்படைத்தகமை புறப்பூச்சு மட்டுமே.

என்னுடன் ஒரே வகுப்பில் இருந்து படித்திருக்கிறீர்கள், ஆனால் பழகியிருக்கிறீர்களா? என் அழகை மட்டும் வர்ணித்து அதற்கு நீங்கள் அடிமையானதை விளக்கியிருக்கிறீர்கள், என் மனதை உங்களால் புரிய முடிந்ததா?

கற்கவேண்டிய காலத்தில் கல்விதான் தேவை. முயற்சிக்கு மட்டுமே பலன் கிடைக்கும் என்பது எனது அசையாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை. இன்று பல்கலைக்கழகத்திற்கு நான் தெரிவு செய்யப்படப் போகிறேன். ஈற்றிலே ஒரு கௌரவமான தொழில் செய்யும் வாய்ப்பும், என் எதிர்காலமும் என்னால் கூற முடியும். உங்களால் உங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கூறமுடியுமா?

காதலுக்குக் கண் இல்லை, அதற்குக் கல்வியும் தேவையில்லை, அது அந்தஸ்த்தும் பார்ப்பதில்லை, இவை தென்னிந்திய திரையுலகத்து கதை புனைபவர்க்கு உண்மையாகவும், உணர்வு பூர்வமாகவும், படங்களும் ஓடக்கூடியதாகவும் இருக்கலாம். உங்களினால் இதை நிஜவாழ்வில் ஏற்க முடியுமா?


உணர்வுகள் கொண்டு நீங்கள் உரமாய் எழவேண்டும். உண்மை எதுவோ அதன் இலக்கணம் புரியுங்கள். நெஞ்சிலே உறுதியை நெருப்பென வளர்த்து, வாழ்வில் என்றும் வெற்றியைப் பெறவேண்டும்.

அறிவுரைகள் கசக்கலாம், அறிவுரை தருபவர் மேல் கோபத்துடன் வெறுப்பும் ஏற்படலாம். ஆனால் யதார்த்தங்கள் இன்றல்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் உணரப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கல்விகள் கற்றுயர்ந்து வாழ்விலே உங்கள் நிலையை அறியும் வேளையில் மட்டுமே உங்களைப் புரியக்கூடிய வாழ்க்கைத் துணையைத் தேடுங்கள். அப்போது நான் உங்களுக்குத் தகுதியானவளாக இருக்கலாம்......

(சம்பவங்களும், பெயர்களும் கற்பனையே. தவறி யாருடைய வாழ்வின் சம்பவங்களுடன் ஒத்துப்போகின் தற்செயலானதே.)


எரிக் கணேஷ்



உங்கள் அழகை மென்மேலும் மெருகூட்ட உங்கள் முகப்பொலிவுக்கமைய பல் கட்ட வேண்டுமா?

இதற்கு முன் வேறெங்காவது பல் கட்டி உங்களுக்கு திருப்திப்படாத பட்சத்தில் அதனை மீள அழகிய முறையில் சரிபார்த்துக்கொள்ளவும்.

மிதந்த பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்.

கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக்கொள்ளவும்.



எரிக் கணேஷ்

பல் கட்டுமிடமும், மூக்குக்கண்ணாடி அகமும்.

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 2486

கிளைகள்

91.கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.

80, பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
சுன்னாகம்.

விஷேடகுறிப்பு: மிதப்புப் பற்கள் மூன்று மாதங்களில் சீரமைக்கப்படும்.
சுன்னாகத்திலும், கொக்குவிலிலும் உள்ள எமது கிளைகளில் குறைந்த கட்டணத்தில் செய்யப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழன்று ஓய்ந்த சூறாவளி

6 அடி 5.5 அங்குல உயரம் (நடமாடும் மனித உலக வர்த்தக மையக் கோபுரம்!); மெலிந்து முறுக்கேறிய சரீரம்; கண்களில் எப்போதும் பளிச்சிடும் தீட்சண்யமான பார்வை; சாதிக்க நினைக்கும்போது அசாதாரணமாக ஊற்றெடுக்கும் ஆக்ரோஷம்: சாதனைச் சிகரத்தின் உச்சியில் நிற்கும்போதும் நிதானமிழக்காத சுபாவம், ஆம்! இவை யாவற்றையும் ஒருங்கே கொண்ட அந்தத் தனிப்பெரும் மனிதன்தான் Courtney Andrew Walsh!. பொருளாதார அலைகளும்பிரபல்ய அலைகளும் எம்பிக் குதித்தாடும் துடுப்பாட்டச் சாகரத்தில் நிலை கொண்டெழுந்து சுழன்று வீசிய பெரும்புயற்காற்று!

## புயல் மையம் கொண்ட வரலாறு!

மேற்கிந்தியத்தீவுகளில் ஒன்றான ஜமெய்க்காவில் கிங்ஸ்ரன் மாநகரத்தில் குழப்பகரமான குடும்பப் பின்னணியில் எரிக் ஜோன் தம்பதியினர்க்கு மகனாக வந்துதித்தார் கொட்னி வோல்ஸ். இளமைப்பராயம் முதல் தாயாரின் அரவணைப்பிலேயே வளர்ந்த வோல்ஸ், பொழுதுபோக்கிற்குப் போதிய துணையற்ற நிலையில், தனது தாயார் சமையல் வேலை செய்யும் கென்சிங்ரன் கிரிக்கட் கிளப்பிற்கு, தனது தாயுடன் சென்று வந்தார். அப்போது அவரிற்கு வயது வெறும் ஏழு மட்டுமே!

**அனல் க. சே.**

அப் பருவத்திலேயே அங்கு பயிற்சியெடுக்கும் சிரேஷ்ட வீரர்களிற்கு விளையாட்டு விளையாட்டாக பந்து வீசத் தொடங்கினார் வோல்ஸ். அப்போது அவர் வீசிய 'Legbreak" பந்துகள் கென்சிங்ரன் கிளப்பின் பயிற்றுவிப்பாளரின் கவனத்தை ஈர்த்தன. அப்போதுதான் வோல்ஸ்சின் வாழ்க்கையிலும் திருப்பங்கள் ஏற்படத் தொடங்கின.

வோல்ஸ்சின் உயரத்தை அவதானித்த அப்பயிற்றுவிப்பாளர், அவரை வேகப்பந்து வீச்சாளராகப் பயிற்சியெடுக்குமாறு அறிவுறுத்தினார். அன்று மையங்கொள்ளத் தொடங்கிய புயல்தான், சுமார் முப்பது வருடங்களிற்கு மேலாக உலகின் மூலைமுடுக்கெங்கும் உள்ள துடுப்பாட்டக்காரர்களின் விக்கட்டுக்களை எகிறிப்பாய வைத்தது!

தனது பள்ளிப்பருவத்திலேயே அபரிதமான திறமைகாட்டிய கொட்னி, படிப்படியாக



ஜமெய்க்கா அணி, கென்சிங்ரன் கிரிக்கட் அணி, மேற்கிந்தியத்தீவுகள் A அணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

English County அணியான Gloucester shire (இந்த அணிக்காக 1984–1996 மற்றும் 1998 வரை விளையாடியதுடன், இடைக்காலத்தில் அணித்தலைவராகவும் இருந்து அணியின் முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றினார்) போன்றவற்றிற்காக விளையாடி, 1984 நவம்பர் மாதம் 9ஆம் திகதி அவுஸ்திரேலியாவிற்கெதிராக பேர்த் மைதானத்தில், மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர்கள் வரிசையில் மகா ஜாம்பவானான கிளைவ் லொயிட்டின் தலைமையின் கீழ் தனது கன்னி டெஸ்டிற்காகக் களமிறங்கினார்.

## சுழன்று ஆடியது சூறாவளி!

ஆரம்ப காலங்களில் மைக்கேல் ஹோல்டிங், ஜோல் கார்னர், மல்கம் மார்ஷல் போன்ற அதிவேகப் பந்துவீச்சில் அசகாயசூரர்கள் மத்தியில் இலைமறை–காயாக இருந்தபோதும், துல்லியமும், சாதுரியமும் மிக்க பந்து வீச்சுக்களால் இடைமிடையே தன்னை இனங்காட்டிக் கொள்ளவும் அவர் தவறவில்லை.



மற்றைய பல வேகப்பந்து வீச்சாளர்களைப் போன்று, அதிக தூரம் ஓடிவந்து, ஆக்ரோஷமான பாணியில் பந்து வீசும் பாங்கற்றவர் வோல்ஸ். வித்தியாசங்கள் நிறைந்த வேகமாற்றங்களுடன் அதிகளவிலான விக்கட்களை வீழ்த்த உதவிய Off-cutters, Short-pitched ஆக வீழ்ந்து எகிறிப்பாயும் Bouncers, தேவைக்கேற்ப உபயோகிக்கும் In-dippers மற்றும் Leg-cutters உடன் கொட்னி பந்துவீசும்போது, எந்தவொரு சிறந்த துடுப்பாட்ட வீரரும் சுழிக்காற்றில் அகப்பட்ட துரும்பாகச் சுழல்வது தவிர்க்க முடியாதது. தனது பந்துவீசும் பாணியை (Action) மாற்றாது வேகத்தை மாற்றக்கூடிய அரிய திறமையும் அவரிடம் இருந்தது. அது மட்டுமன்றி நீண்டநேரம் சேர்ந்தாடும் துடுப்பாட்ட இணைகளைச் சடுதியாகத் துவம்சம் செய்யும்ஆற்றலையும் கொட்னி கொண்டிருந்தார்.

வோல்ஸ்சின் சில பந்துவீச்சுச் சாதனைகள் அபரிதமானவை. சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டிகளில் விளையாடத் தொடங்கிய இரண்டாவது வருடமே (1986) சார்ஜாவில் நடந்த இலங்கைக்கெதிரான ஆட்டமொன்றில் 4.3 ஓவர்கள் பந்துவீசி, ஒரேயொரு ஓட்டத்தை விட்டுக்கொடுத்து 5 விக்கட்களை வீழ்த்தினார். 1994–95 பருவத்தில் நியூசிலாந்திற்கெதிராக வெலிங்ரனில் நடைபெற்ற டெஸ்ற் போட்டியில், ஒவ்வொரு இன்னிங்ஸிலும் முறையே, 7/37, 6/18 என விக்கட்களைச் சாய்த்துத் தனது அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 322 ஓட்டங்களால் வெற்றிபெற வழிசமைத்தார்.

1988இல் பிறிஸ்பேனில் அவுஸ்–திரேலியாவிற்கெதிரான டெஸ்ற் போட்டியில் 'ஹட்ரிக்' சாதனையையும் நிலைநாட்டினார். 1994இல் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அணித் தலைவராகப் பொறுப்பேற்று, 1995 ஏப்ரல் வரை பணியாற்றி மீண்டும் 1996–1998 வரை அணித்தலைவராக இருந்தார். இவரது தலைமைக் காலத்திலேயே இவரின் ஆலோசனைப்படி மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரிக்கட் சின்னம் வீரர்களின் இதயத்தைத் தொட்டு மேலே இருக்கும் வகையில் அவர்களிற்கான அங்கிகளில் இடதுபுறம் மாற்றப்பட்டது.

காலம் செல்லச்செல்லப் புயலின் உக்கிரம் அதிகரித்து 'அப்பாவித் துடுப்பாட்ட வீரர்களின் விக்கட்டுக்களை அநாயசமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவு கொண்டவாறே இருந்தது! 100கள் 200களாகி, அவை 300களாகிப் பின் 400களாகித் தொடர்ந்து 500களாகும் மட்டும் சூறாவளி சுழன்றடித்துக் கொண்டே இருந்தது!

## மெல்லத் தணிந்தது புயல்!

சிம்பாப்வே வீரர் ஹென்றி ஓலங்காவின் விக்கட்டை வீழ்த்தி டெஸ்ற் கிரிக்கட் வரலாற்றில் அதிகூடிய விக்கட்டைக் கைப்பற்றியவுடன் வோல்ஸ் ஓய்வு பெற்று விடுவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவரின் எண்ணமோ வேறுவிதமாக இருந்தது. அனுபவமும் ஆற்றலும் மிக்க வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் இல்லையே என்ற ஏக்கம், இன்னும் மனவைராக்கியமும் உடல் வலிமையும் தன்னிடம் இருப்பதனால் மேலும் மகத்தான சாதனைகளை நிறைவேற்றும் நோக்கம் காரணமாகத் தொடர்ந்து விளையாடத் தீர்மானித்தார்.



மற்றைய அதிசிறந்த வேகப்பந்து வீச்சு வீரர்களை விட வோல்ஸ் அதிககாலம் ஆரோக்கியமாக நிலைத்து நின்றமைக்கு ஆதாரங்களும், காரணங்களும் பலவுண்டு. வேகப்பந்து வீச்சாளர் வரிசையில் தனியிடம் பெற்ற சேர்.ரிச்சட் ஹாட்லி தனது ஓய்வின் பின்னர் படுக்கையிலிருந்து எழும்போது தசை இறுக்கம் ஏற்பட்டு அவஸ்தைப்பட்டதும், ரொம் வாஸ் எனும் இன்னொரு வேகப்பந்து வீச்சாளர் Leg-cutter வீச உபயோகித்த இருவிரல்களையும் மடித்து அசைக்க முடியாது வேதனைப்பட்டதும் போன்ற உபாதைகள் கொட்னிக்கு ஏற்படவில்லை.

இதற்கான காரணங்கள் அவர் கையாண்ட சில உத்திகளும், மேலாக இறைவன் இயற்கையாகவே கொடுத்த வரமுமாகும். விளையாடத் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து மாறாதிருந்த மெல்லிய உடல்வாகு, குறுகிய தூரத்துடன் நிறைவடையும் Run-Up, அதிகப் பிரயத்தனமற்ற Action போன்ற காரணிகள் கொட்னியின் நீடித்த சாதனைக்குப் பெருந்துணை புரிந்தன. தனது ஆற்றலிற்கு உட்பட்டு பந்து வீச்சுக்களை மாற்றக்கூடிய அவரின் திறனிற்கு அண்மையில் இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ற் போட்டியில் அவர் அறிமுகப்படுத்திய மிகமெதுவாக வீசப்பட்டுப் பின்னர் எகிறிப் பாயும் பந்துக்களைக் குறிப்பிடலாம்.

வோல்ஸ்சின் சாதனைக்கு முன்னர் சொந்தக்காரரான இந்திய All-Rounder கபில்தேவ், தற்போதும் விளையாடும் வாசிம் அக்ரம் போன்றோர் தமது இறுதிப் பருவங்களில் விக்கட் வீழ்த்த அல்லாடியதும், அல்லாடுவதும் தெரிந்ததே. இங்கும் வோல்ஸ் வித்தியாசமானவராகவே தெரிகிறார். தனது கடைசி இரு டெஸ்ற் போட்டித் தொடர்களிலும் (முறையே இங்கிலாந்து, தென்னாபிரிக்காவுடன்) 34, 25 விக்கட்களை வீழ்த்தியதன் மூலம் இன்னும் சில வருடங்களிற்கு விளையாடக்கூடிய ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

எப்படியோ லோட்ஸ், பேர்த், கராச்சி, ஹாறாறே, ஈடின்காடின், ஜோகன்னஸ்பேர்க் என்றவாறு உலகின் உன்னதக் கிரிக்கட் மைதானங்களிலெல்லாம் தூள்கிளப்பிய பெரும்புயல், ஏப்ரல் 23, 2001 அன்று தான்மையம் கொண்ட சொந்த மைதானமான குயின்பார்க் ஓவலில், தென்னாபிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியைத் திணறடித்துவிட்டு மெல்ல ஓய்ந்தது!

## புயல் விட்டுச் சென்ற பதிவுகள்!

இலகுவில் புரிந்து கொள்ளமுடியாத கொட்னி எனும் பெரும்புயல், நெருங்கிப் பழகிக்கொண்ட பிற்பாடு விட்டு விலக முடியாத மெல்லிய தென்றல் என்பது அவருடன் அனுபவப்பட்டவர்களின் கூற்றுக்களிலிருந்து புலனாகின்றது. எந்த அணியையும் சேர்ந்த மூத்த வீரர்களிடம் காட்டும் மரியாதை, தனது அணித்தலைவர்கள் தன்மேல் கொண்ட நம்பிக்கையைக் காப்பாற்றுதல், தன்சக வீரர்களிற்கு நம்பிக்கை ஊட்டல், புதிய வீரர்களைப் பயிற்றுவித்து உற்சாகப் படுத்துதல், இரசிகர்கள் மத்தியில் காட்டும் மனிதநேயம் எல்லாவற்றிலும் மேலாக துடுப்பாட்ட வீரருடன் முறையற்ற விதத்தில் நடந்து கொள்ளாமை (மக்ராத்தும் இருக்கிறாரே!) போன்ற காரணங்கள் கொட்னியின் பந்துவீச்சுச் சாதனையிலும் பார்க்க அதி உன்னத தானத்தைச் சர்வதேசக் கிரிக்கட் வரலாற்றில் அவரிற்கு ஏற்படுத்திக் கொடுத்து விட்டன எனில் மிகையன்று.

பந்துவீச்சுத்துறையில் கொட்னி ஏற்படுத்திய பதிவுகள் மறக்கமுடியாதவை. டெஸ்ற் ஆட்டங்களில் 30019 பந்துகள் வீசி 519 விக்கட்கள் (உலகசாதனை), சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 10822 பந்துகள் வீசி 227 விக்கட்கள் என்பது யாருமே நம்புவதற்கு கடினப்படும் உன்னத பெறுபேறென்றால் ஐயமில்லை. முதல்தர ஆட்டங்கள் வரை பந்து வீச்சுத்துறையில் கொட்னியின் பங்களிப்பை மிக இலகுவாக இவ்வாறு விளக்குகிறார் கொலின் குறோவ்ற் 'டெஸ்ற் போட்டிகளில் ஏறத்தாழ 5000 *Overs* பந்து வீசியுள்ள கொட்னி ஒவ்வொரு பந்துவீச்சிற்கும் 20m தூரம் Run-up எடுத்துக்கொள்வதனால், 600Km தூரம் பயணஞ் செய்திருக்கின்றார் ஆம்! கிரிக்கட் வரலாற்றில் வோல்ஸ்சின் ஆத்மார்த்தமான பங்களிப்பைத் துல்லியமாக் காட்டும் வாசகங்கள்!

துடுப்பாட்டத்துறையில் வோல்ஸ் பெரிதும் சோபிக்கவில்லையென்றாலும், முதல்தர ஆட்டங்களில் Gloucestershire இற்காக 66ஓட்டங்கள், டெஸ்ற் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவிற்கெதிராக ஆட்டமிழக்காது 30 ஓட்டங்கள், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுடன் 30 ஓட்டங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

> **'ரெஸ்ற் போட்டிகளில் மாலை 4மணியோ அல்லது இறுதி ஓவரோ துடுப்பாட்ட வீரரை ஓய்வு கொள்ள விடமாட்டார் கொட்னி. திடீரென்று அவரின் பந்துவீச்சின் போக்கு மாறும்'**
>
> **சச்சின் டெண்டுல்கர்**

துடுப்பாட்ட வீரர்களைக் கிலி கொள்ளச்செய்யும் தொடக்கப் பந்துவீச்சுச் சோடிகளில் முக்கியமான கொட்னி வோல்ஸ்–கட்லி அம்புரோஸ் இணை 49 டெஸ்ற் போட்டிகளில் 421 விக்கட்களைச் சாய்த்து பாகிஸ்தானிய இணையான வாசிம்–வக்கார் இணைக்கு (472 விக்கட்கள் 49 போட்டிகளில்) அடுத்தபடியாக இருந்தாலும், ஒரே காலப்பகுதியில் அதிக விக்கட்களைச் சாய்த்த பெருமை கொட்னி–கட்லி இணைக்கே உண்டு. அம்புரோஸ் உடன் இணைந்து வோல்ஸ் பந்துவீசும் பாங்கு கிரிக்கட் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்புப் பெற்றமை வரலாறு.

பந்துவீச்சில் காட்டிய சாகஸங்களைவிட ஓர் இலட்சிய வீரனாகவும், இலட்சிய மனிதனாகவும் அவர் வாழ்ந்தமையும், அதற்காகப் பெற்ற பட்டங்களும், பரிசுகளும் அளப்பரியன. 1987இல் தனது 25ஆவது வயதில் பாகிஸ்தானுடனான உலகக்கிண்ணப் போட்டியில் சட்டத்திற்குட்பட்ட ஆயினும் மனச்சாட்சிக்கு முரண்பட்ட விதத்தில், பாகிஸ்தானின் கடைசித்துடுப்பாட்ட வீரர் சலீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜபாரை 'ரன் அவுட்' ஆக்கச் சந்தர்ப்பம் கிடைத்தபோதும், அதனைச் செய்யாது விட்டதனால் பாகிஸ்தான் ஒரு விக்கட் வித்தியாசத்தில் வென்றது! ஆனால் கொட்னியின் பெயர் 50 000 பார்வையாளர் மனதில் ஆழமாகப் பதிந்து, கிரிக்கட் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்டு, பாகிஸ்தானின் அப்போதைய ஜனாதிபதி ஜெனரல் ஷியா– உல்–ஹக்கின் செங்கம்பள கௌரவத்தையும் அவரிற்குப் பெற்றுக் கொடுத்தது.

கிரிக்கட்டிற்கு அப்பாற்பட்டுத் தனிமனித ரீதியிலும் கொட்னி பல கௌரவங்களைப் பெற்றுள்ளார். 1987இல் உலகப்புகழ் பெற்ற 'விஸ்டன்' கிரிக்கட் சஞ்சிகையின் அந்த ஆண்டிற்குரிய 5 சிறந்த வீரர்களிலொருவர், மேற்கிந்தியத்தீவுகள் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டம், 1998 ஜமெய்க்காவின் தூதர்களிலொருவராக நியமிக்கப்பட்டமை, 1999இல் அதியுயர் குடிமகனிற்குரிய விருதுகளில் 3ம் நிலைக்குரிய Orde Of Jamaica விருது பெற்றமை, 2000ம் ஆண்டு மே மாதம் ஐக்கிய நாடுகளில் நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டமை போன்றவை அவற்றுட் சிலவாகும்.

கொட்னி வோல்ஸ் 1999 உலகக்கிண்ணப் போட்டிகளின் போது, 'Courtney-Heart of the Lion" என்னும் தனது சுயசரிதையை வெளியிட்டார். வோல்ஸிற்கு ஓர் ஆண், ஒரு பெண் ஆக இரு குழந்தைகள் உள்ளனர். தனது சொந்த இடமான கிங்ஸ்ரனில் ஒரு விளையாட்டு உபகரணங்கள் விற்பனை நிலையமொன்றையும் அவர் நடத்தி வருகின்றார்.

கிரிக்கட் துறையில் கூடுதல் மதிப்புமிக்க டெஸ்ற் போட்டிகளில் கொட்னியின் 519 விக்கட் சாதனையை முறியடிக்கும் சாத்தியம் கொண்டவர் எனப்பலர் கருதப்படுகின்றனர். இவர்களுள் வாசிம் மற்றும் சேன் வோர்ன் ஆகியோர் 400 விக்கட்டுக்களைக் கடந்தபோதும், அவர்களின் வயதும் ஏற்கனவே 30களைத் தாண்டிவிட்டது. மக்ராத், பொல்லொக், முரளிதரன் ஆகியோருக்கு வாய்ப்புள்ளபோதும், முரளிதரனின் எதிர்காலமே கூடிய பிரகாசம் மிக்கதாக உள்ளது.

எவ்வாறோ காலம் வேகமாக ஓடிவிட்டது. 16 வருடங்களிற்கு மேலாகக் கிரிக்கட் வரலாற்றில் பெரும்புயலென வீசிய வோல்ஸ் எனும் தென்றல் பொருத்தமான காலத்தில் அதியுன்னத நிலையிலிருக்கும்போது மெல்லத் தணிந்தது! ஆனால் அதன் சுகந்தம் இன்று மட்டுமல்ல என்றென்றும் வீசியவாறே இருக்கும்.

## வாசகர்களே! புதிய படைப்பாளர்களே!

அனேகமான இலக்கிய வெளியீடுகள் தமக்கென ஒரு பாணியினையும் தாமறிந்த ஒருசில படைப்பாளர்களையும் கொண்டு தமது வெளியீடுகளை வெளியிட்டு வந்தார்கள், வருகிறார்கள்.

**உள்ளம்** தனக்கென ஒரு பாணியினைக் கொண்டு வெளிவருகின்றது. அந்தப் பாணியானது வேறு இலக்கிய வெளியீடுகளிலிருந்து எமது அறிவுக்கு எட்டியவரை வித்தியாசமாகவும், வெளியிடுகின்ற படைப்புகளை புதிய புதிய படைப்பாளர்களிடமிருந்து வெளியிடும் நோக்குடனும், ஒவ்வொரு கதிரிலும் ஒரு புதிய படைப்பாளரையாயினும் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற இலக்கிய இலட்சிய வெறியுடன் நாம் இயங்கிவருகின்றோம். எனவே உங்கள் புதிய படைப்புகளை எங்கே விதைப்பது என்ற ஆவலுடன் களத்தினைத் தேடி அலைகின்ற உங்கள் ஒவ்வொருவரினதும் கனவுகளை **உள்ளம்** இடமுள்ளவரை நிவர்த்தி செய்யும் என்பதில் உங்கள் எவருக்கும் ஐயப்பாடு இருக்கத் தேவையில்லை. உங்கள் புதிய படைப்புக்களை வெளியிடுதற்காக எமது அலுவலக முகவரிக்கு தவறாது நம்பிக்கையுடன் அனுப்பிவையுங்கள்.

- சிரேஷ்ட ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் சிறப்பு மலர் வெளியீட்டுவிழாக் காட்சிகள் சில.



பிரதம விருந்தினர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் "உள்ளம்" முதற்பிரதியை வெளியிட்டு வைக்க கழக போசகர் அதனை பெற்றுக் கொள்கிறார்.



பிரதம விருந்தினர் உரையாற்றுகிறார்



கௌரவ விருந்தினர் உரையாற்றுகிறார்

**உள்ளம்**
கதிர் 01 வெளியீடு
15-04-2001



"உள்ளம்" மலரினை ஆய்வு செய்த கலாநிதி சபா. ஜெயராசா அவர்களுடன் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் கா.குகபாலன்.




வெளியீட்டு விழாவில் "உள்ளம்" சிரேஷ்ட ஆசிரியர் வெளியீட்டுரை நிகழ்த்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பு விருந்தினர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு.மா.சின்னத்தம்பி அவர்கள்



சிறப்பு விருந்தினர்,
கூட்டுறவுப்பரிசோதகர்
திரு.ந.தவநாதன் அவர்கள்



வரவேற்புரையாற்றுகிறார்
மகளிர் குழுச் செயலாளர்
திருமதி. ச.சிவகலா அவர்கள்



மகளிர் குழுத் தலைவி
திருமதி.ர.கோமதி அவர்கள்





உள்ளம் வெளிவந்த
உவகையில்
எமது கழக அங்கத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிந்தனைக்கு...

# பெற்றோரும் பிள்ளைகளின் திருமணங்களும்





தம் இல்லறத்தை நல்லறமாக்கி ஈன்ற தம் பிள்ளைகளின் இல்லற வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதில் அல்லது அவர்கள் அமைத்துக் கொண்டதை முடித்து வைப்பது என்று தம் பிள்ளைகளின் திருமணங்களை நிச்சயித்துக் கொள்கின்ற பெற்றோர்களினது மனநிலைகள் மற்றும் அத்திருமணங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்ற, நிராகரிக்கின்ற, மறுக்க முடியாத வகையில் விதி என்று தம்மையே ஏமாற்றி ஏற்றுக் கொள்கின்ற பிள்ளைகளினது மனநிலைகளின் வேறுபாடுகள், பெற்றோர்களினது எதிர்பார்ப்புகள், விருப்பு வெறுப்புகள் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்ற பொழுது, ஒவ்வொருவரது மனநிலைகள் எவ்வாறு அமைகின்றன என்ற வகையிலும் சாதாரணமாக எம் கண்கூடு நாம் காண்கின்ற பிரச்சினைகளை மாத்திரம் சுட்டிக்காட்டி, பிரச்சினைகள் வரும்போது பிரதான முடிவெடுப்பவர்களும் அனுபவத்தில் முதிர்ந்தவர்களுமான பெற்றோர்கள் சிந்திக்க சில விடயங்களைத் தந்து முடிவினை வாசகர் பக்கம் விட்டுச் செல்கிறது இக்கட்டுரை.

காதல் திருமணங்கள் எங்கும் மலிந்த நிலையிலும் (குறிப்பாக யாழ்ப்பாணத்தில் திடீர் உயர்வு காணப்படுகின்றது) தம் பிள்ளைகள் காதலிப்பதை விரும்பாத பெற்றோர்களே நூற்றிற்கு தொன்னூற்றொன்பது வீதம் காணப்படுகின்றார்கள் என்று சொன்னால் அதை மறுப்பதற்கில்லை.

ஆனால் அவர்கள் அவ்வாறு விரும்பாமல் வெறுக்கின்றார்களே ஏன்? என்பதற்குக் காரணம் தேட முயன்றால், தம் பிள்ளைகள் ஏமாற்றப்பட்டு விடுவார்கள் என்று வழமையாகக் கூறும் முக்கிய காரணத்துடன் அவர்கள் மனதில் வியாபிப்பது தமது கௌரவப் பிரச்சினைதான் என்றால் மறுப்பவர் எவருமில்லை.

இந்த வகையில் பெற்றோர்கள் யாவரும் எப்பொழுதும், எச்சந்தர்ப்பத்திலும் தம் பிள்ளைகளின் வாழ்க்கையை அழிப்பதற்கு முயலுவதில்லை என்ற கூற்று எப்பொழுதும் உண்மையாகும்.

எனினும் அனேக பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் விருப்பு வெறுப்பிற்கு மதிப்பளியாது தம் விருப்பத்தினை ஏன் திணிக்க முயல்கிறார்கள் என்று ஆராய முற்படின் கிடைக்கும் விடைகள் அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு முக்கியமாகப் படுவது தம் கௌரவத்தை நிலைநாட்டல். இதற்கு அவர்கள் சாதி, பணம், அந்தஸ்து என்ற வகையிலும் சமூகத்தில் குறித்த ஒரு நிலையில் இருக்கும் தாம், தம் பிள்ளைகளின் திருமண பந்தத்தின் மூலம் மேலும் ஓரிரு படிகள் உயர வேண்டும் என்ற அவாவும் அவர்களை தம் பிள்ளைகளின் நியாயமான விருப்பு வெறுப்புகளுக்கு செவிசாய்க்காத நிலைக்கு இட்டுச் செல்கிறது. இங்கே காதலிக்கும் அல்லது காதலிக்க முயலும் பிள்ளைகளைப் பற்றிச் சற்று நோக்குவோம்.

தமக்கொத்த துணையைத் தேடுவது ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையாயினும், முற்றிலும் பிறரில் அதாவது பெற்றோர் அல்லது பாதுகாவலரில் தங்கி வாழ்கின்ற சிறுபராயத்தினர் அதாவது எதிர்காலத்திலே தாம் எவ்வாறு இருக்கப் போகின்றோம் என்ற நிலையறியாத பதின் வயதினர் காதலிப்பது என்பது ஒரு விரும்பத்தகாத செயலாகும். இவ் வயதானது எதிர்ப்பாலாருடன் ஒரு இடைவெளியினை வைத்துக் கொண்டு

நட்புறவு வைத்துக் கொள்ளவே ஏற்றது. இதன் பின்னர் உங்கள் தொழில் மற்றும் எதிர்காலத்தினை அணுகுகையில் உங்களுடைய மனதிற்கு ஏற்றவர்களை தேர்ந்தெடுப்பதும், அவர் அதற்கு ஒத்துப்போவதும் இயல்பானது, வரவேற்கத்தக்கது.

ஆனால் இன்று யாழ்ப்பாணத்தை மட்டும் ஏன் பிற இடங்களையும் உற்று நோக்கின், பாடசாலைப் பருவத்துக் காதல்கள்தான் மிக உயர்வாகக் காணப்படுகின்றது.

இப்பாடசாலைக் காதலர்கள் அல்லது முயற்சியற்று பெற்றோர் பணத்தில் தங்கி வாழும் காதலர்களிடம் கேட்பது என்னவென்றால், நீங்கள் எவ்வாறு உருவாகப் போகிறீர்கள், உங்கள் துணை எவ்வாறு முன்னேறப் போகிறார் என்ற எந்த முடிவும் தெரியாத நீங்கள் உங்கள் பள்ளிப்பருவ எதிர்கால கனவுகளை மாத்திரம் மூலதனமாகக் கொண்டு உங்கள் நேரம், பெற்றோரின் பணம் என்பவற்றை வீணடிப்பது சரியா? என்ற கேள்வியைத்தான்.

இவ்வாறு சிந்திக்காத நிலமைதான் அனேக காதல்கள் திருமணத்துக்கு முன் தோற்பதற்கும், பல காதல்கள் திருமணத்துக்குப் பின் விவாகரத்து என்ற வடிவில் அவலமாக முடிவதற்கும் காரணமாகும். இங்கே நான் கட்டுரைக்குச் சம்பந்தமில்லாத ஒரு தகவலைச் சொல்ல விரும்புகின்றேன். யாழ்ப்பாணத்திலே நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட

## என் பாகம்

*என் வாழ்வில் பாகமாகி - நீ*
*அப்பாகத்தின் பங்கெடுத்து - உன்*
*பாசத்தின் விளைவுகளை - என்*
*வாழ்விலே புகுத்திவிட வா!*

*- ரீதன் -*

வழக்குகளில் விவாகரத்து வழக்குகள் கணிசமானளவு என்பதாகும். இது முன் என்றுமில்லாதது என்பது உங்களுக்குத் தெரியும். (இக் காரணங்களைவிட விவாகரத்திற்கு பல முக்கிய வேறு காரணங்கள் உள்ளன. அவற்றை இங்கு குறிப்பிடவில்லை) பள்ளிப்பருவத்துக் காதல்கள் எதனடிப்படையில் உருவாகின்றது என்று சற்று நோக்குவோமாயின், அதன் தாம் யாவருக்கும் புரியும். முதலில் பள்ளிப்பருவத்துக் காதல்களுக்கு அடிப் படைத் தகமை எதிர்ப்பாலாரின் அழகு, அதாவது உடல் புற அழகு, மற்றும் அவ்வெதிர்ப் பாலாரின் தற்போதைய பாடசாலைப் பருவத்து பிரபலத் தன்மை மேலும் உடலழகிற்கு அழகு சேர்க்கும் உடை மற்றும் செயற்கை அலங்காரங்கள் இவற்றுடன் மேலும் சில அப்பருவத்துச் சின்னச் சின்ன ஆசைகள். இதனால் எதிர்ப்பாலாரிடம் ஏற்படுகின்ற ஒருவித இனக் கவர்ச்சியே காதலாகின்றது. இக்காதல் எந்த சந்தர்ப்பத்திலும் உளம் சார்ந்த ஆரோக்கியமான உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதில்லை. இதை வாசிக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு அனேகமாக கட்டுரையாளரின் மேல் கோபம் ஏற்படும். இவர்கள் தரும் விளக்கம் தம் காதல் ஒரு தெய்வீகமானது, உண்மையானது, உயர்வானது என்பதாகும். இந்த விளக்கங்களை இவர்கள் தர உந்தியது தென்னிந்திய நாவல்களும் திரைப்படங்களுமே தவிர வேறில. இவர்கள் தம்மைத் தாமே பரிசீலனை செய்து கொண்டால் அவர்களுக்குப் புரியும். ஏனெனில் அனேகமானவர்கள் தம் காதலுக்கு உதாரணமாக திரைப்படப் பெயர்களையும், நடிக நடிகைகளையுமே சுட்டிக்காட்ட முற்படுகிறார்கள். ஈற்றில் இவர்களுக்குச் சொல்வது என்னவெனில் தம்நேரத்தை, பெற்றோர்களினது பணத்தை வீணாக்காது, ஒரு உயர்வு நிலைக்கு உயர்ந்த பின்பு, உங்கள் மிகுதி நேரத்தை, உங்கள் பணத்தினை உங்கள் காதலுக்காகச் செலவழியுங்கள் என்பதாகும்.

சற்று வித்தியாசமான கோணத்திலேயே நாம் பெற்றோர்களுக்குச் சில விடயங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுபடுத்த முயல்வோம். உயர்வு நிலையில் தொழில் புரிகின்ற உங்கள் பிள்ளை, தன்னையறிந்து தன் துணையை தெரிவு செய்து உங்கள் முன் நிறுத்துகையில் நீங்கள் அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிமடுங்கள் என்பதாகும்.

பெற்றோர்களே! முதலில் உங்கள் வாழ்க்கையை ஆரம்பத்திலிருந்து மேலோட்டமாகச் சிந்தியுங்கள். உங்கள் பிறப்பு, கல்வி முயற்சிகள், தொழில் முயற்சிகள், காதல் எண்ணங்கள் (அனேகமாக ஒரு தலைப் பட்சமாகவேனும் இருந்திருக்கும். அல்லது வாழ்க்கையாகக் கூட அமைந்திருக்கும்) திருமணம், இல்லறம், குழந்தைகள் கிடைத்த வேளைகள், அவர்களைச் சிறுபராயத்தில் வளர்த்தபோது பெற்ற கஷ்டங்கள், அவர்கள் கல்வி முயற்சிகள். இன்று அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கையில்..... ஆம் இங்கேதான் பல பிரச்சினைகள் தோன்றுகின்றதா?.

இங்கேதான் நீங்கள் சற்று நிதானிக்க வேண்டியது. உங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஒவ்வொரு படிகளிலும் உங்கள் இலட்சியங்கள் மாறுபடுகின்றன. உங்கள் சிறுபராயத்துக் கல்வி முயற்சிகளின்போது, கல்வியுலகில் ஒரு முத்திரை பதிக்க வேண்டுமென்ற இலட்சியம், அதன் பின் கௌரவமான வேலையெடுத்து நன்றாக உழைக்க வேண்டுமென்ற இலட்சியம். அதே சமகாலத்திலேயே உங்கள் இலட்சியமாக நல்லதொரு வாழ்க்கைத் துணையைப் பெற வேண்டுமென்ற இலட்சியம். இந்த இலட்சியத்துக்காக நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையை அதாவது இலட்சியத் துணையைத் தேடித் தெரிந்து காதலித்திருக்கலாம். அல்லது நல்லதாக அமைய ஆண்டவனைப் பிரார்த்தித்து இருக்கலாம். இவ்வாறு பல இலட்சியங்கள் உங்கள் ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொன்றாக மலர்ந்திருக்கும். ஈற்றில் இச்சந்தர்ப்பத்திலே உருவாக்கப்பட்ட உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை ஏற்படுத்திக் கொடுக்கையில் நீங்கள் உங்கள் விருப்பு வெறுப்புகளுடன், பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமானதாகும்.

ஏனெனில் அவர்கள் மகிழ்ச்சியில் நீங்கள் மகிழ்வதுதான் உங்களது இறுதி இலட்சியமாகும். ஆம், இக்கூற்றை இல்லை என்று இதனை வாசிக்கும் எந்தப் பெற்றோராவது கூறுவீர்களா? இல்லை. நிச்சயமாகக் கூறமாட்டீர்கள். (அப்படிக் கூறின் நீங்கள் மனநிலையில் மாறியவர்களாக இருக்கக்கூடும்).

ஆம், உங்கள் குழந்தையின் எதிர்கால, மகிழ்ச்சியான வாழ்க்கையை பிறர் பார்த்து, நன்றாகச் சொல்லக் கேட்டும், பார்த்தும் பரவசமடைவதே உங்கள் இலட்சியமாகும்.

இதனால் இந்த இலட்சியத்தை நீங்கள் வெற்றிகொள்ள உங்கள் பிள்ளைகளுக்குத் துணையைத் தேடிக் கொடுக்கையில் சற்றுச் சிந்தியுங்கள்.

முதலில் அவர்களது நியாயமான விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பளித்து, அவ்வா-றல்லாது அவர்கள் உண்மையிலே தவறான பாதையில் செல்கையில் உங்கள் அனுபவ அறிவால் ஆதரித்து, அன்பாக அவர்களைத் திசை மாற்றுங்கள்.

உங்கள் வரட்டுக் கௌரவம், பேராசை, பணத்தாசை, அந்தஸ்த்தாசை போன்ற வற்றிற்காக உங்கள் பிள்ளைகள் மீது ஒரு போலி வாழ்க்கையைத் திணித்து, அவர்களையும் தண்டித்து நீங்களும் தண்டனை பெற்றுக் கொள்ளாதீர்கள்.

அவர்கள் சந்தோஷமே உங்கள் இலட்சியம், உங்கள் மகிழ்ச்சி. எனவே உங்கள் பிள்ளைக்கு மனம் புரியாத துணையைத் திணிப்பதை விடுத்து. உங்கள் பிள்ளையின் மனம் பிடித்த, மனதைப் புரிந்த துணையை, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இணைத்து வைத்து அவர்கள் மகிழ்ச்சியில் நீங்கள் மகிழ்ந்திருங்கள். இதுவே உங்கள் இலட்சிய வெற்றிக்கான இரகசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அமர்ந்திருக்கிறாள்.

என்னுடைய அறையிலிருந்து பார்க்க அது மிக நன்றாகத் தெரிகிறது.அறைக்கதவை மறைத்துப் போடப்பட்ட திரைச்சீலை இடையிடையே விலகும்போது அவள் தோன்றி மறைகிறாள்.

# உயிர்ப்பு

கலங்கிய விழிகளில் எதிர்பார்ப்பின் சாயல் அப்பியிருக்க, நானிருக்கும் அறையின் கதவையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் அவள்.
பக்கத்திலே பசை போல ஒட்டியிருந்த சிறுமி அவளுடைய மகளாக இருக்க வேண்டும். விபரம் புரியாத வயதின் இயல்பை வெளிப்படுத்து- பவளைப்போல போய் வருவோரை வேடிக்கை பார்க்கிறாள்.

நேற்று முன்தினம் வரை அந்தப் பெண்ணை எனக்குத் தெரியாது. ஆனாலும், அவளுக்கென்று என்னால் தயார்ப்படுத்தி வைக்கப்பட்ட வார்த்தைகளை எவ்வாறு வெளியேற்றுவது என்பதில் எனக்குள்ளே பெரும் மனப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

திறந்து வைக்கப்பட்ட புத்தகமொன்றின் இதழ்கள் காற்றின் கனமுத்தங்களால் படபடப்பது போல, என் நினைவுகள் மீளத்திரும்புகின்றன.

காலைப்பொழுது தனக்குரிய அத்தனை அம்சங்களும் அடங்கியதாக வழமை போல அழகாகவும், ஆரவாரமாகவும் இருப்பதாக எனக்குத் தோன்றிற்று. மாலை நேரம் மனதுக்கு இதந்தரும். அதுவே அமைதியின் இணையற்ற அற்புத இருக்கை. இருந்தாலும்

**-உடுவில் அரவிந்தன்-**

உற்சாக பானத்தை ஊட்டக்கூடியது காலைதான். யன்னலோடு நின்ற என் மனதில் இந்த ஆரவாரம் அதையே உற்பவித்தது.

நேரே வெளி வாயிலுக்கப்பால் பரபரப்பான வீதி தெரிந்தது. கனத்த புகையைக் கக்கும் வாகனங்களும், போய் வருவோரைச் சிறிதும் இலட்சியம் செய்யாத இராணுவ வாகனங்களும் வீதியை அசுத்தமாக்கின.

இவை எவற்றிலும் புலன்களைச் செலுத்தாது தம்முடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குள் மூழ்கிப் போன மக்களால் அவ்விடம் உயிர்ப்புப் பெற்றது போல் இருந்தது.

உட்புறம் வாய்க்காலோடு அண்டிச் சடைத்திருந்த மல்லிகைக் கொடி நீராடிய பெண்ணைப் போல நின்றது. இரவுக் கலவியின் அடையாளமாக, தான் சூடிய மலர்களை ஆங்காங்கே சிந்தியிருந்தது.

இந்த அழகுக்கோலம் இன்னும் சிறிது நேரத்தில் 'சுத்தமாக்கப்படுதல்' என்ற போர்வையில் அழிக்கப்படப் போகின்றது.

நாள்தோறும் நான் காணுகின்ற 'அழகு அழிதல்' நிகழ்வை எதிர்பார்த்திருந்த என் மனவோட்டத்தின் இடையீடாக அந்தக் குரல் மிக மென்மையாக ஒலித்தது.

"எக்ஸ்கியூஸ் மீ டொக்டர் !"

திரும்பினேன்.

அதீத ஒப்பனை எனக்கு ஏன்? என்பது போன்ற அழகு.

சுமார் முப்பது வயதிருக்கும். அவசரமாக அழுத்தப்பட்ட குங்குமம் அவளுடைய மன உளைச்சலை வெளிக்காட்ட முயல்வது போலிருந்தது.

மூக்கின் நுனிக்குத் தாவ முயலும் கண்ணாடியை ஒற்றை விரலால் நிமிர்த்தியபடி சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுங்கோ"

"டொக்டர் ஸ்ரீதரன்.... அனுப்பினவர்...."

குரலில் பிசிறு தட்டியது.

அவளை உட்காரும்படி சைகை செய்துவிட்டு அமர்ந்தேன்.

என்னுடைய நெற்றியிலிருந்த வினாக்குறியை உணர்ந்தவள் போல தன்னிடமிருந்த கோப்பியை நீட்டினாள்.வாங்கிப் பிரித்து என் கண்களை நிதானமாக நகரவிட்டேன்.

'ரவிக்குமார் 31,இருபாலை' என அடை-யாளமிடப்பட்டிருந்த அந்தக் கொப்பிமிலுள்ள கிறுக்கல்கள் டொக்டர் ஸ்ரீதரனுடையவை

> **மகிமை**
>
> அப்பிள் திருட்டனுக்கு
> ஈர்ப்பு விசையைத் தந்தது
> இதுவே யாழ்-மண்ணில் நிகழ்ந்திருந்தால்
> பனம்பழம் மகிமைபெற்றிருக்கக் கூடும்
> பூவுடன் சேர்ந்து நாரும்
> மணம் வீசும் அதிஸ்டம் இதுவல்லவோ.
>
> -இராமர்-

என்பது எனக்குத் தெரியும். அவர் தன்னுடைய முயற்சிகளைக் குறிப்பிட்டு, மேலதிக பரிசோதனைகளுக்கு என்று எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

நிமிர்ந்தேன்.

என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் விழிகளில் நீரின் பளபளப்புத் தெரிந்தது.

அந்தப் பெண்ணுடன் உரையாடுவது மேலதிக பரிசோதனைகளுக்கு உதவக்கூடும் என்ற நம்பிக்கை மேலிட அவளிடம் வினாக்களைத் தொடுக்க ஆரம்பித்தேன்.

"மிஸிஸ் ரவிக்குமார் ! உங்களைப்பற்றி, உங்கட குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்கோ"

ஒரு கணம் என்னை உற்றுப் பார்த்தவள், பின்னர் யன்னலினூடாக வேறெங்கோ வெறித்தாள். அகன்று விரிந்த வானவெளியில் அதற்கப்பால் எதையோ தேடுவதைப் போன்ற ஏக்கம் அந்த விழிகளில் தெரிந்தது.

"என்னுடைய வாழ்க்கை......! அது காஞ்ச இடத்திலை முளைச்ச எருக்கலை மாதிரி டொக்டர். உறவுத்தொடர்புகள் எதுவும் இல்லாமல் நானே எனக்குள்ள எல்லாவற்றையும் தேடி....! எல்லாம் அவருக்காகத்தான். அவரிட்ட இருந்து கிடைக்கிற அன்புக்கான தவம் போல ஒரு வைராக்கியம்.....! என்னுடைய பெயர் வைதேகி. அவரும் நானும் சின்ன வயதிலை இருந்து ஒரு வகுப்பிலைதான் படிச்சம். அப்ப தொடக்கம் எங்களுக்க ஒரு நெருக்கம். அந்த வயதிலை ஏற்படுகிற கவர்ச்சியாக இல்லாமல்...." அவளுக்குள்ளே கனவு விரிந்திருந்தது போல விழிகளை மலர்த்தினாள்.

"பிறகு....?"

"வழக்கம் போல எதிர்ப்பு. வீட்டிலை அப்பா நெருப்பெடுத்தார். அடிச்சு நொறுக்கினார். திருப்பி அடிக்கமாட்டன் எண்ட ஆதிக்க உணர்வு. பொறுக்கமாட்டாமல் ஒருநாள்......" என்றவள் நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே சொன்னாள்.

"ஓடிப்போனம்......"

"ஓ......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கையில காசில்லை. அங்க இஞ்ச கடன்பட்டு லண்டனுக்குப் போனார். பிறகு மகள்தான் எனக்குத் துணை"

கைக்குட்டை கண்ணீரை ஒற்றியெடுக்க மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

"அப்ப போனவர் அஞ்சு வருஷம் கழிச்சு போன டிசம்பர் தான் வந்தவர்..... கைநிறையக் காசோட! அண்டைக்கு முழுகிப்போட்டு

**கடிதம்**

மௌனத்தில் தெளிவாயும்
வார்த்தையில் இருட்டடிப்பாயும்
மலர்வதுவே காதல் !

மௌனத்தை கலையாமல்
மனசுக்கு மனசுவிடும்
தூரிகை தூதே கடிதம் !

மௌனத்தின் மொழியைவிட
கடிதத்திற்கு ஏது வேலை ?
உணர்வுக்குள் உணர்வை
பரிமாறுவது மட்டுமே !

நாணத்தின் மிகுதி !!!

இயலன்

வெயிலுக்குள்ளால போட்டு வந்தவர். பிடிச்ச காய்ச்சல் விடுகுதில்லை. எல்லோரும் டெங்கு எண்டு பயப்படுத்துகினம்" விம்மினாள்.

வாழ்க்கை என்பது எவ்வளவு விசித்திரமானது! எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, ஒன்றாகி, ஒன்றுக்கொன்றாகி......! இந்த உள்ளுணர்வுகளின் உற்பத்தி மையம் நிச்சயம் ஆச்சரியமூட்டக் கூடியதுதான்.

நான் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்தபடி சொன்னேன்.

"எதுக்கும் சோதிச்சுப்பாப்பம். நீங்கள் நாளைக்குக் கொண்டு வந்து அட்மிட் பண்ணுங்கோ. அதோட உங்களையும் மகளையும் சோதிக்க வேண்டி வரலாம். பயப்படாதையுங்கோ. தொற்றுநோய் எண்டபடியாலை அப்பிடிச் செய்யிறது சில வேளைகளிலை நன்மையைத் தருகுது"

கொப்பியை வைதேகியிடம் திருப்பிக் கொடுத்தேன்.

நன்றிகூறிவிட்டு தளர்ந்த நடையுடன் திரும்பி நடந்தாள். அவள் சென்ற பின்பும் திரைச்சீலை ஆடி அசைந்து அவளால் ஏற்படுத்தப்பட்ட சலனத்தைத் தொடர்ந்த வண்ணமிருந்தது.

என் மனமும் அது போலவே......!

மன அழுத்தத்தைப் பெருமூச்சாக்கியபடி விரிவுரை மண்டபத்தை நோக்கி ஊர்ந்தேன்.

ஃ ஃ ஃ

எண்ண ஓட்டத்தின் நடுவே திரைவிழவே நிமிர்ந்து பார்த்தேன். வைதேகி இப்போதும் அதே வாங்கில் அமர்ந்திருந்தாள். அவளுடைய மகள் தாயின் மடியிலே தலை வைத்து உறங்கிப் போயிருந்தாள். ஆஸ்பத்திரியின் ஆரவாரங்களையும், அழுத்தத்துக்குள்ளாகும் பிரத்தியேக நெடியையும் மீறிய உறக்கம் அந்தச் சின்னப் பெண்ணை ஆட்கொண்டிருக்கின்றது.

எனது இருபது வருட வைத்திய அனுபவத்தில் எத்தனையோ அவலங்களைச் சந்தித்து விட்டேன். இராணுவத்தின் கோரப்பிடியில் அகப்பட்டு நசிந்து சிதைந்து ஆஸ்பத்திரியில் குவிக்கப்பட்ட சடலங்களைக் கண்டு மரத்துப்போன என்னுடைய நெஞ்சில் மென்மையான உணர்வு மெல்ல மெல்ல முகிழ்ப்பதாக உணர்ந்தேன்.

இடிமேல் இடியாகச் சொல்லி வைதேகியை வேதனைப்படுத்த வேண்டியுள்ளதே என்ற காய்விலே துவண்டது என் மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அட்டெண்டன்ற்' நாகராசா மூலம் அவளை உள்ளே அழைப்பித்தேன்.

விரைவாக நுழைந்தவள் உதடுகள் துடிக்க என்னை ஏறிட்டாள். அமர்ந்தவளின் நடுங்கும் விரல்கள் கொண்டுவந்த உணவுப் பொதியில் இறுகப்பதிய முற்பட்டன.

"ரவிக்குமாருக்குச் சாப்பாடு குடுக்-கேல்லைப் போல.....?" நேரடியா விடயத்தில் இறங்குவதைத் தவிர்த்தேன்.

"இல்லை டொக்டர். இனிமேல் தான் போகப்போறன்..... அவருக்கு ஒண்டுமில்லைத் தானே?"

"என்ன சாப்பாடு மிஸிஸ் ரவிக்குமார்?"

"இடியப்பம். அதோட அவருக்கு மிகவும் பிடித்த உருளைக் கிழங்குச் சொதி...... கப்பிப்பால் விட்டு..."

"வெரிகுட்"

"அவருக்கு ஒண்டுமில்லைத்தானே?"

அழுகை உடைவதற்குத் தயாராவது தெரிந்தது. நான் தயாராக வைத்திருந்த வார்த்தைகளை மெல்ல மெல்ல வெளிவிடத் தொடங்கினேன்.

"மிஸிஸ் ரவிக்குமார் நீங்கள் படிச்சவர்....."

வைதேகியின் முகத்திலே இருட் திரை விழுந்தது.

"டொக்டர்.....!"

"உங்கட மிஸ்ரருக்கும்....... உங்களுக்கும் எலிசா ரெற் பொசிற்றிவ். அதாவது எய்ட்ஸ் தொற்றியிருக்கு. அதோட நீங்கள் கர்ப்பமாக இருக்கிறபடியால் வயிற்றிலை இருக்கிற பிள்ளைக்கும்......."

திறந்தவாய் மூடாமல் திகைப்புடன் என்னைப் பார்த்தவள், இடறிய குரலில் மறுத்தாள்.

"டொக்டர் நிச்சயமாக அப்படி இருக்காது. நான் நம்பமாட்டன்........"

"எய்ட்ஸ் ஏற்பட வெவ்வேற காரணங்கள் இருக்கு. இருந்தாலும் அளவுக்கதிகமா நம்பிக்கை வைக்கிறபடியாலதான் சில பெண்கள் ஏமாந்து போகிறார்கள்......"

"இல்லை......!"

அழுகையும் மௌனத்தையும் ஒன்றாகக் கலந்தவள் சட்டென்று மேசையிலே கவிழ்ந்தாள். உடல் குலுங்கியது. அவளுடைய மகள் ஏதும் புரியாதவளாக பயத்துடன் என்னைப் பார்த்து மிடறு விழுங்கினாள். அந்தச் சிறு பெண்ணின் நோக்கில் நான் அவளுடைய அம்மாவை அழவைத்த அரக்கனாக இருக்கக்கூடும்.

நான் சிறிது நேரம் மௌனமாக இருந்தேன்.

வைதேகியின் அழுகை குறைந்து கேவலாகி இறுதியில் விசிப்புக்களுடன் நின்று போனது.

"மிஸிஸ் ரவிக்குமார் !"

அவள் இன்னமும் கவிழ்ந்த நிலையிலே இருந்தாள்.

"நீங்கள் கண்டபடி யோசிக்காதையுங்கோ. கொஞ்சம் முயற்சி செய்தால் உங்கள் இரண்டு பேரினுடைய வாழ்நாளையும் நீடிக்கச் செய்யலாம். உங்கட மகளை நினைச்சாவது......."

மெல்ல நிமிரந்தவள், பக்கத்தில் நின்ற மகளை இழுத்து அணைத்துக் கொண்டாள். வைதேகியின் முகத்தில் ஒருவித தெளிவு ஏற்பட்டிருப்பதைக் காணமுடிந்தது.

தன் மகளுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு சொன்னாள்.

"அவர் லண்டனிலை இருக்கேக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காறியளோட கூத்தடிக்கிறார் எண்டு கதை வந்துது. அப்பாவின்ர கட்டுக்கதை எண்டு நினைச்சன். நான் நெருப்பு மாதிரி இங்க இருக்க அவர் உப்பிடிச் செய்வார் எண்டு எதிர்பார்க்கேல்ல"

பொங்கும் மன உணர்வுகளை வார்த்தைகளாக வெளிப்படுத்துவது அவளுக்கு ஆறுதலாக இருக்கும் என்பதால் நான் எதுவும் பேசவில்லை.

மெல்ல எழுந்தாள்.

"நீங்கள் செய்த உதவியளுக்கு நன்றி டொக்டர். நான் முதல் வேலையாக என்ரை வயிற்றைக் கழுவப்போறன். அது பிறந்து துன்பப்படக்கூடாது. போட்டு வாறன்"

திரும்பி நடந்தாள்.

### உறுதி

விழிகள் ஒரு முறை திரும்பிப் பார்க்கும்
மனம் சட்டென்று இமைகளுடன்– ஒரு
சண்டை நிகழ்த்தி மீண்டும் விழிகள்
என் வழியில் மனமே நீ வாழ்க !

இ-மு

நான் அவளைத் தடுக்கவில்லை.

அவளுடைய விரலை இறுகப்பற்றியபடி அந்தப் பிஞ்சு இலேசான துள்ளலுடன் அடிகளை எடுத்து வைத்தது.

அப்பாவைக் காணப்போகும் சந்தோஷம் அதன் உள்ளத்தில் முகிழ்த்திருக்கலாம்.

என் மனம் பாரமற்றுப் போனதை உணர்ந்தேன். அவர்களுக்கிடையிலான அன்புப் பரிமாறல்கள் நோயினால் ஏற்படும் உளப்பாதிப்பை நிச்சயமாகக் குறைக்கும் என்பதோடு, நோயின் ஆணிவேர் சமூகத்தினுள் ஊடுருவுவதும் தடுக்கப்படும் என்ற நம்பிக்கை என் நெஞ்சை நிறைத்தது.

எழுந்து யன்னலோரம் வந்து வீதியைப் பார்த்தேன்.

தங்களுடைய உறவுகளைப் பார்க்க வருகிறவர்களும், போகிறவர்களுமாக வெளிவாசல் அமளிப்பட்டது. அந்த நெரிசலினூடாக நகர்ந்த இரு உருவங்கள் என்னுடைய கண்களைக் கொழுவி இழுத்தன.

தன் மகளை அணைத்தபடி வைதேகி.

அதற்குள் ரவிக்குமாருக்கு உணவைக் கொடுத்து விட்டு.......!

அது எவ்வாறு சாத்தியம்? வெறுங்கையுடன் போகிறாளே......!

அப்படியானால்......!

திகைப்பு மேலிடத் திரும்பிப் பார்த்தேன்.

அவள் ஆசையாகக் கொண்டுவந்த உணவுப்பொதி என்னுடைய மேசையில் அநாதையாகக் கிடந்தது.

## பாராட்டுக்கள்

இவ் உள்ளம் மலரிலே வெளிவந்திருக்கும் நகைச்சுவைத் துணுக்குகளுக்கான படங்களையும், விவரணப் படங்களையும் கீறியவர்கள் எமது வளர்மதிக் கழக அங்கத்தவர்களான G.கார்த்திக், J.S.மகிந்தன் ஆகியோர். வளர்ந்து வரும் இவ்விரு நண்பர்களின் (மன்னிக்கவும் ஓவியர்களின்) திறமைகள் மேலும் வளர **உள்ளம்** தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மிதிவெடி மௌனம் கலைந்தால்..........

Dr.வே. ஜெகரூபன்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

மிதிவெடிகள் பற்றி பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வைப் பலரும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில், மிதிவெடியினால் பாதிப்பு ஏற்படும்போது செய்ய வேண்டியவற்றையும், செய்யக் கூடாத– வற்றையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மிதிவெடி ஒன்று வெடிக்கும்போது தனி மனிதனோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ பாதிக்கப்படலாம். பொதுவாகக் கால்களே பாதிப்புக்கு உட்படுகின்றனவாயினும், சில சமயங்களில் ஏனைய அங்கங்களும் (உ–ம்: முகம், நெஞ்சு, கைகள்) பாதிக்கப்படலாம்.

ஒருவருக்கு உடலின் ஏனைய பாகங்களில் காயம் இல்லாமல் கால் மட்டும் பாதிப்புக்குள்ளாகும்போது குருதியிழப்பே உயிராபத்தை விளைவிக்கின்ற முக்கிய காரணியாகும். கால்களுக்குக் குருதியை வழங்கும் பெரிய இரத்தக் குழாய்கள் சிதைவடையும்போது 1–3 லீற்றர் வரை குருதியிழப்பு ஏற்படலாம். (வளர்ந்த ஒருவரின் உடலிலுள்ள மொத்தக் குருதியினளவு ஏறத்தாழ 5 லீற்றர் என்பது கவனத்துக்குரியது.)

எனவே குருதியிழப்பைத் தடை செய்வதும், இயலுமானவரை விரைவாக (வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று) குருதியை ஏற்றுவதும் முக்கியமான இரு விடயங்களாகும்.

காயம்பட்டவரை சம்பவம் நடந்த இடத்திலிருந்து அகற்றுதல் பல சந்தர்ப்பங்களில் ஆபத்து நிறைந்ததாகவே காணப்படுகின்றது. (உதாரணம்: கைவிடப்பட்ட காவலரண் பகுதிகள்) சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு புதினம் பார்க்கச் சென்றவர்கள் காயம்பட்ட நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. அதேவேளை சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் செல்ல அஞ்சி காயம்பட்டவரைத் தனியே தவிக்க விட்டு விட்டு யாருக்கும் அறிவிக்காமல் ஓடி ஒளித்த நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

குருதியிழப்பைத் தடை செய்வதற்குச் சுத்தமான துணியினால் காயம் ஏற்பட்ட இடத்தில் இறுக்கமாகக் கட்டவும். இதற்காகக் காயம் பட்டவரின் அல்லது உதவி செய்பவரின் 'சேட்' போன்றவற்றைக் கிழித்துப் பயன்படுத்தலாம். சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட துணிகள் தேவைப்படலாம். காயத்தில் அழுக்குத் துணியினால் கட்டுவதையோ, கிருமித்தொற்று ஏற்படு– வதையோ தவிர்க்கவும். அருகில் கிடைக்கக்கூடிய கயிறு, வயர் போன்றவற்றால் காயம் ஏற்பட்ட இடத்திற்குச் சற்று மேலாக இறுக்கமாகக் கட்டவும்.

ஒருவருக்கு பாதத்தில் காயம் ஏற்பட்டிருப்பின் கணுக்கால் பகுதியில் இறுக்கமாகக் கட்டலாம். அவரின் தொடைப்பகுதியில் இறுக்கமாகக் கட்டி முழுக்காலுக்குமான குருதிச் சுற்றோட்டத்தை 20 நிமிடத்திற்கு மேல் தடை செய்தல் தவறானது. ஏனெனில் தசைகளின் சிதைவு, என்புகளில் ஏற்பட்ட பாதிப்பு முதலியவற்றைக் கருத்தில் கொண்டே வைத்திய நிபுணர்கள் நோயாளியின் காலை துண்டிக்க வேண்டிய இடத்தைத் தீர்மானிப்பர். (உ–ம்) முழங்காலுக்குக் கீழே அல்லது முழங்காலுக்கு மேலே.

காயம்பட்டவர் மயக்கமுற்றிருப்பின் தண்ணீர், கோப்பி அல்லது சோடா கொடுக்கும் தவறான பழக்கம் நடைமுறையிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ரை மடியிலை கிடந்துதான் கடைசியா தண்ணி குடிச்சவன்" என்று நாலுபேருக்குச் சொல்லித் திரிவதைத் தவிர அதனால் வேறொன்றுமில்லை. இது வைத்தியசாலையில் அவருக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கான பொது மயக்க மருந்து கொடுப்பதைப் பாதிக்கும்.

இப்படியான சந்தர்ப்பத்தில் வாயால் குடிக்கவோ, சாப்பிடவோ ஒன்றும் கொடுக்கக்கூடாது. குருதியிழப்பின் காரணமாக நோயாளி "தாகம், தாகம்" என்று கத்தக்கூடும். அவரை உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும். ஏனெனில் அங்கு அவருக்கு சேலைன் ஏற்ற முடியும். அத்துடன் அம்புலன்ஸ் மூலம் சத்திரசிகிச்சை நிபுணர்கள் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்ப முடியும்.

மிதிவெடி ஒன்று வெடித்தால் சம்பவம் நடந்த இடத்திலிருந்து சத்திரசிகிச்சை நிபுணர்கள் உள்ள வைத்தியசாலையை அடைவதற்கான நேரத்தை இயன்றவரை குறைத்தல் வேண்டும். அதனை விடுத்து அவரது உறவினர்களுக்குச் செய்தியைச் சொல்வதில் நேரத்தைச் செலவழிப்பதோ, அல்லது அந்த இடத்தை விட்டுப் பயந்து ஓடி ஒளிப்பதோ, காயம்பட்டவரை சாவின் விளிம்புக்கு இட்டுச் செல்லும்.

## நன்றிகள்

உள்ளம் கதிர்–02 இன் அட்டைப் படத்தினை அழகுற வரைந்து தந்த, மதிப்பிற்குரிய ஓவியர் A.இராசையா அவர்களுக்கு எமது நன்றிகள்.

உள்ளம் சமூகத்தினர்

சில சந்தர்ப்பங்களில் நோயாளி மயக்கமுற்றிருப்பார். அவரைப் பற்றி நன்கு அறிந்தவர் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லாமல் வேறு புதியவரிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குச் செய்தி சொல்லப்போய் விடுவார். இப்படியான சந்தர்ப்பங்களில் வைத்தியர்களின் வேலை கடினமாகின்றது. உதாரணமாக, காயம் பட்டவருக்கு வேறு நோய்கள் இருக்கலாம். (உ–ம்) சலரோகம், அவருக்கு பெனிசிலின் போன்ற சில மருந்துகள் ஒத்துவராமல் இருக்கலாம். அவருக்குக் குருதியுடன் சம்பந்தப்பட்ட வேறு நோய்கள் இருக்கலாம். எனவே இத்தகைய முக்கியமான தகவல்களைக் கொடுப்பதன் மூலம் நோயாளிக்கு நன்மை செய்ய முடியும்.

குருதியிழப்பைக் கருத்திற் கொண்டு வைத்தியசாலையில் அவருக்கு உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டியிருக்கும். உடன் வருகின்ற உறவினர்கள், நண்பர்கள் இரத்ததானம் செய்ய முன்வரவேண்டும்.

மிதிவெடி ஒன்று வெடிக்கும்போது தலை, நெஞ்சு, வயிற்றுப் பகுதிகளில் காயம் ஏற்படுமாயின் அவை சிறிய காயங்களாக இருந்தாலும் உயிராபத்தை விளைவிக்கக் கூடியன. (உ–ம்) மூளை, சுவாசப்பை, இருதயம் போன்ற உறுப்புகளில் பாதிப்பு ஏற்படுமாயின் சடுதியான மரணம் ஏற்படும்.

(உ–ம்) 1. விவசாயி ஒருவர் தோட்டம் கொத்திக் கொண்டிருக்கும்போது மண் வெட்டி மிதிவெடியில் படும்போது.

(உ–ம்) 2. சிறுவன் ஒருவன் மிதிவெடியைக் கையில் எடுத்து இது என்ன விநோதமான பொருள் என்று நசித்துப் பார்க்கின்ற வேளை.

(உ–ம்) 3. குப்பையைக் கொழுத்த அதனுள் கிடந்த மிதிவெடி வெடிக்கும்போது.

இவை பாரதூரமான காயங்களை ஏற்படுத்த வல்லன. காயம்பட்டவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும்.

வைத்திய நிபுணர்கள் அவருக்குத் தேவையான சத்திரசிகிச்சையைச் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ 2–3 கிழமைகள் அவர் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டியிருக்கும். நோயாளி வைத்திய சாலையில் இருக்கின்றபோது அவரை நல்ல முறையில் கவனித்துக்கொள்ள ஒரு பராமரிப்பாளர் தேவைப்படும். நோயாளியின் அன்றாடத் தேவைகளைக் கவனித்துக் கொள்வதும், உளரீதியான பாதிப்பைக் குறைப்பதும் இவரின் கடமைகளாக இருக்கும்.

பாதிக்கப்பட்டவர் நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கு வைத்திய நிபுணரின் சான்றிதழ் தேவைப்படும். வைத்தியசாலையை விட்டு வெளியேறுகின்றபோது, காலை இழந்தவர் ஊன்றுகோல்களின் உதவியுடன் நடக்கக் கூடியவராயிருப்பர். சிறிது காலத்தின் பின் செயற்கைக் கால் பொருத்தி அவர் சாதாரண மனிதர்களைப்போல் நடக்கவும், வாகனங்கள் ஓடவும் முடியும். மிதிவெடியில் கால் இழந்தாலும் அவர்களும் மனிதர்களே. அவர்கள் எதிர்காலமும் பிரகாசமானதே.

## மிதிவெடி வெடித்தால்

காயம் ஏற்பட்ட இடத்தில் இறுக்கமாக சுத்தமான துணியினால் கட்டவும்

உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும்.

வாயினால் ஒன்றும் குடிக்கவோ சாப்பிடவோ கொடுக்க வேண்டாம்.

காலம் தாமதிக்க வேண்டாம்.

**சத்திரசிகிச்சை நிபுணர்கள் உள்ள வைத்தியசாலை**

நோயாளி பற்றிய தகவல்களைக் கொடுத்து உதவவும்.

இரத்ததானம் செய்ய முன்வரவும்.


கல்யாணி கிறீம் ஹவுஸ்
73 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஐஸ்கிறீம் வகைகள்

● சொக்லட் கிறிப்ஸ் ● புருட்சலட் ஐஸ்கிறீம் ● வனிலா ஐஸ்கிறீம் ● நட்ஸ் ஐஸ்கிறீம்
● கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம் ● சொக்லட் ஐஸ்கிறீம் ● ஜெலி ஐஸ்கிறீம்

மற்றும் மட்டன் றோல், கட்லட், பற்றிஸ், கேக், மஸ்கட், பீடா, குளிர்பான வகைகள்.

யாவற்றையும் சுவைத்து மகிழ நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

KALYANI CREAM HOUSE
73 Kasthuriar Road, Jaffna.

# புதிய ஆரம்பம்

கட்டுநாயக்கா விமான நிலையம். இலங்கையிலிருந்து இங்கிலாந்து நோக்கிச் செல்லும் விமானம் இன்னும் சொற்ப நேரத்தில் புறப்பட ஆயத்தமாக இருக்கிறது. ஸ்ரீராம் தனது நண்பன் பிரணவனிடம் பற்பல விடயங்களைப்பற்றி நிறையப் பேசினான். நேரம் ஆகிவிட்டது. அவனது மனைவியும், ஐந்து வயது நிரம்பிய மகனும் விமானத்தில் ஏறி அமரவேண்டும். ஸ்ரீராம் பிரணவனை ஆரத்தழுவிக்கொண்டான். தனது துன்பத்திலும், இன்பத்திலும், கஷ்ட நஷ்டங்களிலும் கை கொடுத்து உதவியவன் இந்தப் பிரணவன்தான். இருவரது கண்களிலும் கண்ணீர் முட்டி நின்றது. ஸ்ரீராம் பல சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்தவன். அவன் டாக்டர் தான். அறுவைச் சிகிச்சை நிபுணன் தான். இறைவன் அவனுக்கு எத்தனை ரண சிகிச்சை செய்திருக்கிறார்? நாற்பத்தி மூன்று வயதாகிய பின்னர், இப்போதுதான் தனக்கென்று ஒரு மகிழ்ச்சியான வாழ்வை ஆரம்பிக்கப் போகிறான். அவன் பதிவுத் திருமணம் செய்து நான்கு நாட்களே ஆகின்றன. அப்படியானால் இந்தப் பிள்ளை யாருடையது? அவன் இனி அவனுடைய பிள்ளைதான். அவன், அவன் மனைவி, பிள்ளை மூவரும் விமானப் படிக்கட்டுகளில் நின்று கொண்டு கையசைக்கிறார்கள். அவர்கள் முகத்தில் சாந்தியும், மகிழ்வும் தாண்டவமாடுகிறது. பிரணவன் பதிலுக்குக் கையசைத்தான். அவர்கள் நூற்றாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தினான். அவர்கள் உள்ளே போய் ஓரிரண்டு நிமிடங்களில் விமானம் மெல்ல மெல்ல வட்டமாக ஊர்ந்து பிறகு மேலே கிளம்பியது. பிரணவனின் மனம் பழைய நினைவுகளில் இலயிக்கிறது.

ஸ்ரீராம் அவனது பால்ய நண்பன். உடுவில் டச்சு றோட்டில் இவர்களின் வீடு அக்கம்பக்கத்தில் இருந்தது. அதனால் சிறுவயதிலிருந்தே சேர்ந்து விளையாடி, சேர்ந்து படித்து, சேர்ந்து சிரித்து, சேர்ந்து அழுது பழக்கப்பட்டவர்கள். ஏதாவது நல்ல பலகாரம் கூட இருவரும் சேர்ந்து பகிர்ந்து உண்டால் தான் சந்தோஷம். ஸ்ரீராம் கஷ்ட நிலையில் இருப்பவன் என்பது தெரியும். அதனால் பிரணவன்-தான் ரகசியமாக அம்மா செய்யும் பண்டங்களில் கொஞ்சம் ஸ்ரீராமுக்குக் கொடுப்பான்.

ஸ்ரீராமின் குடும்பம் பெரியது. தாய் தந்தையரோடு அவன் உட்படப் பத்துப் பிள்ளைகள். அதில் நான்கு ஆண்கள், ஆறு பெண்கள். தந்தையார் உடுவில் முருகமூர்த்தி பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் நல்லவர் தான், அறிவாளியும் கூட. ஆனால் பாழாய்ப் போன குடிப்பழக்கம் அவருக்கு இருந்தது. காலையில் பாடசாலை போகும்போது நிதானத்தோடு போவார். வீடு வரும்போது போட்டு விட்டுத்தான் வருவார். அவரின் வருவாய் அத்தனை பிள்ளைகளை வளர்க்கவும் பற்றாது. குடிப்பழக்கமும் சேர்ந்து விட்டதால் குடும்பம் வறுமையில் வாடியது. தாயோ ஒரு அப்பாவி. புருஷன் அணைத்தால் அதை அன்போடு ஏற்றுக் கொண்டு, அடித்து உதைத்தால் அதையும் பொறுமையோடு சகித்து வாழும் ஒரு பதிவிரதை. பிள்ளைகள் குடித்துவிட்டு வரும் தந்தையைப் பேசுவார்கள். தாயோ புருஷனுக்கு அனுசரணையாகச் சமாளிப்பாள். அவர்களின் வீட்டுப் பின்புறம் தென்னஞ்சோலை. சமையலுக்குப் போக எஞ்சிய தேங்காய்களைத் தாயார் விற்பார். பொச்சு மட்டை, தென்னம் மட்டை விற்று, கிடுகு பின்னி விற்று காசு சேகரிப்பார். ஸ்ரீராமின் மாமா அடிக்கடி வந்து போவார். அவர் தன்னால் முடிந்த அளவு சிறிது பணஉதவி செய்து வந்தார். அதுபோக, தையல் வேலையிலும் தாயார் பிறருக்கு சட்டை தைத்துக் கொடுத்து உழைத்தார். அதனால் எப்படியோ அந்தக் குடும்பம் கடனில்லாமல் எளிமையில் வாழ்ந்து கொண்டிருந்தது. பணத் தட்டுப்பாடு வீட்டில்

**மங்கையற்கரசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், பிள்ளைகள் கல்வியில் வல்லவர்களாக விளங்கினார்கள். பிள்ளைகள் ஏதோ வளர்ந்தார்கள். அவர்கள் அறிவும் கூடவே வளர்ந்தது. மூத்தவனான சயந்தன் A/L தேறிவிட்டு, வீட்டு நிலைமை காரணமாக கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்யத் தொடங்கினான். ஸ்ரீராம் அப்போது O/L படித்துக் கொண்டிருந்தான். மற்றவர்களும் அடுத்தடுத்த வகுப்பு படித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீராம் படிக்கும் நேரம் போக, மீதி நேரத்தில் டியூசன் சொல்லிக் கொடுத்தும் சம்பாதித்தான். வீட்டு நிலைமை நடுத்தர நிலைக்கு உயர்ந்தது.

தந்தையார் குடித்துக் குடித்தே தன் ஈரலைக் கருக்கிக் கொண்டபடியால் வாழ்வு குறுகிப் போயிற்று. ஒரு நாள் அவர் கதை முடிந்து போயிற்று. சயந்தன் வீட்டுப் பொறுப்பை ஏற்றான். ஸ்ரீராம் இரவில் கண்விழித்துப் படித்தான். பிரணவனுக்கும் சொல்லிக் கொடுத்தான். விளையாடும் எண்ணமெல்லாம் எங்கோ போய்விட்டது. இறுதியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஷேட சித்தி எல்லாப் பாடங்களிலும் பெற்றுத்

> எவ்வளவு கேவலப்படுத்தப்பட்டாலும்
> எவ்வளவு ஏளனப்படுத்தப்பட்டாலும்
> எடுத்தசெயலை முடித்தே தீரவேண்டும்
> என்ற மன உறுதியிருந்தால் வெற்றி
> கிடைத்தே தீரும்.
>
> அறிஞர் அண்ணா

தேறினான். 'முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்' என்ற வள்ளுவர் வாக்கின்படி, அவன் வெற்றி பெற்றான். அண்ணன் சயந்தனுக்குப் பரம சந்தோஷம். எப்படியும் ஸ்ரீராமை டாக்டராக்கி விட்டு தான் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தான்.

இது இப்படியிருக்க ஸ்கந்தவ-ரோதயக் கல்லூரியில் பத்தாம் வகுப்புப் படிக்கும்போது அவனுக்கு ஒரு பெண் பிள்ளையிடம் பிரியம் ஏற்பட்டது. அந்தப் பிரியம் காதலாக மலர்ந்து விட்டது. அவனோடு அவளும் அதே வகுப்பில் படித்தாள். கணிதத்தில் இவள் சற்றுக் குறைவானபடியால் இவனிடம் கேட்டுப் படிக்கப்போய், அது காதலில் முடிந்து விட்டது. பொறுப்புக்-களுக்குத் தங்கைமாரை வைத்திருப்பவனுக்கு காதல் ஒரு கேடா? என்று அவன் நினைத்ததுண்டு. ஆனால் அவனும் இளைஞன் தானே. அவனுக்கென்று ஒரு மனம் இல்லாமல் போய் விடாதா என்ன 'அண்ணலும் நோக்கினான் - அவளும் நோக்கினாள்' என்பதற்கிணங்க அவர்கள் ஒருவரோடொருவர் கண்களால் பேசிக் கொள்வார்கள். முறுவலித்துக் கொள்வார்கள். அவர்கள் விரும்புவது அவர்களுக்கு மட்டுமே தெரியும். பிரணவனுக்கு மட்டும் ஸ்ரீராம் சொல்லியிருந்தான். அவர்களே அதைப்பற்றி நேருக்கு நேர் கதைத்துக் கொள்ளவில்லை. ஸ்ரீராம் பெரிய சங்கோஜப் பேர்வழி.. அவள் சுமாரான அழகிதான். மானின் கண்களைப்போல மருட்சியான கண்கள். அவைதான் ஸ்ரீராமைப் பெரிதும் கவர்ந்தவை. சிவந்த நிறம், சுருண்ட கேசம். எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய அமைதியான சுபாவம் அவனுக்குப் பெரிதும் பிடித்திருந்தது. நளினியென்ற அவள் பெயர் அவளுக்குப் பொருத்தமானது தான்.

A/L சித்தியடைந்தது ஒரு புறம் மகிழ்ச்சியாய் இருக்க, நளினியை இனிக் காண்பதற்குக் கஷ்டம் என்ற துயரம் ஸ்ரீராமின் மனதைக் குடைந்தது. பாடசாலையை விட்டு நீங்கும் தினம் வந்தது. ஸ்ரீராமுக்கு நளினியோடு எப்படியும் தன் மனதைத் திறந்து கதைக்க வேண்டும் என்று ஆவலாக இருந்தது. பிரணவனிடம் உதவி செய்யும்படி சொன்னான். நளினிக்குச் சொல்லி அவன் இரகசியமான இடத்தில் அவர்களைச் சந்திக்க வைத்தான். 'நளினி' அவன் குரல் தழுதழுத்தது. அவளுக்கும் கண்கள் கலங்கின. "நளினி, எனக்காகக் காத்திருப்பாயா? ஆறு வருஷம் படிப்பு. பிறகு உழைக்க வேணும். தங்கச்சிமாரையும் கவனிக்க வேணும். எனக்கு என்ன சொல்லுறதெண்டு தெரியேல்ல. ஆறு வருஷம் முடியக் கலியாணம் முடிப்பம். தங்கச்சிமாரையும் கவனிக்க நீர் ஓமெண்டாச் சரி" அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர். "உங்களுக்காக நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை வருஷமும் காத்திருக்கத் தயார். ஆனால் என்ரை அம்மாவும் செத்துப் போனா. அப்பா பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். உங்கட தங்கச்சிமாருக்கு நீங்கள் எதைச் செய்தாலும் நான் குறுக்கை நிற்க மாட்டன். ஆனால் எனக்கும், உங்களுக்கும் கலியாணம் நடக்குமெண்டு நினைக்க கஷ்டமாயிருக்கு. அப்பா Heart Patient என்று உங்களுக்குத் தெரியும். என்னை மேற்கொண்டு படிப்பிக்கவும் அவருக்கு இஷ்டமில்லை. எப்ப என்னைக் கட்டிக் கொடுக்கிறது எண்டு இருக்கிறார். அண்ணா தான் நினைச்சபடி வெள்ளைக்-காரியைக் கலியாணம் முடிச்சு லண்டனிலை இருக்கிறார். அவரை அப்பா கைகழுவிப் போட்டார். நானும் இப்படி அப்படி என்று சொன்னால் அவர் சரி Close தான். நான் ஒருத்திதான் அவருக்கு ஆறுதல். நான் உங்களைக் காதலிக்கிறன் எண்டு சொன்னால் என்ன செய்வாரோ தெரியாது. இனி ஒரு Doctorக்குக் குடுக்கிற அளவு சீதனமில்லை. தங்கச்சிமார் இருக்கும்போது அப்பா இது சரிப்பட்டு வரும் என்று ஏற்றுக் கொள்ள மாட்டார். நீங்கள் Donation எல்லாம் வாங்க முடியும்." "நளினி நான் சீதனத்துக்காண்டி உன்னை விரும்புறன் எண்டு சொல்நீரா?" "அப்படியில்லை உங்கட நிலைமையும் கஷ்டம், எங்கட காதல் கைகூடுவதும் கஷ்டம்." அவள் தேம்பித் தேம்பி அழுதாள். ஸ்ரீராம் அவள் கைகளைப்பற்றி அழுத்தினான். அவனும் கண் கலங்கினான்.

அவன் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது பிரணவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது, நளினி கல்யாணம் முடித்து விட்டாள் என்று. சடுதியில் ஒரு விரக்தியுணர்வு அவனுக்கு வந்தது. ஆனால் நாளாக ஆக இனித் தன் வாழ்வைப் பற்றி அக்கறைப் படுவதில்லை என்றும், தங்கச்சிமாரைக் கரையேற்றுவது தன் இலட்சியம் என்றும் திடங்கொண்டான். தன்னை மறந்து படித்தான். டாக்டரனானான். ஆறு வருடங்கள் உருண்டோடி விட்டன.

அண்ணா சயந்தனுக்கு ஒரு பெரிய இடத்தில் பெண் கிடைத்தது. அவர்கள் இனாம் இரண்டு தங்கைகளுக்கும், தாய்க்கும் கொடுத்தார்கள். கலியாணம் சிறப்பாக நடந்து, அண்ணா கொழும்பு செல்லும்போது ஸ்ரீராமைக் கூப்பிட்டு, 'என் கடமை முடிந்து விட்டது. இனி மிச்சப் பொறுப்பு உன்னுடையது. நான் புறோக்கரிட்டச் சொல்லியிருக்கிறன். நல்ல இடத்தில உனக்குச் சம்பந்தம் கெதியாய் வரும். இனாம் உனக்குக் கொடுப்பினம்தானே. அதை மற்ற இரண்டு தங்கச்சிமாருக்கும் எடுக்கலாம். இனி மற்ற இரண்டு தங்கச்சிமாரை அவை சின்னன் தானே. என்ஜினியருக்குப் படிக்கிற உன்ரை தம்பி பொறுப்பெடுக்கட்டும்' என்று சொல்லி விட்டுப் போனார். ஸ்ரீராமுக்கு எதுவும் பிடிக்கவில்லை. எல்லாம் ஒரு வியாபாரமாகத் தெரிந்தது. தராசுத் தட்டில் தன்னை இருத்திப் பணம் வைத்து நிறுப்பது போல். ஆனால் என்ன செய்வான்? தங்கையர் கண்ணுக்குள் நின்றார்கள்.

ஆசிரியைமார்களான மூத்த இரண்டு தங்கைமாருக்கு, இரண்டு ஆசிரியர்கள் கணவர்களாகக் கிடைத்தனர். அதைத் தொடர்ந்து அவனுக்குக் கலியாணம் முற்றாகி விட்டது. கொழும்பில் ஒரு வைர


கவிதைக்களம்

கவி புனைபவர்களுக்கோர் அரிய வாய்ப்பு, ஆம்! உள்ளத்தின் அட்டைப்படத்தினை உற்று நோக்குங்கள். உங்கள் எண்ணத்தில் பிறக்கும் கவியை நான்கு வரிகளுக்குள் அடக்கி எமக்கு எழுதியனுப்புங்கள் சிறந்த கவிதைகளை அடுத்த உள்ளம் தாங்கி வரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரியின் ஒரே மகள் சரளா வாழ்க்கைத் துணைவியானாள். ஏகப்பட்ட பணம் இனாமாக அள்ளிக் கொடுத்தான் அந்த வள்ளல். பாவம் ஸ்ரீராம். இதற்கு என்ன பின்னணி என்பதை அவன் அப்போது அறியவில்லை. தங்கைமாருக்கு வாழ்வு வந்து விட்டது. அவன் வாழ்வோ அதல பாதாளத்தில்...... சரளா ஒரு அலி என்பதை அறிந்தபோது, இந்தப் பூலோகமே சுழல்வது போல் இருந்தது. கொஞ்ச நாட்களாக விசரனைப் போல இருந்தான். பிறகு யோசித்தான். பணத்துக்கு என்னை நாயை விற்பது போல் விற்று விட்டார்கள். நான் விரும்பியவளும் எனக்குக் கிடைக்கவில்லை. எது எப்படிப் போனால் என்ன? வாழ்க்கை ஆடம்பரமாக இருந்தது. கார், பங்களா, வேலையாட்கள் ஏமாற்றிய மாமனாரின் உபசாரம் வேறு. ஆனால் சீ ! வாழ்வா அது? அண்ணனுக்குச் சொன்னான். அவன் வாயடைத்துப் போனான். ஆனால் நிறையக் காசு வாங்கிக் கடனாளியாகிப் போனார்கள். மற்ற இரண்டு பெண்களுக்கும் கையோடு திருமணமும் நிச்சயிக்கப்பட்டு விட்டது. இனிச் செய்வதற்கு ஒன்றும் இல்லை. யார் இப்படி நினைத்தார்கள்?

ஸ்ரீராம் பிரணவனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதித் தன் நிலைமையைப் புரிய வைத்தான். "எனக்கென்று இனி என்ன இருக்கு" என்று விரக்தியோடு எழுதி இருந்தான். ஒரு வருடம் உருண்டோடி விட்டது. மற்ற இரண்டு தங்கைமாருக்கும் யாழ்ப்பாணத்தில் திருமணம் நடக்க இருந்தபோது, ஸ்ரீராம் யாழ்ப்பாணத்திற்கு வந்தான். அப்போதுதான் தாய்க்கு தனது மனைவி அலி என்பதைச் சொன்னான். அவள் விக்கித்துப் போனாள். இனியென்ன செய்வது? என்று தலையிலடித்துக் கொண்டாள். ஒரு சிறந்த வைத்தியனுக்கு இதுவா நியதி?

யாழ்ப்பாணத்து மண்ணை மிதித்தால் நளினி ஞாபகம் வந்து வேதனைப் படுத்துகிறது என்று இனி யாழ்ப்பாணம் வருவதில்லை என்று நினைத்துக் கொண்டு திரும்பக் கொழும்பு சென்றான். யந்திரம் போல் வைத்திய சேவையில் ஈடுபட்டான். இருந்தாற்போல் பிரணவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. நளினியின் கணவரின் ஸ்கூட்டர், காரொன்றில் மோதி ஸ்தலத்திலேயே மரணமடைந்து விட்டான். பாவம் ஒரு மகனுடன் அவள் விதவையாகி விட்டாள். வாழும் வயது' என்றெழுதியிருந்தான். ஸ்ரீராம் திக்பிரமை பிடித்து இரண்டு நாட்கள் விசரன் போலிருந்தான். 'அவள் பாவம்' என்று மனம் ஓலமிட்டது. மூன்றாம் நாள் மின்னல் போல் அவன் மனதில் ஒரு குரல் ஒலித்தது. 'ஏன் நீ அவளை மறுமணம் செய்யக்கூடாது' என்பதே அது. ஆனால் அதற்கும் தடை இருக்கிறது. அவன் வாங்கிய சீதனம்தான் அது. கொடுக்கப்பட்ட லஞ்சத்தைத் திருப்பிக் கொடுப்பது எப்படி? நீண்ட சிந்தனைக்குப் பிறகு அவனுக்கு முடிவு தெரிந்தது.

**உறுதி கொள்**

விட்டொளிந்து வேதனையை
வீரமுடனிங்கு உறுதிவளர்
சுட்டெரித்த நெருப்பெனநாம்
சுடர்விட்டெழுவோம் உறுதியிலே

-சரயு-

பிரணவனுக்கு ஒரு கடிதம் எழுதினான். உனது கடிதம் கண்டு வேதனைப்பட்டேன். பிறகு ஒரு முடிவிற்கு வந்தேன். சரளாவை விவாகரத்துச் செய்து விட்டு நளினியை மணப்பது என்று அவர்களிடம் வாங்கிய சீதனக்காசைக் கொடுப்பதுதான் பிரச்சினை. நான் நான்கு வருடங்கள் லண்டன் போய் உழைத்து, அவர்களுடைய காசைக்கொடுத்துவிட்டு நான் விரும்பிய காதலியின் கரம்பற்ற ஓடி வருவேன் என்று நளினிக்குச் சொல்லு. நளினி என்னை மணக்கத் தயங்குவாள். மறுமணம், ஊர் உலகம் என்று யோசிப்பாள். நீ அவளை வழிக்குக் கொண்டு வா. வாழ்க்கை வாழ்வதற்கே. ஏன் அது மண்மூடிப் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சரளாவோடு காலம் பூராவும் உப்புச் சப்பற்ற வாழ்க்கை வாழ்வதைவிட, இவளோடு சில காலம் வாழ்ந்து மடிவது மேல். சரளாவை விவாகரத்துச் செய்து விட்டு நான் வேறு பெண்ணை மணக்க முடியும். நளினி என் கண்ணுக்குள் இருக்கிறாள். அவளை விட்டு நான் எந்தப் பெண்ணையும் நினைத்துப் பார்க்கவில்லை என்று சொல், திருமணத்திற்குப் பின் மீண்டும் சில வருஷம் நாம் இலண்டனில் இருந்தால் ஊர்வாய் தானாக மூடிவிடும். பிறகு நளினியோடு திரும்ப நாட்டுக்கு வருவேன்.

லண்டன் போன ஸ்ரீராம் ஆஸ்பத்திரியில் உழைப்பது போக, ஓய்வு வேளைகளில் பெற்றோல் அடித்து, மலசலகூடம் கழுவியும் பணம் சம்பாதித்தான். அவனுக்கு வேண்டிய பணம் கைக்கு வந்தது. காலம் உருண்டோடியது. பணத்தை மாமனார் முன் வீசியெறிந்து தனக்கு விடுதலை கோரினான். தன்னை ஏமாற்றிய கொடுமையைச் சொன்னான். பலத்த இன்னல்களின் பின்னர்தான் அவனால் விவாகரத்துப்பெற முடிந்தது.

பிரணவனின் உதவியுடன் காதும் காதும் வைத்தாற்போல், ஸ்ரீராமும் நளினியும் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். ஸ்ரீராம் தாயிடம் போய் ஆசி வேண்டி நின்றான். இங்கிலாந்து உடன் போவதாகவும் கூறினான். 'இனி எங்களைப் பற்றிக் கவலைப்படாதை. உன் தம்பி பார்த்துக் கொள்வான். நீங்கள் பட்டதெல்லாம் போதும்' என்று தாய் கட்டியணைத்து உச்சிமோந்தாள். அவர்கள் மகிழ்ச்சியுடன் கொழும்பு புறப்பட்டார்கள். நடுத்தர வயதை அடைந்ததும் அவர்களுக்கு இளமை திரும்புகிறது. ஏனெனில் இனித்தான் அவர்களுக்கு வசந்தம். அவர்களின் தலையில் ஓரிரண்டு நரை தெரிகிறது. அது அவர்களுக்குப் பொருட்டல்ல. அவர்கள் காதல் காலம் கடந்தேனும் கைகூடி விட்டது. இனி அவர்களின் இன்பத்துக்கு எல்லையில்லை. அவர்கள் காதல் எல்லாத் தடைகளையும், எதிர்பார்ப்புகளையும் மீறி விட்டது.

பிரணவன் தான் சிந்தனையில் ஆழ்ந்து விட்டதை உணர்ந்து இருக்கையை விட்டு எழுந்தான். "ஸ்ரீராம் நீ கலியுக ராமன்தான். இவ்வளவு துன்பப்பட்டு நீ விரும்பிய பெண்ணையே கைப்பிடித்தாய். வேற்று மனிதனின் குழந்தையையும் உன் குழந்தை என்று அரவணைக்கிறாய். ராம் You are great உனது மனைவி நளினி உண்மையில் கொடுத்து வைத்தவள்" பிரணவன் மெல்ல நடந்தான்.

"பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணுமாயின் பிறிதொரு தாழ்வில்லை
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடுவோமடா'

(பாரதியார்)

## "மனிதம்"

நேற்றைய நினைவுகள்
நிகழ்கால நனவுகளாய்
நாளைய நிஜங்களுமாய்.........
ஆம் !
வாழ்வின் சூட்சுமங்கள்
வடிவம் பெறுகையிலே
மனிதன் எப்படியோ......... ? ஆனால்
மனிதம் திருப்தியுறும்

அளவையூர்ச் சேந்தன்

## காதல் தென்றல்

மெல்ல வந்தென்
மேனியின் அனுவையெல்லாம்
சில்லென உயிர்ப்பித்து
சிங்கார இசையெழுப்பி- அந்த
சுவாசத்துள் வாசமென
சுதியெழுப்பிப் போய்விட்டாய்
சுகராகம் மீட்டிவிட்டாய் !

-ரவிவர்மா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்

- தேவா -

கூதல் காற்று ஊதிக் கொண்டிருந்தது. சாளரத்தின் துவாரம் வழியே மழைச்சாரலுடன் வந்த சில்லெனும் ஸ்பரிசத்தில் தேவிகாவின் நினைவுகள் சிறகடித்தன.

கல்லூரி இசை விழாவில் ஒருமுறை ஒரே மேடையில் ஒன்றாகக் கானமிசைத்தபோது காதல் இராகமும் சேரந்து இழையோடுமென யார் கண்டார்? நாளாக நாளாக அந்த இராகத்தின் இன்பம் மேலும் மெருகு பெற்றது. பிரபஞ்சத்தில் இனிமேலும் பிறப்புக்கள் இருக்குமெனில் அப்போதும் நாம்தான் ஜோடிகளாய் அமைய வேண்டும் என்னுமளவிற்கு......... அப்படியோர் இறுக்கப் பிணைப்பு. அவனின் துக்கத்தை இவள் போக்கி, இவளின் துயரத்தை அவன் நீக்கி மகிழ்ந்த காலம்.

ஆனால் எப்போதும் காதல் பூபாளம் மட்டும் பொழிய முடியுமா? வசந்தின் தந்தையின் பெயரில் வந்தது முகாரி ! உழைப்பிற்குப் பலன் உயர்வாய் இருப்பது போல் வசந்த் மருத்துவபீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதுதான் அவனின் தந்தை வேதாளமாக மாற வழிவகுத்தது. அவனிற்குப் பின்புள்ள இரண்டு தங்கைகளிற்கும் அவன்மூலம் வழிசமைக்க அவர் எண்ணியதிலும் தவறில்லைத்தான். அதற்காக காதலே தப்பென்று அவர் குதித்ததுதான் தவறாகத் தெரிந்தது.

முதலில் விட்டுக் கொடுத்த தேவிகாவின் தந்தையும், வசந்தின் தந்தையின் வீறாப்பைக் கண்டு தானும் வீம்பிற்குக் குதித்தார். இடையில் இவர்கள் இருவரும் பட்டபாடு......... நினைக்கவே கசந்தது.

இப்போது வசந்தன் மருத்துவராகி மேற்படிப்பிற்காய் இந்தியா சென்றுள்ளான். நாளை வருவதாகத் தகவல். அந்த எதிர்பார்ப்பில் தான் அந்த அர்த்தசாமத்திலும் அவள் விழித்து, அந்த நினைவுகளில் ஏங்கி பூரித்திருந்தாள்.

● ● ●

திடிரெனப் பெரீய்ய்......... ய இடி. டெலிபோன் கிணுகிணுத்தது. ஓடிப்போய் எடுத்தாள். மறுமுனையில் வசந்த் ! எப்படி தேவிகா ! இன்னும் விழித்தா இருக்கின்றாய்? பையன் நித்திரையா? சரி, அவனை எழுப்பாதை. மாமாவிடமும் சொல்லு, நாளைக்கு Sure ஆக வருவேன்.......... Ok, Goodnight.

மேகம் மெல்ல வாய்திறந்து மின்னல் புன்னகை பூக்க தேவிகா அவள் கணவனின் குரல் கேட்ட இனிமையில் தூங்கப் போனாள்.

---

**விந்தைப் போர்**

*உரிமைகளைச் சருகாக்கி*
*உறவுகளை நீறாக்கி*
*இறைமையினை மறைப்பித்து*
*இறப்பிற்குப் பிறப்பளித்து*
*தொடர்கதையாய் துன்பமதில்*
*தோய்ந்த பின்பும் தமிழன்னை*
*பிரசவித்த திருக்குழந்தை.......*
*பின்பொருநாள் வென்றுவிடும் !*

—சேந்தன் —

---

**தானும் கட்டளையிடமாட்டான்**
**பிறரின் கட்டளைக்கும்**
**கீழ்ப்படியமாட்டான்**
**அவன் ஒன்றுக்கும் உதவாதவன் !**

-முகமது நபி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லாடல் வாங்'கோ'

மனைவி: என்ன மரியாதை மாமாவிற்கு ! இப்படியெல்லோ மாமன் மருமகன் இருக்க வேண்டும் !!

பண்டிதர்: ஏன்? என்ன நடந்தது?

மனைவி: வாங்கோ, இருங்கோ, போங்கோ என்று.

பண்டிதர்: ஓ அதுவா ! நீயென்ன யாருமே அப்படித்தான் நினைப்பர். வாமாடு, இருமாடு, போமாடு என்பதைத்தான் அப்படிப் பண்பாய்ச் சொன்னேன்.

மனைவி: உங்கள் பண்டிதமும் நீங்களும்.

(கோ-மாடு)

-வடருதூபுலவியனார்-

## 'ஆன்மா'

புனலிற்கும் அனலிற்கும்
பூக்காற்றிற்கும் புயலிற்கும்
வாழ்விற்கும் வீழ்விற்கும்
வசப்படா(து) மோனத்தின்
ஸ்பரிசத்தை மட்டுமே
பயின்றிட்ட ஒரே ஜீவன் !

தத்துவப்பித்தன்


மகாராணி பட்டுச்சோலை

50, பெரியகடை, யாழ்ப்பாணம்.



சுபமுகூர்த்த பட்டுப்புடவைகள்

றெடிமேற் ஆடைகள்

சேட்டிங் சூட்டிங் வகைகளுக்கும்

கைராசியான ஸ்தாபனம்

Maharani paddu Solai

50 GRAND BAZAAR, JAFFNA.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பொது அறிவுப்போட்டி

**நிபந்தனைகள்:**

01. போட்டிக்கு 40 வினாக்கள் தரப்பட்டுள்ளன.
02. 40 வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை தேடல் மூலம் அறியுங்கள்.
03. உங்கள் விடைகளை 28.11.2001 இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.
04. ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதும் ஆகும்.
05. முதல் மூன்று வெற்றியாளருக்குப் பரிசில்களும் மேலும் 10 ஆறுதல் பரிசில்களும் உண்டு.
    - 1ம் பரிசு.ரூ.500.00
    - 2ம் பரிசு.ரூ.300.00
    - 3ம் பரிசு.ரூ.200.00
04. கூடிய போட்டியாளர்கள் அல்லது ஒரே புள்ளிகளைப் பலர் பெறும்போது அதிஷ்ட குலுக்கல் மூலம் வெற்றியாளர் தேர்வு செய்யப்படுவர்.
05. முடிவுத் திகதிக்குப்பின் எமக்குக் கிடைக்கும் விடைகள் நிராகரிக்கப்படும்.
06. போட்டியிடுவோர் தவறாது உள்ளம் போட்டிக் கூப்பனுடன் விடைகளை அனுப்ப வேண்டும். போட்டிக் கூப்பன் அற்றவை நிராகரிக்கப்படும்.
07. வளர்மதிக் கழக அங்கத்தவர்கள், அவர்களது உறவினர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது.
08. மேலதிக நிபந்தனைகள் ஆசிரியர் குழுவினால் தேவைற்கேற்ப இணைத்துக் கொள்ள அதிகாரம் உண்டு.

01. குளோனிங்கில் முதன்முதலில் உருவாகியது "டோலி" என்ற செம்மறியாடு. இச்செம்மறியாட்டினது குட்டியின் (முதல் வாரிசு) பெயர் என்ன?

02. மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு எது?

03. இலங்கையில் வருடாவருமானம் எவ்வளவாக இருப்பின் வருமான வரி கட்டப்படல் வேண்டும்(மிகக் குறைந்த தொகை)?

04. DNA தடயவியலில் (DNA Finger Printing) பயன்படுத்தப்படும் மூலகச் சமதானி யாது?

05. "சர்க்கரைக் கிண்ணம்" என்று வர்ணிக்கப்படும் நாடு எது?

06. இலங்கையில் அதிக கிளைகளைக் கொண்ட தனியார் வங்கி எது?

07. "குண்டலகேசி" நூலின் ஆசிரியர் யார்?

08. சர்வதேச போதை மருந்து எதிர்ப்பு தினம் எத்தினத்தில் கொண்டாடப்படுகின்றது?

09. நடக்க இருக்கும் அடுத்த ஒலிம்பிக் நடைபெறவுள்ள நாடு எது?

10. உலகக் குறியீட்டு வழக்கப்படி "சிவப்பு முக்கோணம்" எதைக் குறிக்கின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ரோட்டரிச் சங்கம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

12. 10 ஆண்டுகள் நிறைவில் கொண்டாடப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?

13. DNAயின் கட்டமைப்பினைக் கண்டறிந்த விஞ்ஞானிகளின் பெயர்களைத் தருக?

14. உலகிலே மிகப்பயனுள்ளதாக அமைந்த "லேசர்"இனைக் கண்டுபிடித்தவர் யார்?

15. WWF இனது விரிவாக்கம் யாது? (இவ்விரிவாக்கம் தற்போது எவ்வாறு பெயர் மாற்றப்பட்டுள்ளது? புதிய பெயர் விரிவாக்கத்தினைத் தருக?

16. REUTERS (ராய்ட்டர்) என்ற பிரபல செய்தி நிறுவனம் எந்த நாட்டில் தலைமையிடத்தைக் கொண்டது?

17. அதிக கொழுப்புச் சத்துள்ள பழம் எது?

18. முட்டையிட்டு குஞ்சு பொரித்துப் பாலூட்டும் விலங்கு எது?

19. அமெரிக்கா மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் 3ஆம் உலகப் போருக்கு வழிவகுக்கும் என்பது போன்ற பல எதிர்வு கூறல்களை பல நூற்றாண்டுகளுக்கு முன் வெளியிட்டவர் யார்?

20. முதன் முதலில் உயிரினங்கள் பூமியினிலே எங்கு உருவானதாகக் கருதப்படுகின்றது?

21. ஒரு வருடத்தில் ஆரோக்கியமான தென்னை மரம் சராசரியாக எத்தனை பாளைகளினை உருவாக்கும்?

22. முஸ்லிம்களால் வெறுக்கப்படுகின்ற, அதனைக் கொன்றால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று அவர்களால் நம்பப்படுகின்ற உயிரினம் எது?

23. யாழ் நூலினை எழுதியவர் யார்?

24. பூக்களில் நீல நிறம் தோன்றுவதற்குக் காரணமான மூலகம் எது?

25. தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளில் காணப்படும் பிரதான உலோக அயன் எது?

26. ஓர்க்கிட் தாவரங்களில் பல்வேறுபட்ட நிறங்கள் தோன்றுவதற்கு காரணமானது எது?

28. எறும்பிற்கு கால்கள் எத்தனை?

29. "செரண்டிப்" என்று இலங்கைக்கு பெயர் சூட்டியவர் யார்?

30. குறிஞ்சிப்பூ எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும்?

31. வரிக்குதிரைகளைப் படங்களிலாவது பார்த்திருப்பீர்கள். இவற்றில் வெள்ளை, கறுப்பு கோடுகள் காணப்படும். வெள்ளை உடலில் கறுப்பு கோடுகளா, கறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் வெள்ளைக் கோடுகளா? உண்மையில் உள்ளன?

32. ஒரு தலைமுறை என்பது எத்தனை ஆண்டுகளைக் குறிக்கும்?

33. 40 அடி உயரமான மனிதன் ஒருவன் இலங்கைக்கு வந்ததாக வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன. இம்மனிதனின் சமாதி என்று சொல்லப்படும் இடம் திருக்கோணமலையில் உள்ளதாகக் கருதப்படுகின்றது. இம்மனிதனின் காலடித்தடம் என்று சொல்லப்படுகின்ற தடம் யாழ்ப்பாணத்தில் ஒரு இடத்தில் உள்ளது. அந்த இடம் எது?

34. 19-20 வது நூற்றாண்டுகளுக்கிடையில் பாலமாக இருந்த தமிழகத்துப் பாரதி போன்ற ஈழத்துத் தமிழ்க் கவிஞர் யார்? எந்த இடத்தைச் சேர்ந்தவர்?

35. இலங்கையின் முதல் தமிழப் பேராசிரியர் யார்?

36. கவிஞர் கண்ணதாசனின் முதல் நாவலே ஒரு வரலாற்று நாவல் அந்நாவல் எது?

37. 72 மேளகர்த்தா ராகங்களுக்கும் சாஹித்யம் அமைத்த ஈழத்துக் கவிஞர் யார்?

38. அமெரிக்காவின் தேசியப் பறவை எது?

39. உலகிலேயே மிகக் குறைவாக வரி விதிக்கும் நாடு எது?

40. அண்மையில் அமெரிக்கர்களுக்கு எதிராக உயிரியல் ரீதியில் நடத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் போரில் பயன்படுத்தப்பட்ட விஷக்கிருமியின் பெயர் என்ன?

*பிரமுகர்:*

ஐயா ! எங்கட ஊரில நான் கொஞ்சம் பெரியாள். ரொம்ப நல்லனான். சனசமூக நிலையத்தலைவராகவும், கோயில் தர்மகர்தாவாகவும், கிராமக்குழுச் செயலாளராகவும், வேற வேற.......(என்றபடி தலையைச் சொறிகின்றார்.

*கட்சித்தலைவர்:*

அட பேந்தென்ன. உங்களுக்குச் சமாதான நீதவான் பதவிதானே வேணும்? வாற தேர்தல்ல எனக்கு நிறைய வோட்டுக்கள் எடுத்துத் தந்தாச்சரி.

*பிரமுகர்:*

ஓமோம் கட்டாயம் வாற தேர்தலில்ல நான் மட்டுமே உங்களுக்கு நிறைய வோட்டுக்கள் போடுவேன்.

-தரன்-

**உன்னைப் பொது அறிவுப்போட்டி**
இதழ்-01

முழுப்பெயர் ..............................

விலாசம் ..............................

பாடசாலை(மாணவராயின்) ..............................

திகதி .............. ஒப்பம் ..............

*இச் சஞ்சிகை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினரால் 96, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள நந்தா கிரபிக்ஸ் (NG) இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org